பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 18 வெள்ளிக்கிழமை (04.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 008

# ஜனாதிபதி - சம்பந்தன் சந்திப்பில்

# சாதகமான சமிக்ஞை எதுவுமில்லை

## கூட்டமைப்பு வட்டாரங்கள் பெரும் அதிருப்தி





கொழும்பு, டிசெம்பர் 4

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அலரி மாளிகைக்கு அழைப்பித்து, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய விடயங்கள் குறித்து அவருடன் பேச்சு நடத்தினார் என அறியவந்துள்ளது.

எனினும், இந்தப் பேச்சுகளின் பெறுபேறு குறித்து கூட்டமைப்பின் உயர் வட்டாரங்கள் அதிருப்தியே தெரிவித்தன. ஜனாதிபதி தரப்பிலிருந்து காட்டப்பட்ட சமிக்ஞைகள் தமிழர் தரப்பின் குறைந்த பட்ச எதிர்பார்ப்பைக் கூட நிறைவு செய்வனவாக அமையவில்லை என்று அவை குறிப்பிட்டன.

(19ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் I, II, III பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான ஆங்கிலம் I, II, பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## சரத்பொன்சேகா இந்தியா சென்றார்

கொழும்பு, டிசெ.4

முன்னாள் இராணுவத் தளபதியும், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று இந்தியாவுக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் தமது பகுதிகளில் அதிகாரத்தைச் செலுத்த மாகாண சபைகளுக்கு அப்பால் அரசியல் அதிகாரம் வழங்குக

### பேராசிரியர் மல்கம் ரஞ்சித் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.4

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாகத் தமது குரலை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அவர்கள் தாங்களே தங்களது பகுதிகளைப் பிரதி நிதித்துவம் செய்யவேண்டும்.

அரசு மாகாண சபைகளை விட அவர்களுக்கு அதிகமாக உரிமை வழங்கவேண்டும். இது தமது பகுதிகளில் தாங்களே அதிகாரத்தை செலுத்தும் நிலையை அவர்களுக்கு வழங்கும்.

இவ்வாறு வலியுறுத்தி உள்ளார் கொழும்புப் பேராயர் மல்கம் ரஞ்சித்.

கிறிஸ்தவ இணையத்தளச் செய்திச் சேவையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-



தசாப்தகால யுத்தத்தில் இரு தரப்புகளும் தவறு செய்ததை ஏற்றுக்கொள்வது முக்கியமானது.

ஒரு தரப்பு புனிதமானது. மற்றைய தரப்பே குற்றவாளி எனச் சொல்வதற்கான தருணம் இதுவல்ல. இரு தரப்பும் குற்றவாளிகள். அவை

(20ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்களுக்குச் செல்ல ஊடகங்களுக்கு அனுமதி

கொழும்பு, டிசெ.4

விசேட வேண்டுகோளின் அடிப்படையில் ஊடகங்கள் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படும் என அனர்த்த நிவாரண மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கு 1,500 கோடி ரூபா செலவாகும்

கொழும்பு, டிசெ.4

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு சுமார் ஆயிரத்து 500 கோடி ரூபா வரை செலவாகும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை நடத்தப்பட்ட தேர்தல்களுக்கான தனித்தனிச் செலவுகளைக் காட்டிலும் இத் தேர்தலுக்கு அதிக பணத்தைச் செலவிட வேண்டி உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் குறிப்பாக எரிபொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களின் விலைகள் பரவலாக அதிகரித்துச் செல்கின்றமையே இதற்கான பிரதான காரணி என்றும் அறியப்பட்டுள்ளது.

இருப்பினும் இத் தேர்தலை நடத்துவ

(20ஆம் பக்கம் பார்க்க)

## அரசுத் தரப்புடன் பேச வருமாறு கூட்டமைப்பினருக்கு அழைப்பு

### 22 எம்.பிக்களுக்கும் தனித்தனிக் கடிதங்கள்

கொழும்பு டிசெ.4

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து அரசுத் தரப்புடன் பேச்சு நடத்துவதற்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இருபத்தியிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அழைப்பு விடுத்திருக்கின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் என்ற முறையில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இது தொடர்பான அழைப்புக் கடிதங்களைக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அலுவலர் உட்பட 4 பேர் கடத்தல்!

கொழும்பு, டிசெ.4

கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட நால்வர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

வத்தளையிலிருந்து கார் ஒன்றில் இராஜகிரியவில் உள்ள பிரபல உணவு விடுதிக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சி மாற்றத்துக்காக பொன்சேகாவை தமிழ்க் கூட்டமைப்பும் ஆதரிக்க வேண்டும்

### மனச்சாட்சிப்படி வாக்களிக்கக் கோரமுடியாது என்கிறார் மனோ கணேசன்



கொழும்பு, டிசெ.4

ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக்காண தமிழ் தேசிய கூட்டமைப்பு இத் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்க வேண்டும் என்பது மனோ கணேசன் எம்.பி கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற தனது கட்சியின் நிலைப்பாட்டை தாம் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வெயிட்ட அறிக்கையிலேயே மனோ கணேசன் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தென்னிலங்கைவாழ் தமிழர்கள் எதிரணி பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். வடக்குகிழக்கு தொடர்பில் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகள் தொடரும்.

தென்னிலங்கை முழுக்க வாழும் தமிழ் மக்கள் ஆட்சிமாற்றத்திற்காக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் சரத் பொன்சேகாவிற்கு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க வேண்டும். (19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு முஸ்லிம்களை மீள்குடியேற்ற ஏற்பாடு

கொழும்பு, டிசெ.4

வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாகப் புத்தளம் மாவட்டத்தில் அகதிகளாக வாழ்ந்து வரும் முஸ்லிம்களை எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் மீள்குடியேற்றம் செய்யவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

சுமார் ஒரு லட்சம் முஸ்லிம் அகதிகள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் இந்தத் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்தினத்தில் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கின்றார். இத்தகவலை மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நல்லூரில் மீளக்குடியமர்ந்தோருக்கு மேசன் பயிற்சி வழங்க ஏற்பாடு

நல்லூர், டிசெ.04.

நலன்புரி நிலையங்களில் இருந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு மேசன் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை கைத்தொழில் அதிகாரசபையின் அனுசரணையில் இடம்பெறும் இந்தப் பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ளும் பயிற்சியாளருக்கு மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்படும் என்றும் பயிற்சிகள் 6 மாதங்களுக்கு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பயிற்சிநெறிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும். பயிற்சியில் கலந்துகொள்ள விரும்பும் ஆர்வலர்கள் நல்லூர் பிரதேச பிரதித் திட்டப்பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஒ-111)

# விடுவிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.04.

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் சொந்த இருப்பிடங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. ஸ்தானிகராலயத்தினர் உணவுப் பண்டம் அல்லாத பொருள்களை விநியோகித்து வருகின்றனர்.

குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கைக்கேற்ப வாளிகள், பேசின்கள், லாம்பு, நைலோன் கயிறு, கோடரி, அலவாங்கு, தண்ணீர்க்கான்கள், தறப்பாள் ஆகியவற்றுடன் தமிழக அரசினால் வழங்கப்பட்ட சமையல் பாத்திரங்கள், பாய்கள் போன்றவையும் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு ரூபா 20 ஆயிரத்திற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் வைப்புச் செய்யப்படுகின்றன.

பதிவுகள் அனைத்தும் சாவகச்சேரி சிவன் கோயிலடியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஒ-207)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## 2010 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் உற்பத்தியாளர்கள் ஒப்பந்தகாரர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் 2010.03.31 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### பொருள்கள்

01. காகிதாதிகள், எழுது பொருள்கள்.
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரி)
03. மேல்நாட்டு மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள்
04. சித்த மருத்துவ மருந்துகள்
05. கோலவுடைத் துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணி வகைகள்
06. பாதணிகள், மழைக் கவசம் மற்றும் தோல் பொருள்கள்
07. கட்டடப் பொருள்கள் (சீமெந்து, ஓடுகள்) முதலியன
08. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன
09. கற்கள், மணல்கள்
10. நீர்வழங்கும் பொருள்கள், பி.வி.சி குழாய்கள் முதலியன
11. வாகன இயந்திர உதிரிப் பாகங்கள், துணை உறுப்புக்கள்
12. மின்சார இயந்திரப் பொருள்கள், மின் கருவிகள்
13. விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்
14. எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
15. இரும்புப் பொருள்கள்
16. பனைமரங்கள், சலாகைகள்
17. நூலகங்களுக்குரிய நூல்கள்
18. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன
19. தீராந்திகள், நீப்பைகள், பலகைகள்
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக் கயிறு முதலியன
21. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமி நாசினிகளும், மருந்துகளும்
22. கணனி, கணனிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோ பிரதி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரங்களுக்கான உதிர்ப்பாகங்கள் (Canon, Sharp வகைகள்) வழங்கல்

### சேவைகள்

01. அச்சிடுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்துதல்
03. மோட்டார் வாகனம் திருத்தம்
04. ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
06. ஏற்றியிறக்கும் வேலைகளுக்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல்
07. சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்
08. கோலவுடை தைத்தல்
09. மின் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்
10. மின் கலங்களுக்கு மீள மின் வலுவூட்டல்
11. றப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்
12. வாகனங்கள் சேர்வீஸ் செய்தல்
13. கணனி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம் சேர்வீஸ் செய்தல்
14. புகைப்படம், வீடியோ எடுத்தல்

கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள், சேவைகள் 2010' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

'வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்' என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை யாழ்.மாநகர சபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 500/= உடன், மேலதிக 'வற்' வரி ரூபா 75/= உட்பட ரூபா 575/= பெறுமதியான காசுக் கட்டளை அல்லது தபால் கட்டளை' ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்' என்ற பெயரிற்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். பணமாக செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக் கிளையில் நேரடியாக வேலை நாள்களில் செலுத்த முடியும்.

கூறு விலைகள் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து கோரப்படும். கோரப்படும் போது கூறுவிலைகள் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்கள்/சேவைகள் வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/சேவைகள் வழங்கும் எந்த ஒரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப்புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

திருமதி [illegible]
மாநகர முதல்வர்

திகதி: 03.12.2009 (சி/562917) மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## மாணவர் கௌரவிப்பும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், டிசெ.04.

பருத்தித்துறை தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையின் புலமைப் பரிசில் மாணவர் கௌரவிப்பும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் கா.ராமஜெயம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா. ரகுநாதனும் கலந்துகொள்வர். திருமதி நந்தினி உதயகுமார் பரிசில்களை வழங்குவார்.

(ஒ-7)

SHAMROCK
சுச்சமோட்டை, யாழ்
புதிய கல்வி ஆண்டு 2010
ஆரம்பம்
05.12.2009
sat 8 am
1.Gr1 முதல் O/L வரை
2.Eng.med: 6 To 11
3.Eng.lit : 10. 11
4.I.C.T: (செய்முறையுடன்)
5. புலமைப்பரிசில் Gr5 (பயிற்சிப் பரீட்சைகளுடன்)
A/L 2010 Day
கலை, வர்த்த, கணிதப் பிரிவுகள்.
(சி/562911)

## நீங்காத நினைவுடன் ஆண்டு மூன்று



### சிவசாமி ரஞ்சன்

(முன்னாள் ஊழியர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)

திதி: 04.12.2009

அன்னை மடியில்
10.05.1959

ஆண்டவன் அடியில்
07.12.2006

உள்ளத்தை எம்மிடம் தந்துவிட்டு
ஊமையாக உறங்குவதை எங்கள்
மனம் இன்றுவரை ஏற்கவில்லை
உங்கள் சுவடுகள் எம்மனதில்
பதிந்து விட்டது அழியாமல்
நீங்கள் காட்டிய பாதையில்
சென்றிடுவோம்
மாறுமா உங்கள் நினைவு
மறையுமா உங்கள் முகம்

11/5, செம்மணி வீதி, நல்லூர். (92823) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் அமிர்தலிங்கம்



விக்னேஸ்வரா வீதி, தையிட்டி தெற்கு, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் விதானை ஒழுங்கை, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அமிர்தலிங்கம் 02.12.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராமாட்சிபிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் இராசாதேவியின் அன்புக் கணவரும் துரைச்சாமி, காலஞ்சென்ற இராசையா மற்றும் வேலாயுதபிள்ளை, தங்கம்பிள்ளை, சிங்கராஜா ஆகியோரின் தம்பியும் வல்லிபுரத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2009) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விதானை ஒழுங்கை, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (92832)
தகவல்: மனைவி, சகோதரர்கள்.

## கனகரத்தினம் சந்திரசேனன் (சந்திரன்)
(முன்னாள் ஊழியர், கொலோனியல் மோட்டர்ஸ்)



நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகரத்தினம் சந்திரசேனன் நேற்று (03.12.2009) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் (வைரக்கனகர்) - மரகதம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - திரவியம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் (பெற்றம்மா) அன்புக் கணவரும், பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி (சோதி), மற்றும் தங்கேஸ்வரி, புவனேஸ்வரி, சறோஜினி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் சற்குணலிங்கம், செல்வராணி ஆகியோரின் சகோதரனும், மைதிலி (கனடா), குமுதா (லண்டன்), விக்னா (சுவிஸ்), தர்சினி (கனடா) ஆகியோரின் தந்தையாரும், சுகுமார் (கனடா), மனோகரன் (லண்டன்), சிவோமியா (சுவிஸ்), மலர்ராஜ் (கனடா) ஆகியோரின் மாமனாரும், குபேந்திரன், அரியேந்திரன், ஜெயராணி, ஜெயாஈஸ்வரி, ஜசிந்தா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-12-2009) வெள்ளிக்கிழமை இல, 49, நாயன்மார் வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.49, நாயன்மார் வீதி, நல்லூர். (92836)
தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி தில்லையம்பலம் நாகம்மா



தலையாழி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் நாகம்மா 01.12.2009 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் துரைசிங்கம், ஜெயபாலசிங்கம்(கனடா), துரைராஜசிங்கம் (பிரான்ஸ்), மீனலோஜினி(சுவிஸ்), துரைரட்ணம் (ஜேர்மனி), சறோஜினி (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலாவதி, மீனலோஜினி(கனடா), செல்வநாயகி (பிரான்ஸ்), மகாலிங்கம்(சுவிஸ்), நிரஞ்சினி(ஜேர்மனி), கிருஷ்ணதாஸ்(சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 4மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தலையாழி வீதி, யாழ்ப்பாணம். (92831)
தகவல்: பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கூட்டமைப்பினருக்கு மனோகணேசன் நாசூக்காக வைத்துள்ள 'செக் - மேட்'!

ஜனவரியில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாட்டை மனோகணேசன் எம்.பி. தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி வெளிப்படையாக அறிவித்து விட்டது.

இந்த விவகாரத்தில் இரண்டு முக்கிய விடயங்களை அது குறிப்பிட்டிருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

ஒன்று-வடக்கு, கிழக்குக்கு வெளியே தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தொடர்பில் தனது கட்சியின் வழிகாட்டல் என்னவென்பதை அக்கட்சி வெளிப்படையாகக் கூறியிருப்பது.

அடுத்தது - வடக்கு, கிழக்கின் ஐந்து பிரதான தேர்தல் மாவட்டங்களான யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகியவற்றில் - அதாவது, தமிழர் தாயகப் பிரதேசத்தில் - வாழும் தமிழ் மக்கள், இந்தத் தேர்தல் தொடர்பில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது சம்பந்தமான தனது நிலைப்பாட்டை அக்கட்சி வெளிப்படுத்தியிருக்கின்றமை.

தென்னிலங்கை முழுக்க வாழும் தமிழ் மக்கள் தற்போதைய ஆட்சியை மாற்றுவதற்காக எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக நிறுத்தப்படும் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்க வேண்டும் என அக்கட்சி அப்பட்டமாக - வெளிப்படையாக - கூறியிருக்கின்றது.

''போர் முடிந்துவிட்டது. ஆனால் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் முடிந்துவிடவில்லை.'' என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள மனோகணேசனின் கட்சி, ''சரத் பொன்சேகாவுக்கு வாக்களிப்பது தமிழர்களின் வரலாற்றுக் கடமை அல்ல. அது நாம் வாழுகின்ற காலத்தின் கட்டாயம்'' - என்பதை வெளிவெளியாகவே சுட்டிக்காட்டியிருப்பது தமிழர்களை ஆழமாகச் சிந்திக்க வைக்கும் விடயமாகும்.

இந்த அரசை மாற்றவேண்டும் என்பதற்கான தனது கட்சியின் வாதத்தை அது தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

அதேசமயம், இந்தத் தேர்தலில் பங்குபற்றாமல் இருக்கும்படி தமிழ் மக்களைக் கோருவதோ அல்லது மனச்சாட்சிப்படி வாக்களிக்கும்படி மக்களை வழிப்படுத்துவதோ தமிழ் மக்களின் தலைவர்களின் போக்காக இருக்கக்கூடாது என்பதையும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அரசியலில் மக்கள் தலைவர்கள் என்பவர்கள் தலைவராக (Leaderஆக) இருக்கவேண்டுமே தவிர முக்வராக (Dealerஆக) இருக்கக்கூடாது என்று அடிக்கடி சுட்டிக்காட்டுபவர் மனோ கணேசன் எம்.பி.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் திருப்புமுனைக் கால கட்டத்திலே தமிழர்களின் தலைவர்கள், தமது மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை வழிப்படுத்தி வழிகாட்டும் தலைவர்களாக - Leaders ஆக - இருக்க வேண்டுமே தவிர, அவர்கள் ஓடி ஒளிந்து கொள்ள முடியாது.

மனச்சாட்சிப்படி - தமது சொந்த விருப்பத்தின்படி - வாக்களியுங்கள் என்று கூறிவிட்டுத் தம் மக்களை வழிப்படுத்தும் தமது கடமையிலிருந்து தலைவர்கள் தப்பிவிட முடியாது என்று மனோ கணேசன் எம்.பி. கூறியிருக்கின்றமை தமிழ்த் தலைவர்களுக்கு - குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு-வைக்கப்பட்டுள்ள நல்ல சூடு எனக் கருதலாம்.

வடக்கு, கிழக்குத் தமிழ்மக்கள் இந்தத் தேர்தலில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது தொடர்பில் தனது கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேசி முடிவு செய்யும் என்று மனோகணேசன் குறிப்பிட்டிருக்கின்றார்.

இது, வெளிப்படைக்குப் பார்த்தால், வடக்கு, கிழக்குத் தமிழர்களை வழிப்படுத்தும் தகைமையும், தலைமையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு உள்ளதாகக் கருதி, அதனை அங்கீகரித்து, ஏற்று ஒப்புக்கொண்டு, கூட்டமைப்புக்கு மதிப்பளிக்கும் விதத்தில் மனோகணேசன் நடந்து கொள்கின்றார் என்றே தோற்றும்.

ஆனால், உண்மை அப்படியல்ல. தமிழ்க்கூட்டமைப்புக்கு - ஓடி ஒளிய முடியாமல் - நல்ல 'செக் - மேட்' காய்நகர்த்தலை முன்வைத்திருக்கிறார் மனோகணேசன் என்பதே யதார்த்தமாகும்.

'வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களைப் பார்த்து, ஆட்சியில் இருக்கும் இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதுதான் உங்களின் முதல் பணி என்பதைத் துணிச்சலுடனும் வெளிப்படையாகவும் நான் கூறிவிட்டேன். அதற்கான வழியில் நடக்கும்படி நான் அவர்களை வழிப்படுத்தி அதன்மூலம் அந்த மக்களுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு எனக்கு உண்டு என்பதைக்காட்டி அதை நிறைவேற்ற முன்வந்துள்ளேன். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இது விடயத்தில் வெளிப்படையாகவே உங்கள் நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தி, உங்கள் மக்களை வழிப்படுத்த நீங்கள் தயாரா?' - என்று தமிழ்க் கூட்டமைப்பைப் பார்த்து கேள்வி எழுப்புபவர் போல மனோகணேசனின் அறிவிப்பு அமைந்திருக்கின்றமை கண்கூடு.

இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் கூட்டமைப்பினர்?

தேர்தலைப் பகிஷ்கரிக்கும் முடிவு உடன்பாடானது அல்ல. மனச்சாட்சிப்படி வாக்களிக்கும்படி மக்களை விட்டு விட்டு ஒதுங்குவது தலைமைத்துவமே அல்ல - என்றெல்லாம் மனோகணேசன் சுட்டிக்காட்டியிருக்கும் பின்னணியில் தமிழர் தலைமைக்கு எஞ்சியுள்ளவை மூன்று தெரிவுகள்தாம்.

ஒன்று - எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு வாக்களிக்க மக்களைக் கோருவது. அடுத்தது - ஆளும் கட்சிக் கூட்டணிக்கு வாக்களிக்கக் கோருவது. மூன்றாவது - பொது தமிழ் வேட்பாளரை நிறுத்தி வாக்களிக்கக் கேட்பது.

இதில் எதைச் செய்ய முன்னரும் ஒருவிடயத்தில் தங்கள் நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படையாகக் கூறியாகவேண்டும்.

அது - தற்போதைய ஆட்சி நீடிப்பதற்கு அனுமதிப்பதா? அல்லது அதை நீக்கத் துணிச்சலாக நடவடிக்கை எடுப்பதா? - என்பதுதான். இதில் பதில் தராமல் கூட்டமைப்பு நழுவ முடியாது; தப்ப முடியாது. அத்தகைய இக்கட்டை மனோகணேசன் 'செக் - மேட்' போல வைத்திருக்கும் இந்தக் காய் நகர்த்தல் ஏற்படுத்தியுள்ளது.

கூட்டமைப்பின் பதில் என்ன? இக் கேள்விக்குப் பதில்தரும் திராணி கூட்டமைப்பின் எந்தத் தலைவருக்காவது உண்டா?

# ஜனாதிபதித் தேர்தலுக்குமுன் கிளிநொச்சியில் மக்களை குடியமர்த்தினால் அங்கு வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படும்

## இல்லாவிட்டால் அவர்கள் வாக்களிப்பதற்கு மாற்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.4

எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கிளிநொச்சியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டால் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்கள் அங்கு நிறுவப்படும்.

குறித்த திகதிக்கு முன்னர் மக்கள் அங்கு மீள்குடியமர்த்தப்படாதபட்சத்தில் அவர்கள் தற்போது வசிக்கும் இடங்களில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தகவலை யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தற்போது நலன்புரி நிலையங்களிலும், உறவினர்களுடைய வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

இந்த வாக்காளர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் தமது சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்பட்டால் அங்கு வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். அவர்கள் கிளிநொச்சியில் மீள்குடியமர்த்தப்படாவிட்டால் தற்போது அந்த மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் கொத்தணி வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கும் யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது-என்றார்.

இதேவேளை- எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கிளிநொச்சித் தேர்தல் தொகுதியில் 90ஆயிரத்து 811 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (50-9)

# வெங்காயத்தின் விலை திடீரென அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4

குடாநாட்டுச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துக் காணப்படுவதாகப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் போன்ற பிரதான சந்தைகளிலேயே வெங்காயத்தின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

சின்ன வெங்காயம் கிலோ 110 ரூபா முதல் 120 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தரைப்பாதையூடாக பெருமளவான வெங்காயம் தென்பகுதிக்குஅனுப்பப்பட்டு வருவதை அடுத்தே இவ்விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

# மண்டைதீவுப் பகுதிக்கு விரைவில் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 4

மண்டைதீவுப் பகுதிக்கு குடிதண்ணீரை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டு வருகின்றது.

சாட்டிப் பகுதியில் இருந்து பவுசர்கள் மூலம் தினமும் இந்தப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்குவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக வடிகாலமைப்புச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பகுதியில் வசிக்கும் மக்களும் தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெற்றுத்தருமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(50-224)

# அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம், டிசெ.4

நலன்புரி நிலையங்களில் விடுவிக்கப்பட்டு இம்மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணிதொடக்கம் அந்தந்தப் பாடசாலை அதிபர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை பரீட்சார்த்திகளும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை யாழ். கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (50-201)

# கொழும்பிலுள்ள யாழ்.வாக்காளர்களும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க ஏற்பாடு

## தேர்தல் ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.4

இடம்பெயர்ந்து கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வசிக்கும் யாழ்.தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது தாம் வசிக்கும் பிரதேசங்களில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணையாளர் தயானந்த திசாநாயக்க அறிவித்துள்ளார்.

யாழ்.தேர்தல் மாவட்டத்துக்குரிய வாக்காளர்கள் தமது வாக்காளர் இடாப்புகளைப் பார்வையிடுவதற்கு வசதியாக வெள்ளவத்தையில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை முதல் வாக்காளர் இடாப்புகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க விரும்புகின்ற வாக்காளர்கள் அதற்குரிய விண்ணப்பப்படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்று தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(04-9)

# 1,000 தொலைபேசி இணைப்புக்களை ஒரு மாதத்துக்குள் வழங்க நடவடிக்கை

## ரெலிக்கொம் நிறுவன அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ்.மாவட்டத்தில் மேலும் 1,000 கேபிள் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு மாத காலத்தினுள் இந்த இணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 500 இணைப்புக்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. உடுவில், மல்லாகம், புன்னாலைக் கட்டுவன், ஊரெழு, குருநகர் ஆகிய பகுதிகளுக்கே இந்த இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டமாக நெல்லியடி மற்றும் நல்லூர் பகுதிகளுக்கு இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன-என்றார். (50-14)

# யாழ்.வரும் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு வலி.வடக்கு மக்கள் சார்பில் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.4

எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் வலி. வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக்குழுவைச் சேர்ந்த ஐந்துபேர் கொண்ட பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் ஜனாதிபதிக்கு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மூலமாக அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு மீள்குடியமர்வு தொடர்பாக ஜனாதிபதி நேரடியாகக் கவனம் செலுத்தி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை விடுக்கும்படி கோரியுள்ள இக்குழுவினர் அதற்கான சில வழிகாட்டல் கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பான களநிலைமைகளை நேரடியாக விளக்கவும் ஜனாதிபதியின் ஆலோசனைகளைப் பெறவும்தாம் விரும்புவதாக அவர்கள் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளனர். (ப-04)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 19 05.12.2009 சனிக்கிழமை |
| திதி: | திருதியை மு.ப.08.27 வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் மு.இ.10.39 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |
| சங்கடஹர சதுர்த்தி | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடை மழையால் அவதியுறும் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.4

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நலன்புரிநிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மக்களில் பலர் தற்காலிகக் கொட்டில்களிலும், தமது உறவினர்களின் வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

இதில் தற்காலிகக் குடிசைகளில் வாழுகின்ற மக்கள் தற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடை மழை காரணமாக குடியிருப்பதற்குச் சீரான வீடுகள் இன்றிப் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே தமது வாழ்விடத்தைத் தொலைத்த இந்த மக்களுக்குரிய வீடமைப்பினை மேற்கொள்வதற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டுமென்று பாதிப்புக்குள்ளான மக்கள் எதிர்பார்க்கின்றனர். (04-9-86)

# யாழ்/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்

## பழைய மாணவர் சங்கம்

எமது பாடசாலையுடன் இணைந்த பதினாறு பரப்புப் காணியை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளோம்.

எனவே பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர் விரைந்து தங்களால் ஆன உதவியை 25/12/2009 இற்கு முன் வர்த்தக வங்கி, சாவகச்சேரி வங்கிக் கணகிலக்கத்திற்கு (8126016003) அல்லது நேரடியாக வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

(92820)

# ஓர் ஆண்டு நினைவலைகள்




## அமரர் சரவணை கந்தையா 04.12..2009

மலர்வின் 19.07.1936 — மறைவின் 15.12.2008

அன்புக்கோர் தெய்வமாய்
ஆற்றலுக்கோர் உத்தமராய்
பண்புக்கோர் இலக்கணமாய்
பலருக்கு இனியவராய்
கொடைக்கு சிறந்தவராய்
எங்கள் வாழ்க்கையை வசந்தமாக்கி
எமை ஊர்போற்ற வாழவைத்த அன்புத் தெய்வமே
பல்லாண்டு வாழ்வீர் பாரினில் என்றிருந்தோம்
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் மூழ்க வைத்த
ஆருயிர் அணைந்து ஓர் ஆண்டு ஆனதே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஐயா
தாங்கமுடியவில்லையே எங்களால் ஐயா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
விநாயகப் பெருமானை வேண்டிநிற்கின்றோம்.
உங்கள் பிரிவால் துயரும்

தபாற்கந்தோர் வீதி,
பெருங்குளம், சாவகச்சேரி. (சி/562914) குடும்பத்தினர்

# இதய அஞ்சலி



எங்கள் தேவஸ்தானத்தின் பெருந்தலைவராக விளங்கிய அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நன்மதிப்புக்குரியவரும், எங்கள் தேவஸ்தான வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கிய பிரபல தொழில் அதிபர், சட்டத்தரணி-கல்விமான் - காரைநகர் மைந்தன்

## உயர்திரு.S.K பொன்னம்பலம்

*(உரிமையாளர், அசோக் ஹொட்டல், யாழ்ப்பாணம், ஸ்ரார்லைன் பிரின்டேர்ஸ், யாழ்ப்பாணம்.)*

அவர்களின் பிரிவு குறித்து எமது கண்ணீர்க் காணிக்கைகளை செலுத்துகின்றோம்.

அன்னாரின் ஆத்மா என்றும் துர்க்கா தேவியின் திருவடியில் ஆறுதல்பெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமகள் அழுத்தகம்,
பிரதான வீதி,
சுன்னாகம். (92805)

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

# மரண அறிவித்தல்

## சின்னக்குட்டி சின்னத்தம்பி (குட்டியர்)



மந்துவிலைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி சின்னத்தம்பி (குட்டியர்) 01.12.2009 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், கனகலிங்கம் (சுவிஸ்), திலகேஸ்வரி (மீசாலை வடக்கு), யோகேஸ்வரி (பிரான்ஸ்), சறோசாதேவி (பிரான்ஸ்), அமரர் புவனேஸ்வரி, கமலேஸ்வரி (சுவிஸ்), றஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவயோகம், மகாலிங்கம், நாகராசா, அற்புதநாதன், கௌரிசங்கர், கயன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வேலாயுதபிள்ளை, காலஞ்சென்ற பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மாவதி, சிவஞானம், இராசலிங்கம், சரஸ்வதி, காலஞ்சென்ற அன்னம்மா, மற்றும் துரைச்சாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், விதுர்சிகா, துசாந், செந்தில்குமரன், தினேஷ், சுரேஷ், திவ்வியா, சரண்யா, கம்சிகா, அபிஷன், அபிநயன், அக்கயன், அட்சிகா, அச்சுதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (06.12.2009) ஞாயிற்றுக்கிழமை ந.ப 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.மகாலிங்கம் (திலகம், மருமகன்)
தொ.பேசி: 021 300 2887/ 0777448134

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (சி/562915)

# பரீட்சைப் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் கூட்டம்

ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக்கான பிராந்திய சேகரிப்பு நிலையம், யாழ்ப்பாணம்- 11 இற்குட்பட்ட வலிகாமம் கல்வி வலயம், வடமராட்சி கல்வி நிலையம், கோப்பாய் கல்விக் கோட்டம் என்பவற்றைச் சேர்ந்த பரீட்சைக் கடமையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப. 9.00 மணிக்கு யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடை பெறும்.

பரீட்சைக் கடமைக்கு நியமிக்கப்பட்ட இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் தவறாது உரிய நேரத்திற்கு இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ)

# ஏசியன் கல்வி நிலையம் மீசாலை

கல்வியாண்டு 2010
தரம் 01 முதல் O/L வரை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
05.12.2009 சனிக்கிழமை பி.ப 3 மணி

(92817)

# Engineering Drawing & AutoCAD

A/L 2009

பரீட்சைக்கு தோற்றி பொறியியற் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விசேட Diploma in Engineering Drawing & AutoCAD பிரிவு ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

ஆரம்பம்
**10-12-2009** காலை 10.00 மணி

INSTITUTE OF INFORMATICS STUDIES
100,Clock Tower Road,Jaffna.
T.p 021 222 2831 Fax :021 222 6933

# 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 ★ 12 ★ 1924



மறைவு 04 ★ 12 ★ 1985

## அமரர். E.K . சண்முகநாதன்

*(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)*

எம்மை நீங்கள் பிரிந்து சென்று
மூவெட்டு ஆண்டுகள் ஓடினாலும்
ஓயாது உம் நினைவுகள்-எம்
மனதைவிட்டு!
தலைவனின் பாசத்தையும்
தந்தையின் நேசத்தையும்
தவறாது செய்து சென்ற-உமக்கு
என்றும் நாம் தலை வணங்குகின்றோம்.

நினைவுகளுடன்
மனைவி , மக்கள்,
மருமக்கள் , பேரப்பிள்ளைகள்.
[லண்டன்]

தாரங்கி,
137, பலாலி வீதி,
திருநெல்வேலி.

(92828)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் அருளம்பலம்

மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அருளம்பலம் நேற்று (03.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னம்மா தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்ற இராசையா மற்றும் அன்னலெட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், விக்கினேஸ்வரியின் அன்புக்கணவரும், அருள்மொழியின் (விஜி) பாசமிகு தந்தையும், நேசமலரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கணேசநாதபிள்ளை மற்றும் மகேஸ்வரி, ஜெயராசா (ஜேர்மனி), கமலேஸ்வரி, சிவராசா (றமணன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு நண்பகல் 12 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்டைதீவு. (92830) குடும்பத்தினர்

# வேலையாள்கள் தேவை

வவுனியாவில் பிரபல விருந்தினர் விடுதி, உணவகத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- ★ நிர்வாகி (Basic Hotel Managment Experience Required)
- ★ காசாளர் *(கணணி அனுபவம் தேவை)*
- ★ வரவேற்பாளர் *(மூன்று மொழிகளும் தெரிந்தவர்கள்)*
- ★ கணக்காளரும் களஞ்சியப் பொறுப்பாளரும்
- ★ உணவு பரிமாறும் கவுண்டர் பொறுப்பாளர்
- ★ தலைமை சமையற்காரர்
- ★ சமையல் உதவியாளர்
- ★ கூல்பார் பொறுப்பாளர்
- ★ உணவு பரிமாறுபவர்கள்

உணவு, தங்குமிட வசதிகள் இலவசம். தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் பின்வரும் இடங்களில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

1. Y. M .C .A,
109, கண்டி வீதி,
(யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(வெள்ளி (04.12.09) சனி (0512.09) மு.ப 9.00-12.00 மணிவரை.

2. யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்க சமாசம்
இல.95, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.பிரதான தபாலகம் முன்னால்)
(ஞாயிறு (06.12.09) மு.ப 9.00-12.00 மணிவரை)

(92819)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2009 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ . த உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் (3ஏ) சித்திபெற்று மாவட்ட ரீதியில் 5 ஆம் இடத்தைப் பெற்ற யாழ் . உசன் இராமநாதன் ம.வி மாணவி

## செல்வி சிவராஜா றம்யா

அவர்களை மனமாரப் பாராட்டுவதுடன், அவருக்கு கல்வி புகட்டிய அதிபர், ஆசிரியர்கள், மற்றும் ஞானோதயக் கல்வி நிறுவன ஆசிரியர்கள், புதிய கணிதக் கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உசன்,
மிருசுவில். (92815) உறவினர்கள்

# பகிரங்க ஏல விற்பனை -2009

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பாவிக்க முடியாத நிலையில் உள்ள மண்டபத்தினை இடித்து அகற்றப்பட்ட யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 25.11.2009 ஆம் திகதி நடைபெற்ற ஏலவிற்பனையில் விற்கப்படாத கீழ்வரும் பொருள்கள் 07.12.2009 திகதி காலை 10.30 மணிக்கு அப்பாடசாலையிலேயே ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

1.பனை மரம் 4'' X 2''
2. தட்டை ஓடு
3. முகட்டு ஓடு
4. கதவும் நிலையும்
3'-9'' X 6'' X 6''
7'-0''X 7'X 0''
5. யன்னலும் நிலையும்
3'-0'' X 4'-0''
5'-0'' X 4'-6''
4'-6'' X 5'-0''
3'-3'' X 5'-0''

வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

(சி/562912)

# சாரதிகள் தேவை

எமது நிறுவனத்திற்கு 30-50 வயது வரையான அனுபவமுள்ள, பாரவூர்தி வாகனங்களையும் மற்றும் சகல வாகனங்களையும் ஓட்டத் தகுதியுடையவர்களுமான சாரதிகள் தேவைப்படுகின்றனர். விரும்பியோர் தங்களின் விண்ணப்பம், தேசிய அடையாள அட்டைப்பிரதி, கிராம சேவையாளரின் வதிவிடப்பிரதி, சாரதி அனுமதிப்பத்திரப் பிரதி நற்சான்றுப் பத்திரங்களின் பிரதி ஆகியவற்றை 08.12.2009 ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்று விலாசமிட்டு அனுப்பி வைக்கவும். தங்களுக்கான நேர்முகப் பரீட்சை 09.12.2009 அன்று பி.ப 200 மணியளவில் சங்கக் காரியாலயத்தில் நடை பெறும்.

கௌரவ தலைவர்
இ.செ.சி. யாழ் கிளை. (சி/562916)

# கம்பன் கல்லூரி
# College Of Kambhan

முருகன் கோவில் அருகாமை, சங்கத்தானை — சாவகச்சேரி

புதிய கல்வியாண்டில் மீண்டும் நாம் உங்களுடன் இணைகின்றோம்.


எமது வழமையான ஆசிரியர் குழாத்துடன் 6-11 வரையான வகுப்புகள் 10.12.2009 வியாழக்கிழமை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

| | |
|---|---|
| ✱ தமிழ்,சமயம் ✱ தமிழ் இலக்கியம் | திரு.A. வாசுதேவா |
| ✱ கணிதம் | திரு.T.தவநேசன்,திரு.M. சிவரூபன் திரு.A.சுரேஸ்காந்த் |
| ✱ விஞ்ஞானம் | திரு.S. தயாபரன், திரு.G.சுகாந்தன் |
| ✱ ஆங்கிலம் | திரு.K. கமலதாசன், திரு.N.துசீபன் |
| ✱ வரலாறு | திரு.M. பார்த்தீபன், திரு.S.அகிலன் |
| ✱ சுகாதாரம் | திரு.S. சாரங்கன் |
| ✱ வர்த்தகம் | Mr. M.S.Y.Aryu |

உங்கள் வெற்றிக்கு இணைந்திடுங்கள் இன்றே! (92824)

இயக்குநர்
அ.வாசுதேவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையினரால் கெருடாவில் விவசாயிகள் 53 பேருக்கு தலா ஐயாயிரம் ரூபா விவசாயக் கடனாக வழங்கும் நிகழ்வு கெருடாவில் தெற்கு விவேகானந்தா சிக்கனக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளை முகாமையாளர் எஸ்.சிறிகாந்தன் உரையாற்றுவதையும், அருகில் வங்கியின் வல்வெட்டித்துறை கிளை அலுவலர் பி.லோகநாதன், தொண்டைமானாறு மகாவித்தியாலய அதிபர் எஸ்.கணேசமூர்த்தி, இலங்கை வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம்ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

இலங்கை வங்கியின் வடவலய உதவிப்பொது முகாமையாளர் உரையாற்றுவதையும் மேற்படி வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் திருமதி சுமங்கலி பிரபாகரன் விவசாயி ஒருவருக்கு கொடுப்பனவுப் புத்தகத்தை வழங்குவதையும் அடுத்துள்ள இரு படங்களில் காணலாம்.

*(படங்கள்: எஸ்.ஜி.மூர்த்தி)*

# ஊர்காவற்றுறை-காரைநகர் கடற்பாதைப் போக்குவரத்தை சீராக்குமாறு அரச அதிபரிடம் பொதுமக்கள் கோரிக்கை

நல்லூர், டிசெ.4

ஊர்காவற்றுறை-காரைநகர் இடையிலான கடற்பாதைப் போக்குவரத்தைச் சீராக்குமாறு ஊர்காவற்றுறை, காரைநகர் மக்களும் அரச ஊழியர்களும் யாழ்.அரச அதிபரிடம் கோரியுள்ளனர்.

இந்த இணைப்புப் பாதையின் கம்பிகள் நீண்ட காலமாக பழுதடைந்துள்ளதாகவும் இதுவரை இணைப்புக் கம்பிகள் மாற்றப்படாத நிலையில் அடிக்கடி கம்பிகள் அறுந்து பாதைச் சேவை சீர்குலைவதுடன் காலதாமதங்களும் ஏற்படுவதாகவும் அரச அதிபர் அனுப்பியுள்ள கடிதத்தில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஊர்காவற்றுறை இறங்குதுறை சேதமுற்றிருப்பதால் பாதையை கரையில் நிறுத்துவதில் கஷ்டங்கள் இருப்பதால் பயணிகள் இறங்குவதும் சிரமமாக இருப்பதாகவும் பாதைச்சேவை சீரற்று இருப்பதால் அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள் தமது கடமைக்கு உரிய நேரத்தில் செல்லமுடியாதுள்ளதாகவும் அரச அதிபரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதைச் சேவைக்குரிய எரிபொருளைத் தடங்கலின்றி வழங்கவும், குறித்த நேரத்துக்கு சேவையை நடத்தவும், பாதைச் சேவைக்கும் பேருந்துச் சேவைக்கும் இடையில் இணைப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுப்பதுடன் பழுதடைந்துள்ள பாதை இணைப்புக் கம்பிகளை மாற்றியமைக்கவும், நீண்ட காலமாக சேதமுற்றுக் காணப்படும் ஊர்காவற்றுறை இறங்குதுறையை புனரமைத்து உதவுமாறும் அரச அதிபருக்கு பொதுமக்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர், மாவட்ட நீதிபதி, உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (111)

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு, டிசெ.4

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் தையல் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தினால் நடத்தப்படும் இப் பயிற்சிநெறியில் பயிலுநர்களுக்கு குறிப்பிட்ட ஆறுமாத காலத்திற்கு ஊக்குவிப்புப் பணக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அபிவிருத்தி அலுவலர், பிரதேச செயலகம், உடுவில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கிராம அபிவிருத்தி அலுவலர் அறிவித்துள்ளார். (50-86)

## பிறப்புப் பதிவுக்கான நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு காலங்கடந்த பிறப்புப் பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை பிறப்புப் பதிவுகளை மேற் கொள்ளாதவர்கள் பதிவுகளை மேற்கொள்வதற்குரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு யாழ். பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.(50-201)

## 'மரணித்த மானுடம்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.4

வல்வை ஆ.சுமனால் தொகுக்கப்பட்ட 'மரணித்த மானுடம்'கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வல்வை அ.மி.த.க. பாடசாலையின்பொதுமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் கலந்துகொள்வார். நூலின் முதற்பிரதியை மக்கள் வங்கியின் வல்வைக் கிளை பொதுமுகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் பெற்றுக்கொள்வார். (50-204-70)

# நிலக்கடலை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் குடாநாட்டில் 400 பயனாளிகள் தெரிவு

வலி. வடக்கு, டிசெ.4

யாழ். குடாநாட்டில் நிலக்கடலைச் செய்கையை ஊக்குவிக்கும் முயற்சியில் விவசாயத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

மறுவயல் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டில் காலபோகச் செய்கையில் 400 குடும்பங்களுக்கு நிலக்கடலைச் செய்கைக்கான பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.குடாநாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் திட்டத்தின் கீழ் உலக விவசாய நிறுவனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து இதற்குரிய பயனாளிகளின் விவரத்தை விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாகத்திரட்டி வருகின்றார்கள்.

ஒரு பயனாளிக்கு 10 கிலோ கிராம் விதை கடலையும் உள்ளீட்டு இரசாயனப் பசளைகளான யூரியா 05 கிலோ கிராம், ரி.எஸ்.எம்.10 கிலோ கிராம், எம்.ஓ. பி 05 கிலோ கிராம் ஆகியன வழங்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அனலைதீவில் 10 பயனாளிகளும் வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட அல்லைப்பிட்டியில் 10 பயனாளிகளும் மண்கும்பானில் 10 பயனாளிகளும் புங்குடுதீவு கிழக்கில் 05 பயனாளிகளும் நாயினாதீவு மத்தியில் 05 பயனாளிகளுமாக மொத்தம் 30 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 10 பயனாளிகளும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் வடக்கில் 20 பயனாளிகளும் மானிப்பாய் மேற்கில் 20 பயனாளிகளுமாக மொத்தம் 40 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அத்துடன் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அளவெட்டி மேற்கில் 10 பயனாளிகளும் பன்னாலையில் 20 பயனாளிகளும் அளவெட்டி வடக்கில் 10 பயனாளிகளுமாக மொத்தம் 40 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிறுப்பிட்டி கிழக்கில் 10 பயனாளிகளும் சிறுப்பிட்டிமேற்கில் 15 பயனாளிகளும் அச்செழுவில் 15 பயனாளிகளும் கல்வியங்காட்டில் 20 பயனாளிகளும் கோப்பாய் தெற்கில் 20 பயனாளிகளும் கோப்பாய் மத்தியில் 30 பயனாளிகளும் கோப்பாய் வடக்கில் 10 பயனாளிகளும் ஊரெழுவில் 10 பயனாளிகளுமாகத் மொத்தம் 130 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இது தவிர கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அத்தாயில் 25 பயனாளிகளும் கரணவாய் கிழக்கில் 25 பயனாளிகளும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புலோலி வடக்கில் 10 பயனாளிகளும், கெருடாவில் 10 பயனாளிகளுமாக மொத்தம் 70 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த எழுது மட்டுவாளில் 20 பயனாளிகளும், கைதடி மேற்கில் 25 பயனாளிகளும் கைதடி தெற்கில் 25 பயனாளிகளுமாக மொத்தம் 70 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (04-86)

## உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...

**07.12.1985**

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவுக்கு இப்போது அதிக பொறுப்பு உண்டு என த.வி.கூட்டணி செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் பேட்டி.

**07.12.1985**

தம்பலகாமம் கேரணேசர் ஆலயத்துக்கு அருகில் வைத்து கொலையுண்டு எரிக்கப்பட்ட ஆறு தமிழர்களும் அடையாளம் காணப்பட்டனர்

**08.12.1985**

யாழ்ப்பாணத்தில் நுளம்புக் கடியால் மூளைக்காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிப்பு

**09.12.1985**

இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வதற்கு இந்திய இராணுவம் தலையிடவேண்டும் என சந்திரகாசன் தெரிவிப்பு

**08.12.1985**

இனப்பிரச்சினையை மிக விரைவில் நியாயமான முறையில் தீர்த்து வைக்க வேண்டுமென இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆரும் இணங்கியுள்ளனர்.

**09.12.1985**

யாழ். கோட்டையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நகருக்குள் வந்ததால் பொதுமக்கள் அல்லோலகல்லோலம்

**09.12.1985**

கண்காணிப்புக் குழுவினர் திருகோணமலை ... முறைப்பாடுகளைத் திருகோணமலையில் வைத்து விசாரிப்பர்.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் விரைவில் எக்ஸ்- றே பிரிவு இயங்க ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், டிசெ.4

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் எக்ஸ்-றே பிரிவு விரைவில் இயங்கவுள்ளது.

அதற்குரிய உபகரணங்கள் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டு கொழும்பு டெல்மேஜ் மெடிக்கல் பிரவேட் லிமிட்டட் நிறுவன பொறியியல் பிரிவைச் சேர்ந்த பிரசன்னா ஆரியவன்ஸ தலைமையிலான குழுவினரும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் உயிரியல் மருத்துவப் பிரிவினரும் இணைந்து எக்ஸ்-றே உபகரணங்கள் பொருத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வைத்தியசாலை எக்ஸ்-றே பிரிவுக்கென கதிரியக்கவியலாளரும் நியமிக்கப்பட்டுள்ளதால் கருவிகள் பொருத்தப்பட்டதும் இப் பிரிவு உடனடியாகவே செயல்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை வைத்தியசாலையில் பல் மருத்துவப் பிரிவுக்குரிய உபகரணங்களும் வந்து அவற்றினைப் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பல் மருத்துவப் பிரிவில் கடமையாற்ற இரண்டு பற்சிகிச்சை நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (04-207)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# கோப்பாய் பகுதியில் விரைவில் ரெலிக்கொம் பரிவர்த்தனை நிலையம்

யாழ்ப்பாணம், டிசெ.4

ரெலிகொம் நிறுவனம் கோப்பாய் சந்திப் பகுதியில் பரிவர்த்தனை நிலையம் ஒன்றை விரைவில் அமைக்கவுள்ளது.

இந்தப் பரிவர்த்தனை நிலையம் ஊடாக வலி.கிழக்கின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு தொலைபேசி இணைப்புக்களை வழங்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைக்கப்படவுள்ள இந்தப் பரிவர்த்தனை நிலையம் மூலம் ஆயிரம் பேருக்கு தொலைபேசி இணைப்புகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38 ஆவது ஆண்டிலும்
கொள்கை மாற்றமின்றி
தொடரும் இணையற்ற
சேவையில்...
The Express Institute
Irupalai, Kopay.



அமைதியான சூழலில் கற்றலுக்கான சகல வசதிகளுடன்
அனுபவமிக்க ஆசான்களின் வழிகாட்டல்கள்

புதிய கல்விஆண்டில் இணைந்து
உயர்ச்சிபெற ஓர் அரியவாய்ப்பு!
தரம் 03 முதல் O/L வரை
தமிழ், ஆங்கில மொழி மூலமான வகுப்புக்கள்
முதற்கட்ட அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன
குறிப்பு : அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.– அதிபர்



சுவசெத Suwasetha சுவசெத
லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 337
சீட்டிழுப்பு திகதி: 02.12.2009

வெற்றி எழுத்து: H வெற்றி இலக்கங்கள்: 03 20 46 56 போனஸ் இலக்கம் 22

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 9,414,564.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 03 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 90 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 136 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 3562 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2341 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 45250 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,449,120.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 9,414,564.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புகளின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
சேவைக்கு: 2473360, 2433631 இணையத்தளம்:www nlb lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.


# நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்களினால் தவறவிடப்பட்ட பொருள்கள்

நல்லூர்,டிசெ.4

நலன்புரி நிலையங்களில் இருந்து மீள் குடியமரும் பொருட்டு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் வந்து சேர்ந்த மக்களினால் தவறவிடப்பட்ட பொருள்கள் சில நல்லூர் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தவறவிடப்பட்ட பொருள்களில் 8 உடுப்புப் பைகளும், 7 முடிச்சுக்களும் உள்ளன. ஏ.திவ்வியா, மது இராஜேஸ்வரி எனப் பெயரிடப்பட்ட பொருள்களும் இதில் அடங்கும்.

தமது உடைமைகளைத் தவறவிட்டவர்கள் உரிய அத்தாட்சிகளைச் சமர்ப்பித்து தமது உடைமைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-11)

# சமூக சேவை அலுவலருக்கான ஒன்று கூடல் இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும் என மாவட்ட சமூகசேவை அலுவலர் ஆ.ஞானவேல் அறிவித்துள்ளார். (50-288)

# தேசிய நாட்டிய விழா விண்ணப்பத் திகதி நீடிப்பு

நல்லூர்,டிசெ.4

கலாசாரத் திணைக்களமும் இலங்கை கலா மண்டலத்தின் தேசிய நாட்டிய பொம்மலாட்டப் பிரிவும் இணைந்து நடத்தும் தேசிய நாட்டிய விழா 2009 க்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைவரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் 14ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு முன்பாக விண்ணப்பங்களை கலாசார அபிவிருத்தி உதவியாளரிடம் கையளிக்குமாறும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (50-111)


ஜயவிரு ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 489
சீட்டிழுப்பு திகதி: 02.12.2009

வெற்றி எழுத்து: Q வெற்றி இலக்கங்கள்: 37 48 59 70

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.18,378,758.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 215 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 437 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40/- | 10885 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6228 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 157475 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25298 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,606,980.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.


தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
சேவைக்கு: 2473360, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.18,582,745.20

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 08 . 12 . 1941



உதிர்வு 04 . 11 . 2009

## அமரர் பொன்னம்பலம் சபாரட்ணம்

திதி: துதியை

ஆண்டாண்டு தோறும் எமை ஆதரித்து ஒளி கொடுத்த
தூண்டா மணிவிளக்கே– உங்களினை
காற்றணைக்கும் என்று கனவிலும் நாம் எண்ணவில்லை
கலங்கி நிற்கின்றோம்– கண்ணீர் தான் மிச்சமையா.

உடையார் வீதி, கோக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர். (92816)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 11 . 1948



மறைவு 06 . 12 . 2006

## அமரர் ஞானேஸ்வரதேவி பரமேஸ்வரன்

திதி: கார்த்திகை மாத அபர பக்கத் துதியை (இன்று)

காசில் மதிமுகமே! காந்த விழியழகே!
வீசு புகழ் விளக்கே!
விண்ணுற்றாய் நம்புகிலோம்!
நேச உறவுகள் எம் நெஞ்சப் பிணி நீங்க
மாசில் பிறப்பெடுத்து மண்ணுலகு வந்திடம்மா.

அம்மாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கரந்தன்,
நீர்வேலி.

குடும்பத்தினர். (சி/562900)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



"சிவகவிமாமணி"

## ஆ.கதிர்காமத்தம்பி

திதி: திருதியை

தோற்றம் 06.06.1921 மறைவு 16.11.2008

எழுத்தறிவித்து இறைவனான என் அப்புவிற்கு...!
இலக்கணம் வழுவாத் தமிழ்ப் புலமையால்
"சிவகவிமாமணி"யெனும் சிறப்புப் பெற்றோய்
ஈழத்து மேவும் தல புராணங்கள், பதிகங்கள்
இலவசமாய் ஈய்ந்த நூற்கொடையாளன்,
விழுதூன்றிய வித்தியாலயம், விநாயகர்
சைவ நூல் வெளியீட்டக ஸ்தாபகர்,
இந்து சமய அமைச்சர், பேராசிரியர்கள் ஈறாக
கௌரவம் பெற்ற சிவத்தமிழ் திலகமே!

எமது குடும்பத் தலைவரின் நினைவுப் பிரார்த்தனை நாளை (05.12.2009) சனிக்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர்கள், அன்பர்கள் இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
மகள்மார், மருமகன்மார்,
க.சுரேஸ்குமார் (பேரன்).

கொத்தங்கலட்டி,
வல்வெட்டி.
(சி/562905)

# அறிவித்தல்

## காரைநகர் பிரதேச சபை, காரைநகர்

2010ஆம் ஆண்டுக்கான சபையின் வரவு செலவுத் திட்டம் 04.12.2009 தொடக்கம் ஏழு (07) நாள்களுக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

திரு.இரா.லோகநாதன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேச சபை.
(சி/562898)


ஸ்ரீராம் ஜெயம்

# கமலக் கண்ணன் திருமண சேவை

28.10.1978இல் பிறந்த, சூரியனும் செவ்வாயும் சேர்ந்துள்ள 22½ பாவமுடைய, கனடா பிரஜா உரிமை பெற்ற, மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.

11.01.1980இல் பிறந்த, 4இல் செவ்வாய் பாவம் 30 உடைய, அவுஸ்திரேலியா மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

13.06.1980இல் பிறந்த, செவ்வாய் இல்லாத, பாவம் 20, அவுஸ்திரேலியா மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.

26.02.1977 இல் பிறந்த (விஸ்வகுலம்) 7இல், செவ்வாய் பாவம் 62, அவுஸ்திரேலியா மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.

14.12.1982இல் பிறந்த, செவ்வாய் இல்லாத பாவம் 41½, கனடா பிரஜா உரிமைபெற்ற டாக்டர் மணமகளுக்கு எக்கவுண்டன், இஞ்சினியர் தேவை.

08.06.1984இல் பிறந்த, 12இல் செவ்வாய், 62 பாவமுடைய, கனடா பிரஜா உரிமை பெற்ற MSc மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.

07.07.1982இல் பிறந்த, கனடா பிரஜா உரிமை பெற்ற, மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை

மேலும் பட்டங்கள், இஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், வர்த்தகர்கள், பாவம் கூடிய, குறைந்த செவ்வாய்க்குற்றமுள்ள மணமக்களும், வெளிநாட்டில் பிரஜா உரிமைபெற்ற மணமக்களும் எம்மிடமுள்ளனர்.

[illegible] கமலக்கண்ணன் திருமண சேவை,
இல. 171/7, [illegible] நல்லூர்.
தொ.பே. 021 4920266, 077 6070862


# மரண அறிவித்தல்

## கனகரத்தினம் மங்கையர்க்கரசி



கட்டுடை, மானிப்பாயைச் சேர்ந்த கனகரத்தினம் மங்கையர்க்கரசி ரொறன்ரோ கனடாவில் 01.12.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை கனகரத்தினம் (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும் அம்பிகாதேவி (கனடா), வசந்தாதேவி, காலஞ்சென்ற Dr.குகனேசன் மற்றும் சாந்தாதேவி, தேவமனோகரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சோமஸ்கந்தர், கருணானந்தன் மற்றும் இரங்கநாதன், சிவகுமாரன் (கனடா), மாலினி (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் லதா (கனடா), அருள்ராஜ் (லண்டன்), கபிலன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) Dr.வரதன் (நீர்கொழும்பு), சேந்தன் (கனடா), Dr.அஜந்தன், பிரணவன் (பல்கலைக்கழகம், கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனோஜன், அம்ரதா, ஹரேசன், அபீசன், ஆரணி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2009) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.
T.P: 4590612

தகவல்:
க.இரங்கநாதன்
(மருமகன்).
(92806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம், இடப்பெயர்வு என்பவற்றின் மத்தியிலும் தளராது கற்று உயர்தரத்தில் சாதித்திட்ட மாணவர்கள்

## கணிதம், கலைப்பிரிவுகளில் முதலிடம் பெற்றவர்களின் அனுபவப்பகிர்வு

**ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சைக்கு மிருசுவில் நலன்புரிநிலையத்திலிருந்து தோற்றிய சாந்தராசா சுஜிதரன் முல்லைத்தீவு மாவட்டத்தில் கணிதப் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். பரீட்சையில் 2 ஏ, பி பெறுபேற்றினைப் பெற்றுச் சித்தியடைந்த இம்மாணவர் நலன்புரிநிலையத்திலிருந்து தனது பெற்றோருடன் வெளியேறி வடமராட்சியிலுள்ள கற்கோவளம் புனித நகரில் தங்கிஉள்ளார்.**



**சாந்தராசா சுஜிதரன்**
**2ஏ, பி மாவட்டநிலை 1**
**கணிதப்பிரிவு**
**முல்லைத்தீவு மாவட்டம்**

எனது ஆரம்பக் கல்வியினை வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையிலும், உடுத்துறை மகா வித்தியாலயத்திலும் ஆழியவளை சி.சி. தமிழ்க்கலவன் பாடசாலையிலும் கற்றேன். இடப்பெயர்வின் காரணமாக இப்பாடசாலைகளில் மாறிமாறிக் கல்வியைத் தொடர வேண்டியநிலை ஏற்பட்டது.

பின்னர் எனது குடும்பம் வடமராட்சி கிழக்கில் இருந்தும் இடம்பெயர்ந்ததினால் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியையும், உயர்தரக்கல்வியையும் கற்றுவந்தேன்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப்பரீட்சைக்கு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்திலிருந்து தோற்றி 9 ஏ, சி சித்தியினைப் பெற்றேன். அங்கும் யுத்த சூழ்நிலை ஏற்பட்டதனால் 8 மாதங்கள் மட்டுமே பாடசாலைக்குச் சென்று உயர்தரவகுப்பில் கற்கக்கூடியதாக இருந்தது. கல்வியையும் இழந்த நிலையில் பெற்றோருடன் யாழ். மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து வந்தபோது மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டோம்.

மிருசுவில் நலன்புரி நிலையத்திற்கு வந்த பின்னர் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக சுயமாகக் கற்கத் தொடங்கினேன். எமது தந்தை, சகோதரர், மற்றும் உறவினர்கள் கற்பதற்குரிய ஊக்கத்தினைத் தந்து கொண்டிருந்தார்கள். மிருசுவில் றோமன்கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் எமக்காக வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு, கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டமை எமது கல்விக்கு உறுதுணையாக அமைந்தது. அங்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேவேளை எனக்கு ஆரம்பக் கல்வியைக் கற்பித்த ஆசிரியர்கள், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் இடைநிலைக்கல்வியையும் மற்றும் உயர்தரக் கல்வியையும் கற்பித்த ஆசிரியர்கள், அப்பாடசாலைகளின் அதிபர்கள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

நலன்புரிநிலையத்தில் நான் கற்றுக்கொண்டிருந்தபோது வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா எனக்கும், ஏனைய மாணவர்களுக்குமான புத்தகங்கள், குறிப்புக் கொப்பிகளைக் கொண்டுவந்து எமது கல்விக்கு உதவினார். இந்த நடவடிக்கை எமது கல்விக்கு ஒரு வரப்பிரசாதகமாக அமைந்தது.

வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா, யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் ஆகியோர் நலன்புரி நிலையத்திற்கு வருகை தந்து என்னையும், ஏனைய மாணவர்களையும்பரீட்சைக்குத் தோற்றுமாறு உற்சாகப்படுத்தி அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள். யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், மிருசுவில் தேவாலய அருட்தந்தை எட்வின் ஆகியோர் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து நடத்தி நானும் எனது நண்பர்களும் பயனடையச் செய்தார்கள். இவர்களுடன் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், சமூகப் பெரியோர்கள், கல்விப் புலத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் எமது கல்விக்கு உதவியுள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இடம்பெயர்ந்து பல்வேறுஇன்னல்களைக் கடந்த காலத்தில் அனுபவித்த போதும் எனது விடா முயற்சியும் தொடர் பயிற்சியும்தான் பரீட்சையின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் எனது தாயாரை இழக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டது.

**செவ்வி: அருமை**

எனது பரீட்சையின் வெற்றியினை நேரில் கண்டு பகிர்ந்து கொள்வதற்கு ''அம்மா இல்லையே'' என்ற கவலை வாட்டுகின்றது. எனினும் எனது தந்தை, சகோதரன், அப்பு, மாமா, மற்றும் உறவினர்கள் எனது கல்விக்கான ஊக் கத்தினையும், ஆதரவினையும் தந்து கொண்டிருக்கின்றார்கள். அவ் ஆதரவினையும், ஊக்கத்தினையும் தொடர்ந்தும் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

**மிருசுவில் நலன்புரி நிலையத்திலிருந்து ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய வேலும்மயிலும் சுதன் என்னும் மாணவன் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாமிடத்தைக் கலைப்பிரிவில் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.**

**முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றுவந்த இம்மாணவன் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மிருசுவில் நலன்புரி நிலையத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்துள்ளார். தன்னுடைய பெறுபேறு குறித்து அவர் இங்கு விளக்குகிறார்.**



**வேலும்மயிலும் சுதன்**
**2ஏ, பி மாவட்டநிலை 1**
**கலைப்பிரிவு**
**முல்லைத்தீவு மாவட்டம்**

''எட்டு மாதங்களுக்கு மேலாகப் பாடசாலைக் கல்வியினைப் பெறமுடியாதிருந்த நான், சுயகற்றல் மூலமே இச்சித்தியினைப் பெற முடிந்தது. எனக்கு எந்தத் தனியார் கல்வி நிலையத்திற்கும் சென்று கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. பல துன்பங்களுக்கும் கஷ்ரங்களுக்கும் மத்தியில் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்ற இலக்குடன் கல்வியைத் தொடர்ந்தேன்.

எனது ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் வடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்றேன். யுத்த சூழ்நிலை காரணமாக எனது பெற்றோர் வன்னிக்கு இடம்பெயர்ந்து செல்ல நேரிட்டதனால் மாத்தளன் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையிலும், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலும் கல்வியைத் தொடர்ந்தேன். அங்கும் யுத்தத்தினால் பல சிரமங்களுக்கு மத்தியில் இடம்பெயர்ந்து எனது பெற்றோருடன் மிருசுவில் நலன்புரி நிலையத்திற்கு வந்து சேர்ந்தேன்.

இடம்பெயர்ந்து வரும்போது புத்தகங்களையோ, குறிப்புக் கொப்பிகளையோ எடுத்துவர முடியாமல் போய்விட்டது. எனினும் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த ஒருசில நண்பர்களிடம் இருந்த புத்தகங்களையும், குறிப்புக் கொப்பிகளையும் இரவல் வாங்கிப் படித்தேன். பரீட்சை நெருங்கி வருகின்ற நேரத்தில் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் எங்களுக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டன. ஆனால் எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் எமக்கு இறுதிவரை கிடைக்கவில்லை. எனினும் அப்பாடசாலை அதிபர் தன்னால் இயன்றவரை கல்வியில் எமக்கு உதவினார்.

வரலாறு பாடத்திற்கான புத்தகங்களோ, குறிப்புக் கொப்பிகளோ எங்கள் எவரிடமும் இருக்கவில்லை. இதனால் அப்பாடத்தினை கற்பதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்கினோம். நலன்புரிநிலையத்திற்கு வந்த வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவிடம் எமது இக்குறையினை எடுத்துக் கூறினோம். அவர் விரைந்து செயற்பட்டு பல இடங்களில் கேட்டு வாங்கி வரலாறு பாடத்திற்கான புத்தகங்களையும், குறிப்புக் கொப்பிகளையும் கொண்டுவந்து தந்தார். அதனால் அப்பாடத்தினையும் கற்று பரீட்சையில் சித்தி அடைந்துள்ளேன். நலன்புரி நிலையத்திற்கு வந்து சென்ற வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் ஆகியோர் என்னையும் எனது நண்பர்களையும் பரீட்சைக்குத் தயக்கமில்லாது தோற்றுங்கள் என உற்சாகப்படுத்திச் சென்றார்கள். பரீட்சை நெருங்கும் காலத்தில் மிருசுவில் தேவாலய அருட்தந்தை எட்வின், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் ஆகியோர் பரீட்சை சம்பந்தமான கருத்தரங்குகளை ஒழுங்குசெய்து நடத்தி உதவினார்கள்.

இவர்கள் அனைவரினதும் ஆதரவினாலும் இறுதிவரை எமக்கு வழிகாட்டிகளாக இருந்த ஆசிரியர்களினாலும் நானும் எனது நண்பர்களும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளோம். அவற்றில் நான் மாவட்ட நிலையில் கலைப்பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றதையிட்டு அவர்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு எனது பெற்றோரும் எனக்கு அருகில் இருந்து உற்சாகத்தினை ஊட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் நான் 5ஏ, 2பி, 2சி, எஸ் பெறுபேற்றினைப் பெற்றிருந்தேன். உயர்தரப் பரீட்சையில் தமிழ், கர்நாடக சங்கீதம் ஆகிய பாடங்களில் 'ஏ' சித்தியினையும் வரலாறு பாடத்தில் 'பி' சித்தியினையும் பெற்று மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளேன். பரீட்சையில் சித்தி அடைவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. எனினும் மாவட்ட நிலையில் முதலிடத்தைப் பெற்றது மிகுந்த மகிழ்ச்சியினைத் தருகின்றது. இம் மகிழ்ச்சியினைப் பெற எனக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிய நண்பர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப்புலம் சார்ந்த பெரியோர்கள் மற்றும் பெற்றோர், உறவினர்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். எத்தகைய துன்பங்களையும், தடைகளையும் விடாமுயற்சியின் மூலம் வெற்றிகொள்ள முடியும் என்பதே எனது நம்பிக்கையாகும். தற்போது நான் எனது பெற்றோருடன் நலன்புரிநிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டு பருத்தித்துறை, கற்கோவளத்தில் வசித்து வருகின்றேன்.

---

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கான வழிமுறைகள்

## தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்

கொழும்பு, டிசெ04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கான வழி முறைகளைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார்.

வாக்காளர் ஒருவர் தனது புகைப்படம் அடங்கிய அடையாள அட்டை ஒன்றின் மூலம் வாக்களிப்பு நிலையத்தில் தனது அடையாளத்தை நிரூபிப்பது அவசியம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

வாக்காளர் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்காகப் பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

* ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை
* செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
* செல்லுபடியாகும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம்
* அரசாங்க ஓய்வூதியம் பெறுவோரின் அடையாள அட்டை
* முதியோர் அடையாள அட்டை
* ஆள்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் மதகுருமாருக்கென வழங்கப்பட்ட அடையாள அட்டை.
* கடந்த மாகாண சபைத் தேர்தலில் தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை.

(இவைகள் கிராமசேவகரினால் புதுப்பிக்கப்பட்டு உரியவர்களுக்கு மீண்டும் வழங்கப்படும்.)

மேற்குறிப்பிட்ட ஆவணங்களைக் கொண்டிராத எவரொருவரும் ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் செல்லுபடியான அடையாள ஆவணங்களில் எழுத்துக்கள் தெளிவில்லாமலோ அல்லது புகைப்படம் தெளிவில்லாமலோ காணப்படுமாயின் தற்காலிக அடையாள அட்டையைக் கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். அமைச்சுக்களினாலும், திணைக்களங்களினாலும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தற்காலிக அடையாள அட்டைகள் கிராமசேவகரினாலோ அல்லது பெருந்தோட்ட அத்தியட்சகரினாலோ விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரிகள் அண்மையில் பெறப்பட்ட கலர் அல்லது கறுப்பு வெள்ளை 1¼"x1" அளவுள்ள இரண்டு புகைப்படங்களுடன் கிராமசேவகரை அல்லது தோட்ட அத்தியட்சகரைச் சந்திக்க வேண்டும். விண்ணப்பதாரி கிராமசேவகரிடமிருந்தோ அல்லது தோட்ட அத்தியட்சகரிடமிருந்தோ பெற்றுக்கொண்ட ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்து புகைப்படங்களையும் அத்துடன் இணைத்து அவர்களிடம் வழங்கவேண்டும். இதற்கு எந்த வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இவ்வகையான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி 2010 ஜனவரி 15 ஆம் திகதியாகும். பூரணப்படுத்தப்பட்ட அடையாள அட்டை உரிய மாவட்டத்தின் பிரதி/சிரேஷ்ட உதவி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னர், தேர்தல் தினத்துக்கு முன்னர் வழங்கப்படும். குறிப்பிடப்பட்ட அத்தாட்சிப்படுத்துதல் இல்லாத ஆளடையாள அட்டை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட ஆளடையாள ஆவணத்துக்கு மேலதிகமாக ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டையும் ஏற்றுக்கொள்ளப்படும். இது சம்பந்தமான அறிவித்தல் ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வெளியிடப்படும். மேலே குறிப்பிடப்பட்டவைகள் தவிர்ந்த வேறு எந்தவொரு அடையாள ஆவணமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தங்களுடைய ஆளடையாளத்தை நிரூபிக்காத எந்தவொரு வாக்காளருக்கும் வாக்குச் சீட்டு வழங்கப்படமாட்டாது என்றுள்ளது.

(50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் கிரிக்கெட் அணியின் பயிற்சி முகாம்

வலி.வடக்கு, டிசெ.4

யாழ்.மாவட்டப் பெண்கள் கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிமுகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி முகாமில் கலந்துகொள்ள விரும்பும் பெண்களை உரிய நேரத்திற்கு சமுகம் தரும்படி பயிற்றுநர் வி.கே.சண்முகலிங்கம் அறிவித்துள்ளார். இந்தப் பயிற்சி முகாமில் வடக்கு-கிழக்கு மாகாண இலங்கை கிரிக்கெட் அமைப்பின் பயிற்றுநர் மஞ்சுளா கருணாரட்ணவும் கலந்துகொள்வார்.

(50-86)


## HIV/AIDS விழிப்புணர்வு வரைதல் போட்டி-2009

மேற்படி விழிப்புணர்வு தொடர்பாக, க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்காக வரைதல் போட்டி (Painting) ஒன்றை நடத்தி அதில் வெற்றிபெறும் முதல் மூன்று மாணவர் களுக்குப் பரிசில்களும், மேலும் பத்து மாணவர்களுக்கு ஆறுதல் பரிசில் களும் வழங்கஉவுள்ளோம். இவ் வரைதல் போட்டி 08.12.2009 இல் பி.ப.2 மணி தொடக்கம் 5 மணிவரை அகவொளி, குடும்ப வளத்துணை நிலையத்தில் (சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறவுள்ளது. வரைதலுக்கு ஆக்கப்பொருள் *''உங்கள் பிரிய மான சகபாடிக்கு எயிட்ஸ் வராது தடுப்பதற்கு அவரிடம் நேர்மையாக இருங்கள்''*. அதில் பங்குபற்றும் மாணவர்களின் பெயர், பால், வயது, வகுப்பு அக்கல்லூரி மாணவர் என்பவற்றை உறுதிப்படுத்தி கல்லூரி அதிபர்கள் 07.12.2009 க்கு முன்னதாக கீழ்க்காணும் விலாசத் துக்கு அனுப்பி வைக்கவும்.

**கௌரவ தலைவர்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**யாழ்.கிளை, 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

(ச/562885)



யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின்

## வாழ்த்துக்கள்



எமது பாடசாலை அதிபர்

### உயர்திரு. கணபதிப்பிள்ளை வடிவேலு

அவர்கள் 01.06.2006 ஆம் திகதி தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமையை மனதார வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமை கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், இராஜ வீதி, நல்லூர்.

(92740)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/ நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையின் மாணவனும் ''ராஜ்பவன்'', அல்வாயைச் சேர்ந்தவருமான

### செல்வானந்தன் ஞானானந்தன்



2009 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 151 புள்ளி களைப்பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல வெற்றிகளைப்பெற்று மிளிர ஆலடி ஐங்கரனை வேண்டுகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:*
அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, பப்பா, சித்தி, தம்பி, மாமா, அத்தை, மாமா, மாமி, சித்தா, அத்தைமார்.

'ஆனந்தபவன்', அல்வாய்.

(90980)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 03 |  | 27 |
| 08 | | 11 |
| 1933 | | 2007 |

### அமரர் தம்பையா கார்த்திகேசு

திதி: திருதியை

இரவென்றும் பகலென்றும்
மழையென்றும் பனியென்றும் பார்த்தே ஒதுங்காது வளமாக
நாம் வாழ ஊனாக உழையுருக்கி
பாசமாக எமை வளர்த்திட்ட
அன்புத் தெய்வமே!
ஆறாது எம்துயர் என்றுமே மாறாது எமைவிட்டு
[illegible] உம் நினைவுகள் அப்பா!

*என்றும் உம் நினைவுகளுடன் வாழும்:*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி மேற்கு,
கைதடி.

(90993)


### துன்னாலை மெதடிஸ்த மிஷன் பரிசளிப்பு விழா

துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் பரிசளிப்புவிழாநாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் கி.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கமும் கலந்துகொள்வர்.

(50-204-236)

### காசோலைகளைப் பெறுமாறு பயனாளிகளுக்கு அறிவிப்பு

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் தற்செயல் நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பம்செய்த ஜே/136 நவாலி தெற்கைச் சேர்ந்த கே.சாந்தினி, சுயதொழில் முயற்சிக் கடனுக்கு விண்ணப்பித்த நா.சறோஜினிதேவி ஆகியோரின் காசோலைகள் செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவர்களை உடன் வந்து காசோலைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார்.

(50-204-100)

### சுயதொழில் உற்பத்திக் கண்காட்சி

தென்மராட்சி பிரதேச பெண்கள் அதிகார சபையினர் நடத்தும் பிரதேச பெண்களின் சுயதொழில் உற்பத்திப் பொருள் கண்காட்சி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும்.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி [illegible] தன் கலந்து கொள்வார்.

(50-202)

# வாசகர் திருமுகம்

## மீள்குடியேறிய ஒருவரின் ஆதங்கமும் அலைக்கழிவும்

நான் வன்னியில் படாதபாடு, சொல்லொணாத் துன்பங்களையெல்லாம் அனுபவித்து அதிலிருந்து ஒருவாறு தப்பித்து அதன்பின்னர் நலன்புரிக் கிராமங்களில் மன அழுத்தங்களோடு கூடிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து ஒருவாறு மீள்குடியேற்றம் என்ற பெயரில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தேன். எமது கதைகள் சொல்ல முடியாத கண்ணீர்க்கதைகள். அதனையெல்லாம் நான் இவ்விடத்தில் சொல்லவரவில்லை.

நான் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் வடலியடைப்புக் கிராம அலுவலர் பிரிவு ஜே/145 வலி.தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவினுள் அடங்குகின்றது. 27.10.2009 ஆம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு நானும் எனது குடும்பமும் வந்தபோது ரோக்கன் எனப்படும் சிறுதுண்டும் 5000 ரூபா கொடுப்பனவும் உடனடியாகத் தந்தார்கள். மற்றைய பதிவுகளைப் பிரதேச செயலகத்திற்கு வந்து பதிந்து கொள் ளுங்கள் என்றனர். இதற்கமைய நான் பிரதேச செயலகம் சென்றபோது கிராம அலுவலரிடம் சென்று கடிதம் வாங்கி வாருங்கள் அப்படியென்றால்தான் உங்களைப் பதியலாம் என்றார்கள். அதன்பின்பு ஒருவாறு கிராம அலுவலரைத் தேடிப்பிடித்துக் கடிதம் வாங்கி வந்தேன். இரண்டு படிவங்களை நிரப்பி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். பின்பு குடும்ப அட்டைக்கு என்னிடம் 10 ரூபா அறவிட்டார்கள். இது இப்படியென்றால் 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோன்றிருந்தது. ஏன் என்னிடம் 10 ரூபா அறவிடுகின்றீர்கள் என்று கேட்டபோது நேற்றுத்தான் 5000 ரூபா பெற்றீர்கள் என ஒருவர் (பதிவுகளை மேற்கொண்டவர்) அலட்சியமாகப் பதிலளித்தார்.

நாங்கள் அலட்சியப்படுத்தவே இப்பூமியில் பிறந்தோமா என்று ஒரு கணம் எண்ணிக்கொண்டு நான் மௌனமாக இருந்தேன். அதனை அங்கு நின்ற மேலதிகாரிகள் கண்டுகொள்ளாமலிருந்தது எனக்கு மிகவும் வேதனையைத் தந்தது. நாங்கள் பொறுத்துக்கொள்ளாத வலிகளா! வேதனைகளா! இவை.

அதனைவிட முக்கிய விடயம் என்னவென்றால் மிகுதி இருபதினாயிரம் கொடுப்பனவினை நீங்கள் பெறுவதற்கு உடனடியாக சமுர்த்தி வங்கியில் கணக்கு ஒன்றினை ஆரம்பியுங்கள் என்று அறிவுறுத்தல் தந்தார்கள். அதற்கமையக் கணக்கினைத் திறந்தால் அதெல்லாம் வேண்டாம் இலங்கை வங்கியில் திறந்து கொள்ளுங்கள் என்கின்றனர். பிறகு எமது தேவைகளை மதிப்பீடு செய்வதாகக் கூறிக்கொண்டு பதிவுகளை மேற்கொள்ள அங்கு வாருங்கள், இங்கு வாருங்கள் என்று அலைக்கழிக்கின்றனர். எம்மிடம் அடையாள அட்டை இல்லை. தற்காலிக அட்டை பெறச்சென்றபோது யாரோ நிர்வாக உத்தியோகத்தராம் நீர் ஏன் இவ்வளவு நாளும் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கவில்லை என்று சட்டம் பேசினார். உண்மைதான் சட்டம் எனக்குத் தெரியாது என்று நான் அதிலிருந்து விலக்குப் பெற முடியாது. ஆனால் நாம் வேண்டுவது சட்ட ரீதியான நடவடிக்கை அல்ல. மனிதாபிமான நடவடிக்கை. நாமும் அவர்களது உடன்பிறப்புக்கள்தான் அந்நியர்கள் அல்லர்.

மேற்கூறியவை சில உதாரணங்கள்தான். எமது அலைச்சல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. 'தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் சுவையிருக்கும்' இது சினிமாப்பாடல்வரி. ஆனால் எமது தேடல் நிம்மதியும் அமைதியுமே. இதனைப் புரிந்துகொண்டாவது அரச உத்தியோகத்தர்கள் எம்மை அலைக்கழிப்பதனைக் குறைப்பார்களா! சம்பந்தப்பட்டவர்களுக்கு இது சமர்ப்பணம்.

*சிவராம் கனகசபேசன்.*

## நகரில் போக்குவரத்துக்கு ஏற்பட்டு வரும் இடைஞ்சல்

அண்மைக்காலத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் வீதிப்போக்குவரத்தைச் சீரான நிலைமைக்குக் கொண்டுவரும் என்று சம்பந்தப்பட்டவர்களும் பொதுமக்களும் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் நிலைமை திருந்திக்கொண்டு வருகிறதா? அல்லது சீர்கேடடைந்து கொண்டு போகிறதா? என்று குழப்பமடைய வேண்டியதாக இருக்கிறது. வியாபாரத்தை விரிவாக்கும் ஆவலில் அன்றாடம் பொருள்களைக் கொண்டு வந்து குவிக்கின்ற கொள்கலன் பொருத்திய லொறிகள் போக்குவரத்துக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுக்கின்றன. மழைகாலமானதால் அவர்கள் ஓரத்திற்குச் செல்லாமல் தெருவை ஆக்கிரமித்துத்தான் நிறுத்துகிறார்கள். சிறிது காலத்திற்குமுன் இது பற்றிப் பேசப்பட்டாலும் இவ்வாகனங்கள் கண்டபடி நீண்ட நேரங்களுக்கு நிறுத்தப்படுவது தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

நாளுக்குநாள் இரு சக்கர உழவு இயந்திரங்களின் உபயோகம் அதிகரிப்பது, கடைகள் முன்னோக்கி நகருவது, நடைபாதை வியாபாரிகள் மட்டுமல்ல பெரிய கடைக்காரர்கூடப் போக்குவரத்திற்கு உரிய இடங்களில் பொருள்களைப் பரப்புவது, போதியளவு வாகனத் தரிப்பிடங்கள் இல்லாமை முதலிய பல விடயங்கள் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக அமைகின்றன.

ஒருவழிப் பாதையை ஏற்படுத்திக் கண்காணிப்பது மட்டும் பயன்தராது. சகல விடயங்களும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

கொக்[illegible]

வை.சந்திரபாலன்.

## [illegible]யைத் திருத்தி உதவுக

வட்டு.[illegible]கு சுப்பிரமணிய வித்தியாசாலை வீதி (மூளாய் றோட், 3ஆவது ஒழுங்கை) பல வருடங்களாகத் திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாக இருப்பதால் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இவ்வீதியில் பொதுமக்கள் பயணிக்க முடியாத நிலையும், மாணவர்கள் மேற்படி பாடசாலைக்குச் செல்லமுடியாமலும் அத்தோடு இப்பாதையினூடாக கண்ணகை அம்மன் ஆலயத்துக்குச் செல்ல முடியாமலும் இருக்கிறது. கடந்த காலங்களில் இவ் வீதியின் அவலநிலை பற்றிப் பலமுறையாக விண்ணப்பங்கள் கொடுத்தும் இதுவரை இவ்வீதியைத் திருத்தீ எந்தவிதமான முயற்சியும் எடுக்கப்படவில்லை. வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் இவ் வீதியைத் திருத்தி உதவ வேண்டும்.

கண்ணகை அம்மன் கோவிலடி,
வட்டு.மேற்கு.

நலன்விரும்பிகள்.

## இந்த வீதியையும் திருத்தித் தாருங்கள்

வலி.கிழக்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட உரும்பிராய் சந்தியில் இருந்து மானிப்பாய் வீதியில் உள்ள ''விதானையார் வீதி'' கடந்த 20 வருடங்களுக்கு மேல் செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமாகவும், கற்கள் மேல் எழுந்தும் காணப்படுகின்றது. உரும்பிராய் வடக்கையும் உரும்பிராய் மேற்குப் பகுதியையும் இணைக்கும் பிரதான வீதியாக இவ்வீதி உள்ளது.

தற்போது மழைகாலம் என்பதால் இவ்வீதியில் மழைநீர் சிறுசிறு குளங்கள் போல் தேங்கி நிற்கின்றது. இவ்வீதியால் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் வாகனங்களில் போக்குவரத்துச் செய்வோர் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வீதி செப்பனிடுதல் விடயமாக உரும்பிராய் பிரதேசசபை உப காரியாலயத்தினரோடு பல முறை தொடர்புகொண்டும் இன்றுவரை எதுவித முன்னேற்றமும் கிடைக்கவில்லை. உரும்பிராய்ப் பகுதியில் உள்ள சிறுசிறு வீதிகள் எல்லாம் செப்பனிடப்பட்டு வரும் நிலையில் இவ்வீதியை மட்டும் செப்பனிடுவதில் அதிகாரிகள் [illegible]மாக இருப்பது வேதனையாக இருக்கின்றது.

உரும்பிராய் மேற்கு.

*துஷானந்தன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுச் சேரமுடியாதவர்கள் எனக் கருதப்பட்ட பலதரப்புகளும் ஒன்று சேர்ந்து நிற்பது நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கவே

## ரவூப் ஹக்கீம் விவரிக்கிறார்



"26 மாதங்களுக்கு முன்பு நடந்த யுத்தத்தின் வெற்றியை தொடந்து தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது 6 பரம்பரை காலத்துக்கு வீழ்த்த முடியாது என்று நினைத்து நாம் மலைத்திருந்த நிலை இன்று மாறியிருக்கிறது. 6 பரம்பரை என்பதை விட இன்று தனக்கே ஜனாதிபதிப்பதவியில் தொடர்ந்தும் இருக்க முடியாது என்று அவர் நினைக்கும் அளவுக்கு நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. இதற்குக் காரணம் நாங்கள் மேற்கொண்ட காய்நகர்த்தல்களேயாகும்" என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் சமதலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

'அரசியல் யாப்பும் சமாதான சக வாழ்வும்' என்னும் தொனிப்பொருளில் கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்த்தர்களுக்கும் உறுப்பினர்கள் மற்றும் போராளிகளுக்குமான கருத்தரங்கு நேற்று முன்தினம் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்வின் இறுதியில் ரவூப் ஹக்கீம் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச ஊடகங்களின் மூலம் அரசு ஜனாதிபதித் தேர்தலை தாமே வெல்வோம் என்று சேறுபூசும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், கிழக்கு மாகாணத்தில் விசேடமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்களும் ஏனைய சிறுபான்மையினங்களும் இந்த ஆட்சியையும் ஜனாதிபதியையும் வீழ்த்த வேண்டும் என்பதில் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சரத் பொன்சேகாவை வெல்ல வைக்கும் சக்தியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த உண்மை தற்போதைய ஜனாதிபதிக்கும் அரசுக்கும் தெரியும். அதே அரசுக்குள்ளிருக்கும் எமது கட்சியின் துரோகிகளுக்கும் நன்கு தெரியும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சியின் பொது வேட்பாளரான சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளித்து 80 வீதத்திற்கு அதிகமான முஸ்லிம் வாக்குகளால் அவருக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கும் அதேநேரம், தமிழ்மக்களின் வாக்குகள் களவாடப்படுவதும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதும் தடுக்க வேண்டியதன் அவசியத்தையும் நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

### ஜனாதிபதி முறையை ஒழிக்க இதனை விட்டால் வேறு சந்தர்ப்பம் இல்லை

நாம் கண்ட அனுபவத்தில் ஜனாதிபதி முறைமையை ஒளிப்பதற்கு இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் இல்லை. ஜனாதிபதிப்பதவியின் இரண்டாவது தவணை ஒன்று ஏற்படுவது மிகப்பயங்கரமானது. வித்தியாசமான உணர்வுகளும் சிறுபான்மையினருக்கு எதிரான கர்வம், இறுமாப்பு முதலியனவும் அந்த ஜனாதிபதியை ஆட்கொள்ளும். யுத்தத்தையும், யுத்த வெற்றியையும் காட்டியும் அரச உடமைகளைப் பயன்படுத்தியும் ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசு நடத்தும் கண்கட்டி வித்தைக்கு ஒரு முடிவை ஏற்படுத்தியாக வேண்டியிருக்கிறது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் விடயத்தில் கடந்த காலங்களில் நாம் கண்ட அனுபவங்களின் உண்மைகளில் இருந்து அதன் நன்மை, தீமைகளை தீர்க்கமாக எடை போட்டு பார்த்த பின்பே நாம் எமது முடிவுகளை எடுத்திருக்கின்றோம். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் அரசியல் ரீதியான அனுபவங்கள் எம்மைப் போல பலருக்கு இருந்தாலும், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் கீழ் சமூகத்துக்கான எமது கட்சியின் பேரம் பேசும் சக்தியை முதலில் நிரூபித்தவர்கள் நாங்களே. இரண்டாவது நிறைவேற்று ஜனாதிபதி தேர்தலின் போதே பேரம் பேசும் சகதியை நிரூபித்தோம்.

### ஜே.ஆரின் வழியில் சர்வாதிகாரிகள்

1977 இல் கிடைத்த அதீத பெரும்பான்மையின் மூலம் பதவிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனவுக்கும் வந்ததுபோலவே தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் வந்தது. பதவியை நீடித்துக்கொள்ளும் நப்பாசை ஜே. ஆருக்குப் பின்பு சந்திரிக்காவுக்கு வந்தது. மஹிந்தவுக்கும் இருந்தது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் இரண்டாவது பதவிக்காலத்தில் அவர் சர்வாதிகாரியாக மாறுவார் என எமது மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் கூறிச்சென்றதற்கு ஒப்ப, அதனை நாம் அனுபவ பூர்வமாக உணர்ந்திருக்கிறோம். நாம் ஆதரித்த அவரை இரண்டாவது தவணைப் பதவிக்கு ஆதரிக்கத் தயங்கினோம். நாம் ஆதரித்த தலைவரை இரண்டாவது தடவை ஆதரிக்க தயங்கியதை விட, நாம் ஆதரிக்காத தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவை நிறைவேற்று அதிகாரமுள்ள பதவிக்கு வருகின்றமை பற்றி நாம் எவ்வளவுக்குத் தயங்க வேண்டும்?

ஜனரஞ்சகமாக மக்கள் ஆதரவுடன் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தன்னுடைய பதவிக்காலத்தை நீடித்துக் கொள்ளும் நோக்கில் சிறிமாவின் குடியுரிமையைப் பறித்ததோடு சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி யினரையும் விடுவித்தார். அப்படியொரு நிலை ஜே.ஆருக்கு ஏற்பட்டது. அப்போது இவ்விடயங்களை எதிர்க் கட்சியினர் எவ்வாறு பார்த்தனர் என்பதை நாம் அறிவோம்.

### முஸ்லிம் காங்கிரஸ் செய்து காட்டியது

ஜனரஞ்சகமான அத் தலைவர், தான் பதவிக்கு வந்த நான்கு வருட காலத்தில் சர்வாதிகாரியாக மாறி லட்சக் கணக்கானவர்களின் வேலையிழப்புக்கும் காரணமாகவிருந்தார். ஜனநாயகத்துக்கு விரோதமாகச் செயல்பட்ட சூழ்நிலைகளுடன் தெற்கில் தோன்றிய கிளர்ச்சி, வடக்கில் போர் என்ற நிலையில், பிரேமதாஸவை ஜனாதிபதி தேர்தலுக்கு அவர் நியமித்தார் தோற்றுப் போவார் தோற்றுப் போகட்டும் என்ற நோக்கில் ஜனாதிபதி அபேட்சகருமாக்கப்பட்ட பிரேமதாஸாவை ஆதரித்து அவரை அன்று வெல்ல வைத்துக் காட்டியது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸே.

ஜனாதிபதி பிரேமதாஸவின் காலத்தில் அவருக்கு எதிராகவும் பல பூகம்பங்கள் கிளப்பப்பட்டிருந்தன. ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை முதலானவை கொண்டுவரப்பட்டன. லலித் அத்துலத் முதலி, காமினி திஸாநாயக்க போன்றவர்கள் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டனர். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தமது நாட்டில் தொடர்ச்சியாக சவாலுக்கு உட்பட்டே வந்திருக்கிறது. இந்த முறைமையால் அப்பதவி சார்ந்தவரின் கட்சிக்கு முரண்பாடுகளும், உட்கட்சி ஜனநாயகம் பற்றிய மோதல்களும் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் ஏனைய கட்சிகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை வரிசைக் கிரமமாக 25,12,6 என தங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்த அரசாங்கத்துக்கு பறிகொடுத்திருக்கின்றன. இவ்வாறு பறிகொடுத்திருக்கின்றமை இந்த கட்சிகளுக்குள் ஒரு ஒற்றுமையை காட்டுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களை பறிகொடுத்ததன் பழியைத் தீர்க்க வேண்டிய தேவையும் எமக்கு இருக்கிறது. ஆனால் இது மட்டும்தான் தற்போதைய ஜனாதிபதியை எதிர்க்க காரணமல்ல.



எந்தக் கட்சி நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைக் கொண்டு வந்ததோ அந்தக் கட்சிக்குள் இருந்து அம்முறைமையை ஒழிக்க பாடுபட்ட லலித், காமினி ஆகியோரினால் உருவாக்கப்பட்டிருந்த கட்சியின் ஊடாகவே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் நோக்கில் பொது வேட்பாளராக சரத் பொன்சேகா கொண்டு வரப்பட்டிருக்கிறார். இதற்காக கூட்டுச்சேர முடியாதவர்கள் எனக் கருதப்பட்ட எல்லோரும் ஒன்று சேர்ந்து இன்று முயற்சித்துக் கொண்டிருப்பது ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கே. அன்று மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்த நோக்கத்திற்காகவே ஜே.வி.பி சேர்ந்திருந்தது. இப்போது ஐ.தே.க, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் சரத் பொன்சேகாவுக்கு ஜே.வி.பி ஆதரவளிக்கிறது -என்றார்.

(அ)

# அங்குலானை இளைஞர்கள் கொலை குறித்து அடிப்படை மனித உரிமை மீறல் மனுத்தாக்கல்

கொழும்பு, டிசெ. 4

அங்குலானைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட இரு இளைஞர்களினதும் தாய்மார்கள் சுமார் 30 லட்சம் ரூபா நஷ்ட ஈடு கோரி நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

அங்குலானப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் படுகொலை செய்யப்பட்ட தினேஸ் தரங்க பெர்னாண்டோ மற்றும் தனுஸ்க உதயகாந்த ஆகியோரது தாய்மார்களே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த இரண்டு இளைஞர்களது தாய்மாரினால் முன்வைக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் வழக்கு விசாரணைகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதியளித்துள்ளது.

இந்த மனுவில் அங்குலானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 17 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அங்குலானப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட தமது புதல்வர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளமையை தாய்மார் தமது அடிப்படை உரிமை மீறல் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் படுகொலையினால் ஏற்பட்ட பாரிய இழப்பிற்கு நஷ்ட ஈடாக 30 லட்சம் ரூபா வழங்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (சி)







மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளையின் சேவை நிலையம் ஒன்று கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் எச்.எஸ்.தர்மசிறி சேவை நிலையத்தை நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், சேவை [illegible] ஆகியோர் நிற்பதை முதலாவது படத்தில் காணலாம்.

மக்கள் வங்கியின் சேவை நிலையத்தில் முதலாவது [illegible] வங்கிப் பணிப்பாளர் டி.ஜே.டி.ஜெயக்கொடி ஆரம்பித்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட வங்கிப் பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோரை அடுத்துள்ள படங்களில் காணலாம். (50-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சுடர் 63

# இறுதி மாதிரி வினாத்தாள்கள்

## தொகுதி II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I 22-T-I

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

* பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. பகைவனுக்கு இடையூறு நேரின் அவனுக்கு ஊராண்மை செய்பவனே சிறந்த வீரன். இங்கு ஊராண்மை என்பதன் ஒத்த கருத்துச்சொல்,
1) பொல்லாமை. 2) சான்றாண்மை.
3) உபகாரம். 4) ஊராட்சி.

02. "கம்பன் வம்பு செய்பவன்" இங்கு வரும் வம்பு என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
1) நன்மை. 2) பேராசை. 3) தீமை. 4) புதுமை.

03. "ஆழிவாய்ச் சத்த மடங்காதோ" என்பதில் வரும் ஆழி என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
1) ஆழம். 2) ஆனந்தம். 3) கடல். 4) குதிரை.

04. "எல்லோரும் தங்கள் உரிமைகளைப் பெற்றுச் சுயாதீனமாகவே வாழ விரும்பு கின்றனர்." சுயாதீனம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
1) உதாசீனம். 2) கவனயீனம். 3) சுதந்திரம். 4) பாராதீனம்.

05. "இளையோர் மூத்தோரை வைதல் பண்புடைய செயலன்று" வைதல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
1) வாழ்த்துதல். 2) இகழ்தல். 3) வணங்குதல். 4) மன்னித்தல்.

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

06. ஒருவர் தானே தன்னைப்பற்றி எழுதும் வரலாறு,
1) சிறுகதை. 2) சுயசரிதை. 3) நெடுங்கதை. 4) முன்னுரை.

07. தபோதனர் வசிக்கும் இடம்,
1) கானகம். 2) குடிசை.
3) ஆச்சிரமம். 4) அன்னசாலை.

08. "இது டிஜிடல் உலகம்" டிஜிடல் என்ற சொல்லுக்குரிய தமிழ் வடிவம்,
1) அதிரி. 2) எண்மானம்.
3) இறுவெட்டு. 4) தொலை அணுகி.

09. மாவின் இளமைப் பெயர்,
1) வடு. 2) பிஞ்சு. 3) கச்சல். 4) இளவு.

10. இயற்கை அனர்த்தங்களினால் இருப்பிடங்களை இழந்தோர் தங்கியிருக்கும் இடம்,
1) பாசறை. 2) கோயில்.
3) பாடசாலை. 4) அகதிகள்முகாம்.

11. காலையிலோ பகலிலோ கூடும் சந்தை,
1) உலக சந்தை. 2) அல்லங்காடி. 3) நாளங்காடி. 4) [illegible]

12. குற்றம் புரிந்தாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்[illegible]ார் தடுத்து வைக் கப்படும் இடம்,
1) சிறைக்கூடம். 2) அகதிமுகா[illegible]
3) விளக்கமறியல். 4) அநாதையில்லம்.

13. இலை குழைகளினால் வேயப்பட்ட குடிசை,
1) அன்னசாலை. 2) பன்னசாலை. 3) பாசறை. 4) ஆச்சிரமம்.

14. குயில் கூவும் என்பதுபோல மயில் ............................
1) கத்தும். 2) அகவும். 3) கரையும். 4) கேரும்.

15. "அருங்காட்சியகம்" என்னும் சொல்லின் ஆங்கில வடிவம்,
1) பார்லிமென்ட். 2) பார்ட்டி. 3) றூயின்ஸ். 4) மியூசியம்.

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

16. "காற்றாய்ப் பறத்தல்" என்ற மரபுத்தொடரின் கருத்து,
1) விரைந்து செல்லல். 2) ஆகாயத்தில் பறத்தல்.
3) பட்டம் விடல். 4) காற்று விசுக்குதல்.

17. "வயிற்றுப் பிழைப்புக்காக நீ கரடி விடுகிறாய் என்பது எனக்குத் தெரியும்." கரடிவிடுதல் என்ற மரபுத்தொடரின் கருத்து,
1) இச்சகம் பேசுதல். 2) பொய்யைக் கட்டிக்கூறுதல்.
3) கரடியைக்கொண்டு விளையாட்டுக்காட்டுதல்.
4) அச்சுறுத்திக் காரியம் சாதித்தல்.

18. "ஆனைக் கொருகாலம்; பூனைக்கொரு காலம்" என்னும் கருத்துடைய வேறொரு பழமொழி,
1) ஆனைக்கும் அடி சறுக்கும்.
2) ஏற்ற முண்டானால் இறக்கமுண்டு.
3) செட்டியாருக்கு ஒரு காலம், சேவகனுக்கு ஒரு காலம்.
4) சேற்றிலே புதைந்த யானையைக் காக்கையும் கொத்தும்.

19. நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த ஒன்றைப் பெற்றுக்கொண்டவனின் மன நிலையை விளக்க பொருத்தமான உவமைத்தொடர்,
1) பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல.
2) ஆலையில் அகப்பட்ட கரும்பு போல.
3) முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போல.
4) வாடும் பயிருக்கு வான் மழைபோல.

20. அறம், பொருள், இன்பம், வீடு ஆகியன,
1) புருடார்த்தம். 2) மந்திரம்.
3) அறக்கட்டளை. 4) காப்பியம்.

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

21. 'ப' என்ற எழுத்து உச்சரிப்பில் வேறுபடும் சொல்,
1) நாம்பன். 2) ஆம்பல். 3) கோபம். 4) சம்பல்.

22. "கவிதையாற் பெறும் பயன்" என்பதில் இடம்பெறும் இடைச்சொல் எது?
1) கவிதை. 2) ஆல். 3) பெறும். 4) பயன்.

23. மாம்பழம் என்பது,
1) தோன்றல் விகாரம். 2) திரிதல் விகாரம்.
3) கெடுதல் விகாரம். 4) இயல்புப் புணர்ச்சி.

24. "தங்கக்காப்பு" என்பது,
1) முதலாம் வேற்றுமைத்தொகை. 2) 2ஆம் வேற்றுமைத்தொகை.
2) 3ஆம் வேற்றுமைத்தொகை. 4) 4ஆம் வேற்றுமைத்தொகை.

25. கூட்டுப்பெயர் அல்லாதது,
1) வானொலி. 2) நீர்வீழ்ச்சி. 3) இரும்பு. 4) பாடசாலை.

26. பின்வருவனவற்றுள் வினையால் அணையும் பெயர்,
1) செய்த. 2) வந்த. 3) வந்தவர்கள். 4) போ.

27. பெயராகவும் வினையாகவும் வழங்கும் ஒரு சொல்,
1) முள்ளி. 2) கதலி. 3) மலர். 4) சிரி.

28. துணைவினை - எதில் இடம்பெறுகிறது,
1) படம் பார்த்தான். 2) கண்ணால் பார்த்தான்.
3) அவளைப் பார்த்தான். 4) தப்பப் பார்த்தான்.

29. "நல்லன் என்பது,
1) தெரிநிலை வினை. 2) வினையாலணையும் பெயர்.
3) தொழிற்பெயர். 4) குறிப்பு வினைமுற்று.

30. "பழமரம் நாடும் பறவையிற் படர்வேன்" என்பதில் வந்துள்ள உவமைச் சொல்,
1) மரம். 2) நாடு. 3) பறவை. 4) படர்வோன்.

* பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவுசெய்க.

31. மனிதன் படைக்கும் இலக்கியம் காலத்திற்கேற்ப புதிய வடிவங்களைப் பெற்ற போதிலும், பழைய இலக்கியங்களின் தொடர்பையும் அடிப்படையையும் விடுவ தில்லை. அவற்றையே இலக்கிய மரபு என்றும் கூறுதல் வழக்கம்.
1) மனிதன் புதிய இலக்கியம் படைக்கிறான். அவை மாறிவரும்.
2) பழைய இலக்கியங்களின் தொடர்போடு புதிய இலக்கிய வடிவங்கள் வரு கின்றன.
3) இலக்கிய மரபு மாறாது இருக்கும்.
4) பல்வேறு வடிவங்கள் இலக்கியத்தில் உண்டு.

32. மனித சமுதாயத்தின் மிகத்தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பமே ஆகும். இது எல்லாச் சமுதாயங்களிலும் எல்லாக் காலங்களிலும் நிலவிவருகிறது. இன்று நூற்றுக்கணக்கான சமுதாயங்கள் காலங்காலமாகப் பல்வேறு நிறுவனங் களை ஏற்படுத்திக்கொண்டு அவற்றின் அமைப்பாலும் செயலாலும் வேறுபடு கின்றன.
1) அமைப்பாலும் செயலாலும் வேறுபடும் சமுதாய நிறுவனங்கள் இன்று அதிகம்.
2) நூற்றுக்கணக்கான சமுதாய நிறுவனங்கள் அன்று இருந்தன.
3) மனித சமூகம் மிகத்தொன்மையானது.
4) குடும்பம் ஒரு சமுதாய அலகு என்பதில் ஐயமில்லை.

* பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப்பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

33. நான் உங்களோடு ஒரு காலும்,
1) சேரமாட்டேன். 2) சேரமாட்டோம்.
3) சேருவேன். 4) சேரமாட்டீர்கள்.

34. துறவுக்கோலம் பூண்டவர் ஒவ்வொருவரும்,
1) நல்லவனல்லன். 2) நல்லவரல்ல.
3) நல்லவரல்லர். 4) நல்லவரன்று.

35. "நீ வசதிக்கட்டணம் செலுத்திவிட்டியா?" என்று அதிபர் கேட்டபோது, மாணவன்,
1) தான் வசதிக்கட்டணம் செலுத்திவிட்டேன் என்றான்.
2) தான் வசதிக்கட்டணம் செலுத்திவிட்டது என்றான்.
3) "நான் வசதிக்கட்டணம் செலுத்திவிட்டான்" என்றான்.
4) "நான் வசதிக்கட்டணம் செலுத்திவிட்டேன்" என்றான்.

36. மிகுந்த மகிழ்ச்சியால் அவளது மனம்,
1) கணகணத்தது. 2) கிளுகிளுத்தது.
3) தடதடத்தது. 4) விறுவிறுத்தது.

* பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்பு வதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

37. வாக்குச் சாவடியில் .................. செய்ய முற்பட்டவர் அதிகாரிகளிடம் அகப் பட்டுக்கொண்டார்.
1) வேலை நிறுத்தம். 2) கலப்படம்.
3) ஆள்மாறாட்டம். 4) வாக்குமூலம்.

38. புதிய நூலொன்றை வாசிக்கத் தொடங்கும்போது அதன் உள்ளுரையை ........... ஒரு முறை பார்ப்பது நன்று.
1) வெள்ளோட்டமாக. 2) கண்ணோட்டமாக.
3) சுற்றோட்டமாக. 4) மேலோட்டமாக.

11ஆம் பக்கம் பார்க்குக....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I தொடர்ச்சி.....

39. தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முதன்முறையாக நடத்திய .................. விழாவிலே தமிழறிஞர் சிலருக்குக் கௌரவப்பட்டம் வழங்கியது.
1) பரிசளிப்பு. 2) பட்டமளிப்பு. 3) நூற்றாண்டு. 4) முத்தமிழ்.

40. கீழே வாக்கியங்கள் ஒழுங்கற்றுக்கிடக்கின்றன. அவற்றை ஒழுங்குற வைத்தாற் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.
அ - அவனுக்கு, பிற உயிர்களுக்கு இல்லாத பகுத்தறிவு இருக்கிறது.
ஆ - பஞ்சபூதங்களும் அவன் வசப்பட்டு அவனுக்கு ஊழியஞ் செய்துகொண்டு நிற்கின்றன.
இ - உயிரினங்களுக்குள்ளே ஆறறிவு படைத்த மனிதனே சிறப்பு மிகுந்தவனாக விளங்குகிறான்.
ஈ - மனிதன் தன் பகுத்தறிவினைத் துணையாகக்கொண்டு அரிய பல காரியங்களை நிறைவேற்றி வருகிறான்.
உ - மிகச்சிறிய அணுவுக்குள்ளும் அவனுடைய கண் ஊடுருவிச் சென்றுவிட்டது.
1) ஆ, இ, அ, உ, ஈ 2) இ, அ, ஈ, ஆ, உ
3) ஈ, ஆ, இ, அ, உ 4) உ, ஆ, இ, அ, ஈ

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II 22-T-II

01. சுருக்கமான விடை எழுதுக.
01) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
ஒன்றன்றிரண்டன்று
02) ''அப்பா, நட்சத்திரங்களுக்குக் கூட அப்பா உண்டோ?'' இவ்வாக்கியத்தில் வந்துள்ள இடைச்சொல் எது?
03) நந்திச்சீ ராமனுடைய நல்நகரில் நல்நுதலைச் சந்திச்சீர ஆமாகில் தான். இங்கு வந்துள்ள ''நுதல்'' என்றால் என்ன? யாரைக் குறிக்கின்றது?
04) வா கண்ணே உள்ளே போகலாம் இருட்டிப் போய்விட்டது என்று அம்மா அழைக்கிறாள் - இதில் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.
05) பின்பற்று, சுட்டிக்காட்டு, வெற்றியடை என்பவற்றிலுள்ள வினையும் வினையும் சேர்ந்த கூட்டு வினை எது?
06) துண்டுப்பிரசுரத்தை எழுதுவதற்கான அணுகுமுறைகள் இரண்டு தருக.
07) அமைச்சரவை ஜனாதிபதியால் கலைக்கப்பட்டது-இதனைச் செய்வினை வாக்கியமாக மாற்றுக.
08) நம்முன்னோர் இயற்கையில் முருகைக் காண விழைந்தமை கண்கூடு. இதில் உள்ள தொழிற்பெயர் எது?
09) வில்லுப்பாட்டின் அமைப்பு எப்படியிருக்கும்?
10) ''குழுஉக்குறி'' என்றால் என்ன? உதாரணம் தருக.

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.
அ. இலங்கையை விட்டும் வெளியேறி உலகெங்கும் வாழும் தமிழ் மக்களும் இலக்கியங்களைச் செய்கின்றார்கள். சஞ்சிகைகள், பத்திரிகைகள், கவிதை, சிறுகதை, நாவல், நாடக முயற்சிகள், நூல் வெளியீடுகள் என்பன இவ்வகையில் அடங்கும். இவற்றைப் 'புலம்பெயர் இலக்கியம்' என்கிறோம். இவற்றை விளக்கும் வகையான ஒரு கட்டுரை.
ஆ. நீர் வாழும் பிரதேசத்தில் அடிக்கடி நீர் சந்திக்கும் மனிதனது தோற்றம் குணாதிசயங்கள் அவனது வேடிக்கைச் செயல்கள் என்பவற்றை விவரித்து ஒரு விவரணக் கட்டுரை.
இ. இரவு பகலென்று பாராது கண்விழித்துக் கண்ணை இமை காப்பது போல எம்மைக் காத்து வளர்த்தவள் தாய்தான். அவள் இல்லாமல் நாம் இல்லை; அவளது பாதத்திலேதான் சுவர்க்கமுண்டு. இவ்விடயத்தைப் புலப்படுத்தும் வகையில் ஒரு சிறுகதை.
ஈ. விண்வெளி ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதனால் நன்மைகளே அதிகம் கிடைக்கின்றன எனக் கருதும் ஒருவனுக்கும், தீமைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக் கருதும் மற்றொருவனுக்குமிடையில் இடம்பெறும் உரையாடல்.

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

ஒருவருடைய முன்னேற்றத்தையும் இனத்தின் நலனையும் அளக்கும் காரணியாக எமது பண்பாடு கல்விக்கு மிக முக்கிய இடத்தை அளித்துள்ளது. பொருளாதார, சமூக அபிவிருத்தியை நிர்ணயிக்கும் பிரதான காரணியாகிய கல்வியில் உள்ள பயனுறுதிவாய்ந்த இயல்பு பற்றி எமது மனதினுள்ளே வலிமையான நம்பிக்கை உள்ளது. ஆகவே, கல்வி மனித வள முதலீடாகக் கருதப்படும் அதேவேளை அபிவிருத்தி அடையும் நாடுகளில் பொருளாதார சமூகப் பிரச்சினைகள் பலவற்றை இம் முதலீட்டின் மூலம் தீர்க்க இயலும் எனவும் நம்பப்பட்டது. அபிவிருத்தியடையும் இனத்தை அபிவிருத்தியடைந்த இனமாக மாற்றுகையில் கல்விமுறை வியத்தகு விதத்தில் செயற்படலாம் என்ற நம்பிக்கை அண்மைக்காலம் வரைக்கும் எம்மிடம் இருந்தது. எனினும், அபிவிருத்தியடையும் பல நாடுகள் இவ்வெடுகோளின் செம்மை தொடர்பாக இன்று பலமான ஐயத்தைக் கொண்டுள்ளன.

கல்வியை மாணவர்களின் தேவைகளுக்குப் பொருத்தமாக்குதல், அர்த்தமுள்ளதாக்குதல், கல்வியைப் பெறும் பெரும்பாலான மாணவர்களுக்குக் கிடைக்கத்தக்க வேலைவாய்ப்புக்களுக்குப் பொருத்தமாகக் கல்வியைத் தயார்செய்தல் என்னும் விடயங்களை நிறைவேற்ற முற்படுகையில் நாடுகள் பெரும் தடைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

04. பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

காரிருட் சாளரக் கதவைக் கிழக்கிலே
காலையின் பொன்னொளிக் கைகள் திறக்கவும்
பாரினைச் சூரியன் பார்த்துக் களித்திடப்
பகலென்ற தேரிலே பவனிக்கேறினான்.

ஓர் நொடிக் கோர் முறை உலகை மயக்கிட
ஒப்பில்லாப் புதுப்புது ஓவியம் பற்பல
கார்கொண்ட கீழ்த்திசை காட்டக் களித்ததால்
கடலும் குதூகலம் கானம் இசைத்தது.

கண்ணைப் பறித்திடும் வண்ணக் கதிர்களால்
கத்தும் அலைக்கெலாம் முத்தம் கொடுத்தெழும்
விண்ணின் விளக்கிடம் விட்டில்கள் தாவல்போல்
விரைகின்ற படகுகள் கரையைக் க[illegible]

1) இக்கவிதையில் கவிஞர் வர்ணிக்கும் காட்சியைச் சுருக்கமாக உமது சொற்களில் கூறுக.
2) கடல் ஒலி எழுப்புவதற்குக் கவிஞர் கூறும் காரணம் என்ன?
3) கரையை விட்டும் கடலில் புறப்பட்டுப்போன படகுகளுக்குக் கவிஞர் கூறும் உவமையை விளக்குக.
4) ''காரிருட் சாளரக் கதவைக் கிழக்கிலே
காலையின் பொன்னொளிக் கைகள் திறக்கவும்''
எனும் அடியில் நீர் காணும் நயங்கள் எவை?

05. உமது பாடசாலையின் பழைய மாணவரான அவர், இன்று பிரதேச வைத்தியப் பொறுப்பதிகாரியாகக் கடமை பார்க்கின்றார். மாணவர் மன்றத்தில் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்துவதற்காக அவரை அழைக்கும் வகையில் 100 சொற்கள் கொண்ட ஒரு கடிதத்தை ஆக்குக.

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III 22-T-III

* 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.

01. சுருக்கமான விடை தருக.
1) குடிதழீஇக் கோல் ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.
அ. 'தழீஇ' என்பது எவ்வகை அளபெடை?
ஆ. இக்குறட்பாவின் கருத்தை எழுதுக.
2) ''உருவத்தினால் சிறிதாக இருப்பதைக்கொண்டு ஒருவரை மதியாமல் இருக்கக்கூடாது'' என்பதற்கு ''மடல்பெரிது....'' என்னும் வாக்குண்டாம் பாடலில் கூறப்படும் எடுத்துக்காட்டுக்களைத் தருக.
3) ''..... இராமாயணம் என்ற பக்தி வெள்ளம் இன்று தமிழகமெல்லாம் பாய்ந்து தெய்வமணம் பரப்பி வருவது நீங்கள் அறியாத ஒன்றல்ல.....'' இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
4) கவிதை ஒன்றை வாசிக்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் மூன்று தருக.
5) ''நிறைகுடம் நீர் தழும்பல் இல்'' என்ற நீதிப்பாடல் அடிமூலம் நிறைகுடம், குறைகுடம் யார் யாருக்கு எவ்வணி மூலம் விளக்கப்பட்டுள்ளது?
6) கல்வியில் சிறந்து விளங்கிய முற்காலப் பெண்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
7) ''மன்னிக்கவேண்டும் ஐயா, எனக்கு ஒருநாள் அவசர லீவு வேண்டும்'' இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
8) தமயந்தியின் குணவியல்புகள் இரண்டு தருக.
9) 'ஒரு பதிவிரதை சரித்திரம்' என்னும் கதை எந்நூலில் இடம்பெற்றுள்ளது? இதனை எழுதியவர் யார்?
10) பசிவந்ததும் விட்டோடிப்போகும் பத்து அம்சங்களையும் நல்வழிப் பாடலிலிருந்து எடுத்துக் காட்டுக.

02. பின்வரும் செய்யுட்பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.
அ. ஓடுகின்ற மேகங்கள்! ஓடாத தேரில் வெறும்
கூடு வருகுதென்று கூறுங்கள் - நாடியே
நந்திச்சீ ராமனுடை நல்நகரில் நல்நுதலைச்
சந்திச்சீர் ஆமாகில் தான்.

ஆ. மல்லல் மடகில் மறுநா குடனாகச்
செல் லும் மழவிடைபோற் செம்மாந்து - மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன்.

02. இ. நான் உம்முடைய யோக வித்தையைக் கற்றிலேன்; ஒருநாளும் சந்நியாசி வேஷம் தரித்திலேன்; நாட்டை நீங்கிக் காட்டிலும் புகுந்திலேன்; ஆயினும் நான் அறிந்தது, ஆசையை அறவே வெறுத்து என்தொழிலைப் பழுதுறாமல் செய்துவருவதனால் உண்டாகியதாம் என்றான்.

ஈ. நம்மை மூடிக்கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டவர்களாகி, நம் அறிவை இழந்து, அழியாச் செல்வத்தை அடைய முடியாமல், நிலையின்றி அழிந்துபோகும் பொருள்களேயே நிலையாகப் பிழைபட நினைத்து, அவற்றைப் பெறுவதிலும், அவற்றை நுகர்வதிலும் காலத்தைக் கழித்துவருகிறோம்.

03. 'கம்பன் கவிச்சக்கரவர்த்தி' என்பதற்கு ஆதாரமாகக் கவிச்சக்கரவர்த்தி என்ற நாடகத்தில் கையாளப்படும் சான்றுகளில் மூன்றினை விவரிக்குக.

அல்லது

தமயந்தியின் அழகும் நல்வேந்தர் வெட்கப்படுவதும் புலவரால் காட்டப்படும் விதம்.

04. சேரமன்னனது யானைப்படையின் வீரமும் சேரமன்னனின் வீரமும் முத்தொளாயிரம் பாடப்பகுதியில் வெளிப்படும் விதம்.

அல்லது

ஒருவனின் சொல்வன்மை எவ்வாறு அமைதல்வேண்டும்? எவ்வாறு அமைதல் கூடாது? என்பவற்றைச் 'சொல்வன்மை' என்ற அதிகாரத்தில் இருந்து ஆராய்க.

* 5-7 வரையான வினாக்களுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

05. ''நாட்டார் பாடல்கள் மனித வாழ்வுடன் பின்னிப்பிணைந்தவை.'' இக்கூற்றினைத் தொழிற்பாட்டு, கிட்டியடித்தல், மீன்பிடிப்பாடல் என்பவை கொண்டு விளக்குக.

06. பாரதியார் கவிதைகளில் காணப்படும் சிறப்புக்களை 'பாரதியார் கவிநயம்' என்ற கட்டுரையின் ஊடாக விளக்குக.

07. 'கடற்புறம்' என்ற கவிதையில் ஜெயபாலன் மீனவர் வாழ்வைக் காட்டும் விதத்தினை விளக்குக.

-நிறைவுற்றது-

ஆசிரியர்:- S.M.பிர்தௌஸ்,
கல்விச்சுடர் வளவாளர், அம்பாறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோல் வைத்தியம்

யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொழும்பில் இருந்து புதிதாக நியமிக்கப்பட்ட தோல் வைத்திய நிபுணர் (Consultant Dermatologist) தினமும் சன்றைஸ் மெடி கிளினிக்கில் பார்வையிடவுள்ளார்.

இடம்: **சன்றைஸ் மெடி கிளினிக்,**
(பஸ்நிலைய வைரவர் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பே. 0212226069

(92705)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலய ஆசிரியரான
**திரு.நடராஜா ஜெயரூபன்**
அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 3க்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். கல்விப்புலத்தில் இவர் மென்மேலும் உயர்வுகள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்தி நிற்கும்

யா/நாவற்குழி மகா வித்தியாலய சமூகம்.

(92739)



## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 28 . 09 . 1957



ஆண்டவன் அடியில் 06 . 12 . 2006

### அமரர் பரமகுரு நவரட்ணம்

**(K.P.N.சந்திரன்)**

*திதி: துதியை (04.12.2009)*

சந்திரன் என்ற மங்காத பெயர்கொண்ட மாணிக்கமே!
ஆண்டுகள் மூன்று அருளாமல் சென்றதையா!
ஆற்றொணாத் துயரில் அமிழ்ந்தித் தவிக்கின்றோம்
வேண்டுமென்றோ நீரும் விண்ணுலகம் உறைகின்றீர்,
சொந்தங்களை உறவு சொல்லி அணைப்பாயே
காலனவன் வந்தானோ கார்வடிவில்
படமாகிப் போனாயோ.... மறக்கமுடியவில்லை.

*கட்டுக்காணி வீதி,*
*சாவகச்சேரி.* (92742) குடும்பத்தினர்.


## ஒளி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம்,டிசெ.4

மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையின் ஒளிவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் எஸ்.நோபேட் உதயகுமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கமும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி ஆர்.உதயரட்ணமும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை மாரீசன்கூடல் பங்குத்தந்தை எம்.எம்.ஏச்.ஞானேந்திரன் அடிகளார் நிகழ்த்தவுள்ளார்.

(50-204)

## இடம் மாறுகிறது அமெரிக்க விசா நிலையம்

கொழும்பு,டிசெ.4

கடந்த நவம்பர் 23ஆம் திகதி முதல் கொழும்பில் அமைந்திருந்த அமெரிக்க விசா வழங்கும் - ரி.ரி. சேர்விஸ் லங்கா பிரைவேட் லிமிட்டட் இடம்மாற்றப்பட்டுள்ளது.

தற்போது இந்த விசா வழங்கும் நிலையம் இல. 51ஏ, தர்மபால மாவத்தை கொழும்பு - 07இற்கு இடம் மாற்றப்பட்டு இயங்கி வருகின்றது. இடமாற்றம் நடைபெற்ற போதிலும் தொலைபேசி இலக்கங்களிலும் , மின்னஞ்சல் முகவரிகளிலும் எதுவித மாற்றமும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்காக விசா நிலைய தொலைபேசி இலக்கமான 2437840 அல்லது 2437841 என்பவற்றில் தொடர்புகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


### தென்னம்பிள்ளை விற்பனைக்குண்டு

நல்லின தென்னம்பிள்ளைகளும், குறைந்த காலத்தில் பயன்கிடைக்கும் தென்னம்பிள்ளைகளும் உண்டு.

தொடர்பு: 0776592044 (92732)


## உதவிப்பணம் பெறுவோருக்கு

நவாலி,டிசெ.4

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுச்ன மாதாந்த உதவிப்பணம், காசநோய், புற்றுநோய் என்பவற்றுக்கான உதவிப்பணம் பெறுபவர்களது இந்த மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த தபாலகங்களுக்கு செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(50-204-100)

## முதியோர் சங்கங்களுடனான கலந்துரையாடல்

நவாலி,டிசெ.4

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த முதியோர் சங்கங்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து முதியோர் சங்க அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார்.

(204-100)


## மரண அறிவித்தல்

### பவளரட்ணம் சரசு மேற்றின்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறை மற்றும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சரசு என அன்பாக அழைக்கப்படும் இராசமணி சரசு மேற்றின் 02.12.2009 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆசீர்வாதம் பவளரட்ணத்தின் அருமை மனைவியும் சதீஸ்குமார் (சுவிஸ்), றம்சா, பிரதீபன் (லண்டன்), டிலான் (அவுஸ்திரேலியா), மேரிசின்சியா ஆகியோரின் பாசமிகு தாயும் ஜமுனா (சுவிஸ்), குமார் (ரெயிலர்), கல்பனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் சர்மி, சஞ்சை (சுவிஸ்), வினிஜா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி), பிரவீன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்) ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் நாகமணி மகேஸ்வரி, மல்லிகாதேவி, குஞ்சு, இராசன் (குணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசமணி, செல்வரதி, பிள்ளையம்மா, இராசதுரை, செல்வராசா, பாலு, சின்னத்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற நடராசா மற்றும் தேவா (பெயின்ரர்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.7, சென்மேரிஸ் முதலாம் ஒழுங்கை,
ஏ.வீ.றோட்,
கொழும்புத்துறை. (92750)

தகவல்:
பிள்ளைகள், மருமகன் - குமார்.



சிவமயம்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04.01.1934

இறப்பு 06.12.2006



# அமரர் தம்பையா குமாரசாமி

(உரிமையாளர் - த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
த.குமாரசாமி அன் சன்ஸ்)

**திதி: துதியை (04.12.2009)**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் பேணிப்பாதுகாத்து
எம்மை நல்வழிப்படுத்தி
இன்று வானுறையும் தெய்வமாகி
ஆண்டுகள் 3 சென்றாலும்
உங்களை நாங்கள் மறவோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
(த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்)

352, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/562895)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சாய்த் துறைமுகம்



முன்னைய காலத்தில் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படும் பொருள்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு இறங்கு துறைகளில் இறக்கி வணிகம் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அந்த வகையில் இந்தியாவிலிருந்து வள்ளங்களில் கொண்டுவரப்படும் கச்சா எண்ணெயும் ஒன்றாகும். அவ்வாறு கொண்டுவரப்படும் கச்சா எண்ணெய் கோட்டையடி துறைமுகத்தில் இறக்கப்பட்டு அங்கிருந்து ஏனைய பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. இந்தத் துறைமுகத்திற்கு கச்சா எண்ணெயே கொண்டுவரப்பட்டதால் கோட்டையடி துறைமுகம் எனப் பெயர் மறைந்து கச்சாய்த் துறைமுகம் எனப் பெயர்பெற்றது.

இந்த மடலில் கச்சாய்த் துறைமுகத்தைப் பற்றி ஆராயாமல் இப்பகுதியில் உள்ள கோட்டையடி என்னும் இடத்தைப் பற்றி ஆராய்வோம்.

கச்சாய் அம்மன் கோவிலுக்குத் தெற்குப் புறமாக கடற்கரையை அண்டிய நிலையில் ஒரு மணல் திட்டு காணப்படுகின்றது. கச்சாய் மண் அமைப்பை விட வித்தியாசமான மண் (செம்பாடு) அமைப்பைக் கொண்டு இந்த மணல் திட்டு காணப்படுகின்றது. இந்த மணல் திட்டின் கூரையில் ஒரு காவல் தெய்வமாக காளிகோவில் காணப்படுகின்றது.

இந்த மணல் திட்டியைப் பற்றி விசாரித்தபோது இது பல நூறு வருடங்களுக்கு முன்பாக குறிப்பாக கோட்டையடி மன்னர் காலம் தொடக்கம் இந்த மணல் திட்டு இருப்பதாகவும், இது முன்னைய மன்னர் காலத்தில் அரசர்கள் தங்கும் கோட்டையாகவோ அல்லது கடலுக்கு ஊடாகச் செல்லும் சுரங்கப் பாதையின் நுழைவாயிலைக் கொண்ட கட்டடமாகவோ இருந்திருக்கலாமென தமது முன்னோர்கள் தெரிவித்ததாக அப்பகுதி முதியவர்கள் தெரிவித்தனர். இந்த மணல் திட்டினை ஆராயச் சென்ற ஒரு சிலர் கருங்குழவிகளால் தாக்கப்பட்டதால் எவரும் அவ்விடத்திற்கு செல்வதில்லை எனவும் தெரிவித்தனர்.

இந்த மணல் திட்டிலிருந்து சில யார் தூரத்தில் பாதிரியார் குளம் காணப்படுகின்றதாகவும் இந்தச் சுரங்கப்பாதையூடாக வரும் மகாராணி இந்தக் குளத்தில் குளித்துவிட்டு காளியம்மனை வணங்கிச் சென்றதாகவும் தமது முன்னோர்கள் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது. இந்தச் சுரங்கப்பாதை எங்கிருந்து ஆரம்பிக்கிறது என்ற விவரம் எவருக்கும் தெரியாது எனவும் கூறப்பட்டது.

இந்தக்கோட்டையடியைச் சுற்றி சுமார் ஒரு மைல் தூரத்திற்கு எவரும் வசிப்பதில்லை எனவும் நீண்டகாலமாக இப்பகுதிக்கு எவரும் குறிப்பாக பெண்கள் எக்காரணம் கொண்டும் செல்வதில்லை. கோட்டையடி காளியம்மன் மிகவும் சக்திவாய்ந்தவர் என்பதால் எவரும் அங்கு செல்ல முயற்சிக்கவில்லை.

இந்த கச்சாய் கடல் வழியாக வணிகச் செயற்பாடுகள் வள்ளங்களில் மேற்கொள்ளப்பட்ட சான்றுகள் இங்கு காணப்படுகின்றன. இப்பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி என்ற வணிகர் கடலில் வள்ளங்களில் கொண்டுவரப்படும் பண்டங்களை தனது வீட்டுக்கு அருகில் பறிப்பதற்காக வீடு வரை வெட்டிய வாய்க்கால் அவரது பெயருடன் இன்றும் உள்ளது.

இதேவேளையில் பூநகரியில் கோட்டை அமைத்து வாழ்ந்த பூதத்தம்பி என்பவர் தனது பரிவாரங்களுடன் கெற்பேலி, பாலாவி போன்ற இடங்களுக்கு வேட்டைக்கு வருவதற்காக கடலில் வெட்டிய வாய்க்காலும் இன்றும் காணப்படுகிறது.

இந்தக் கோட்டையடி காளி அம்பாளுக்கு இப்பகுதி சமயப் பெரியாரின் முயற்சியினால் ஆலயம் அமைக்கப்பட்டு வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களில் பூசைகள் நடத்தப்படுகின்றன.

ஆலயத்தில் பூசைகள் நடத்தப்படுகின்ற போதிலும் மக்கள் ஆலய வழிபாட்டுக்குச் செல்வது மிகக் குறைவே எனவும் கூறப்பட்டது.

# தும்பு உற்பத்தி



தென்மராட்சிப் பிரதேசத்தில் முன்னைய காலத்தில் வருமானம் தரக்கூடிய தொழில்களில் தும்பு உற்பத்தித் தொழிலும் ஒன்றாகத் திகழ்ந்தன. இப்பிரதேசத்தில் விவசாயம், கடற்றொழில் ஆகியவற்றுடன் தும்பு உற்பத்தியும் பல குடும்பங்களின் குடிசைக் கைத்தொழிலாக இருந்தது.

சாவகச்சேரி தொடக்கம் கிளாலி வரையிலான கடலேரியில் பொச்சுகள் ஊறவைத்து வீடுகளிலேயே தும்பு உற்பத்தி செய்யப்பட்டன. பிரதேசத்தில் உள்ள தென்னந்தோட்டங்களில் தேங்காய், பொச்சு மட்டைகள் பெருமளவு கொள்வனவு செய்து வண்டில்களில் ஏற்றி வரப்பட்டு கடலில் ஊறவிடப்படும்.

ஊறிய பொச்சுக்களை எடுத்துவந்து தடியினால் அடித்து தும்பு உற்பத்தி செய்யப்பட்டன. கரையோரப்பகுதி மக்களின் குடிசைக் கைத்தொழிலாகவும் தும்பு உற்பத்தி செய்யப்பட்டது.

வியாபாரிகளால் தும்புகள் வீடுவீடாகச் சென்று கொள்வனவு செய்யப்பட்டு தும்பு உற்பத்தி பொருள்கள் செய்யும் இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் தும்பினைக் கொண்டு தும்பு உற்பத்திப் பொருள்கள் செய்வதற்கான நிலையங்கள் சாவகச்சேரியிலும், மீசாலையிலும் உருவாக்கப்பட்டன.

இந்த நிலையங்களில் பயிற்றப்பட்ட பெண் தொழிலாளர்கள் மூலம் கயிறுவகைகள், தும்புத்தடி, மிதிதுடைப்பங்கள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டன. அரசாங்கமே இந்நிலையங்களை நடத்தியமையால் பிரதேசத்தில் தும்பு உற்பத்தி செய்வோரின் தொகை அதிகரித்ததுடன் தும்பு உற்பத்தியாளர்கள் அதிகளவு வருமானம் ஈட்டத்தொடங்கினர்.

பயிற்றப்பட்ட பெண் தொழிலாளர்கள் மூலம் வருடாந்தம் யுவதிகளுக்கு கயிறுவகைகள், தும்புத்தடி, துடைப்பம் போன்ற உற்பத்தி செய்வதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்நிலையங்களில் ராட்டினங்கள் மூலம் கயிறுகள் உற்பத்தி செய்யப்பட்டன. அத்துடன் தும்பு உற்பத்திப் பொருள்களும் பெருமளவு உற்பத்தி செய்யப்பட்டு மாவட்டத்தின் தேவைகளுக்கு விநியோகிக்கப்பட்டன. தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்படும் தும்புப் பொருள்களுக்கு இணையாக இப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் தும்பு உற்பத்திப் பொருள்கள் மக்கள் மத்தியில் பாவனையில் இருந்தன. தனியார் துறையினரும் போட்டியாக தொழில் நிலையங்களை அமைத்து உற்பத்தியில் ஈடுபட்டனர்.

1996ஆம் ஆண்டு கடலேரி பொதுமக்களின் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டதையடுத்து குடிசைக் கைத் தொழிலான தும்பு உற்பத்தி வீழ்ச்சியடைந்தன. இதனால் ஆயிரக்கணக்கான தும்பு உற்பத்தியாளர்கள் தொழில்களை இழந்தனர். தும்பு உற்பத்தி இல்லாததனால் தும்புப் பொருள்கள் உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு கூரைகள் அற்றநிலையில் காணப்படுகின்றன.

கடந்த 2002, 2003 காலப்பகுதியில் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் கச்சாயில் தும்புத்தொழில் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அதுவும் காலப்போக்கில் செயலிழந்து போனது.

தற்போது கடலேரி பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளதால் மீண்டும் தும்புப் பொருள் உற்பத்தியை ஆரம்பிக்க உரிய திணைக் களத்தினர் நடவடிக்கை மேற்கொள்ள மாட்டார்களா?

## தென்மராட்சி வலம்



தொகுப்பு:- ஐயந்தன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மணிவிழாவும் சேவை நயப்பும்



## பல்லாண்டு காலம் வாழ்க!

யாழ்ப்பாணம் காரைநகரின் இதயமாக இயங்கும், அழகான கல்லூரி யாழ்ற்ரன் கல்லூரியாகும். இக் கல்லூரியில் பல்லாண்டு காலமாக கண்ணியம்மிக்க அதிபராக கடமையாற்றும் ந.பரமசிவம் அவர்கள் பாலிய வயது முதல் என் அன்புக்கும் பண்புக்குமுரியவர். கல்லூரியில் நடைபெறும் எவ்வகை நிகழ்ச்சியாயினும் என்னை அழைக்கத்தவறுவதில்லை. அப்படியொரு பண்பான பிணைப்பு அவரிடமுண்டு. மேன்மேலும் கல்லூரி வளர்ச்சிக்காக அவர் ஓய்வு பெறுவதை தவிர்த்து சில காலமேனும் அதிபராகக் கடமையாற்ற வேண்டும் என்பது எனது அன்பு அவா.

எனவே அவர் பல்லாண்டு காலம் வாழ எனது அன்பு ஆசியை தெரிவித்து எல்லாம் வல்ல கும்பநாயகியம்மனை இறைஞ்சி வாழ்த்தி மகிழ்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நா. ஞானசம்பந்த குருக்கள்**

## ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்க உழைத்தவர்



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் கடந்த பதினாறு ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சிறப்புமிக்க அதிபராக பணியாற்றி 17.11.2009 இல் ஓய்வுபெற்ற எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய திரு.ந.பரமசிவம் அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பெரதெனிய பல்க்லைக்கழகப் பட்டதாரியான திரு.பரமசிவம் அவர்கள் 1975ஆம் ஆண்டில் அரசாங்க கல்விச் சேவையில் சேர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாக தென் இலங்கையில் பணியாற்றி 1986 இல் யாழ்ற்ரன் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். அவர், அதீத தன்நம்பிக்கையுடனும் ஆளுமைமிக்க செயற்பாடுகளுடனும் தனது அதிபர் கடமையை புரிந்தார். காரைநகரில் மீளக் குடியமர்ந்தபின் நன்கு திட்டமிட்டு பௌதிக வளங்களையும் கல்வியின் தரத்தையும் விருத்தி செய்வதோடு ஒரு ஒழுக்கமான, பண்பான திறமையான மாணவ ஆசிரிய சமுதாயத்தை உருவாக்க உறுதியோடு செயற்பட்டார். இதனால் காரைநகரின் கல்வி வளர்ச்சிக்கு இப்போது யாழ்ற்ரன் கல்லூரி ஒரு முன் மாதிரியாக விளங்குகின்றது.

திரு. பரமசிவம் அவர்களின் சேவையை பாராட்டுவதோடு அவருடைய வாழ்வும்,கல்விப் பணியும் சிறக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**வே. தர்மரத்தினம் வாழ்நாள் பேராசிரியர்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## அர்ப்பணிப்பும் ஆற்றலும் தகைமையும் கொண்டவர்



எனது அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய அதிபர் ந. பரமசிவம் ஐயா அவர்கள் தமது 60 ஆவது அகவையை கொண்டாடுகின்ற இந்த வேளையில் சுமார் 25 வருடகால ஆசிரிய, அதிபர் சேவைகளில் பணியாற்றி இளைப்பாறுகின்றார். சைவமும் தமிழும் தழைத்தோங்கும் காரை மண்ணில் பிறந்து கற்றோரும் மற்றோரும் வியக்க ஆரம்ப, இடைநிலை,சிரேஷ்டநிலை கல்வியை காரைமண்ணிலேயே கற்றுயர்ந்து, பல்கலைக்கழக கல்வியை பேராதனை பல்கலைக்கழகத்திலும் பட்டப்பின் கல்வியை யாழ்.பல்கலைக் கழகத்திலும் கற்று யாவரும் மதிக்கும் கல்வியாளனாகவும் காரைமண் போற்றும் அதிபராகவும் சமூக சேவையாளராகவும் திகழ்கிறார்.

அதிபர் என்ற பதவிக்குரிய அர்ப்பணிப்பும், ஆற்றலும், தகைமையும், நிர்வாகத்திறமையும், கம்பீரமும் கொண்டவர் இவர். கனிவுடனும்,கண்டிப்புடனும் கூடிய சீரான கல்வி நிர்வாகத்தினால் யா/ யாழ்ற்ரன் கல்லூரியை யாழ். நகரக் கல்லூரிகளுக்கு நிகராகத் தலைநிமிர வைத்தவர். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அதிக கரிசனை கொண்டவர்.

கல்விப்பணிக்கு மேலதிகமாக சமூகப் பணியிலும் அதிபர் அவர்கள் கவனம் செலுத்தியிருந்தார். இதற்கு உதாரணமாக காரை அபிவிருத்திச் சபையில் இவர் ஆற்றிய, ஆற்றிவருகிற பணிகளைக் கூறலாம். தான் கொண்ட கருத்தில் தெளிவும் அதனை செயல் வடிவமாக்க, சமரசஞ் செய்து கொள்ளாத துணிவும் அவரின் தனித்துவம் என்பேன். கல்வி, சமூக பணிகளை விட நல்ல சமய ஒழுக்க சீலராகவும், பெரியோரும் இளையோரும் மதிக்கும் பெருந்தகையாகவும் திகழும் அதிபர் ந. பரமசிவம் அவர்களுக்கு அறுபதாவது பிறந்தின வாழ்த்தைத் தெரிவித்து மகிழ்வதோடு தனது ஓய்வு காலத்தில் காரைமண்ணுக்கு தொடர்ந்தும் கல்வி,சமூக பணிகளை ஆற்ற அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்தித்து பணிகிறேன்.

**இ.த. ஜெயசீலன்,**
**உதவி அரசாங்க அதிபர், காரைநகர்.**

## கற்றுணர்ந்த கல்வியாளர்



காரைநகர் பெற்ற தவப்புதல்வன், பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியாகி கற்றுணர்ந்த கல்வியாளர், தலைசிறந்த நிர்வாகி, எடுத்துக்காட்டுக்கோர் உத்தம அதிபர், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த வாய்மையாளர், நேர்மையாளர் என பரந்து நிறைந்த பண்பாளர் உயர்திரு. ந.பரமசிவம் அவர்கள். காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் தனக்கெனவோர் தனியான முத்திரை பதித்த சத்தியசீலர்;

பதினெட்டு ஆண்டுகளுக்கு மேலாக அதிபராகவிருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் ஒளிமயமான வாழ்விற்கு கல்வி ஒளியூட்டிய நேர்மையாளர். ''எண்ணித்துணிக கருமம்'' எனும் குறளுக்கு அமைய சிந்தித்துச் செயலாற்றும் செயல்வீரன். ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' எனும் அருள் வாக்கிற்கு அமைவாக அர்ப்பணிப்போடு பணியாற்றி ஓய்வுபெறும், உண்மையில் பாராட்டுவதற்கும், வாழ்த்துவதற்கும் பொருத்தமான அதிபர் உயர் திரு. ந. பரமசிவம் அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்சி யடைகின்றேன். ஆயிரமாயிரம் உயர் உள்ளங்கள் வாழ்த்தும் அதிபரின் ஓய்வுகாலம் எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளினால் மகிழ்ச்சிகரமாக அமைய வாழ்த்தி அமைகின்றேன்.

**மு. விசுவநாதன்,**
**செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சபை.**



## மணிவிழா நாயகன் "சேவை செம்மல்"

## உயர்திரு. ந. பரமசிவம்

*B.A. PGD. S.L.P.S- I, S.L.E.A.S - III*

*பிறந்த திகதி : 1949.11.17*

*ஆரம்பக் கல்வி :*
*யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்.*

*கனிஸ்ட இடைநிலை:*
*யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.*

*சிரேஸ்ட இடை நிலை :*
*யா/கலாநிதி. ஆ. தியாகராசா ம.ம.வித்தி, காரைநகர்.*

*உயர் கல்வி:*
*பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம்*

சேவை விவரம்:

- ★ *பொதுமுகாமையாளர், காரைநகர், ப.நோ.கூ .சங்கம் 13.03.1973- 31.08.1975*
- ★ *ஆசிரியர்: சிலா/அல்கிறா ம.வி. கொட்டராமுல்ல 09.10.1975- 31.01.1981*
- ★ *ஆசிரிய ஆலோசகர்: மினுவாங்கொட, கம்பஹா 01.02.1981 30.04. 1986*
- ★ *ஆசிரியர்: யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர். 01.05. 1986 - 31.01.1991*
- ★ *அதிபர்: யா/ வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர். 01.02.1991 - 09.08.1992*
- ★ *அதிபர்: யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர். 10.08.1992 -16.11.2009*
- ★ *இலங்கை கல்வி நிர்வாக சேவை 19.10.2009 -*
- ★ *சமூக சேவை: தலைவர், காரைநகர் அபிவிருத்திச்சபை, காரைநகர்.*

## சமூகத்தால் மறக்கப்பட முடியாதவர்



அதிபராகக் கடமை புரிவது வேறு. அதிபராகவே நடந்து கொள்வது வேறு. முதலாவது யாராலும் செய்ய முடிவது. இரண்டாவது சிலரால் மட்டும்தான் செய்ய முடியும். கல்லூரியை நேசிப்பவர், மாணவர்களில் பற்று வைத்துள்ளவர், ஆசிரியர்களுக்கு வழிகாட்டிவருபவர், பெற்றோருக்கு விசுவாசமாக நடப்பவர், நேரக்கட்டுப்பாடு, ஒழுக்கம், நல்ல சிந்தனைகளை வளர்த்து வருபவர் மொத்தத்தில் தன்னை நிறுவனத்தின் உயர்ச்சிக்காக அர்ப்பணித்து வருபவராக திரு நல்லதம்பி பரமசிவம் அவர்களைக் காண்கின்றேன்.

ஆற்றல்மிகு ஆசிரியராகவும், பதினேழு ஆண்டுகள் ஆளுமை மிக்க அதிபராகவும் இன்றுவரை அயராது அளப்பரிய சேவையாற்றி தமது 60ஆவது அகவையில் தடம்பதித்து மணிவிழாக் காணும் வேளையில் இவரின் மகத்தான சேவையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் வாழ்வும் சமூகப்பணியும் தொடர்ந்தும் சிறக்கவும் மணிவிழா மட்டுமல்ல வைரவிழா, நூற்றாண்டுவிழா என்பவற்றையும் காணச் சிறந்த தேகாரோக்கியத்துடன் வாழ வேண்டுமென இறையாசி வேண்டி நிற்கிறேன்.

**சோ.விக்னேஸ்வரன், ஜே.பி. செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம், முன்னாள் செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சபை, யா/யாழ்ற்ரன் கல்லூரி.**

## தன்னிகரில்லா அதிபர்



''தோன்றிற் புகழொடு தோன்றுக'' எனும் செம்மொழிக்கேற்ப புகழோடு தோன்றிப் புகழோடு வாழ்ந்து தனது ஆற்றலினால் எண்ணற்கரிய சேவைகளாற்றிய ஏற்றமிகு எமது அதிபர் அகவை அறுபது தன்னில் அடியெடுத்து வைத்ததை முன்னிட்டு, எமது கல்லூரியில் கடந்த 17 ஆண்டுகள் அவராற்றிய சேவையையும் அதனால் இக்கல்லூரி பெற்ற நலனையும் இம் மணிவிழா நன்னாளில் பாராட்டி வாழ்த்துகிறேன்.

எமது அதிபர் ஓய்வுக் காலத்திலும் நோய்நொடியின்றி அனைத்து வளமும் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ எல்லாம் வல்ல மணற்காட்டு முத்துமாரியம்மனை வணங்கி வாழ்த்துகிறேன்.

**திருமதி க. லிங்கேஸ்வரன்**
**தலைவர், ஆசிரியர் கழகம், யா/யாழ்ற்ரன் கல்லூரி,**
**காரைநகர்.**

## கடும் உழைப்பின் மூலம் பாடசாலையை முன்னேற்றியவர்



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் திரு. ந.பரமசிவம் அவர்கள் ஓய்வு பெறுவதையொட்டி வெளியிடப்படுகின்ற ''மணிவிழாவும் சேவை நயப்பும்'' எனும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

ஆசிரியர் பணியில் ஆரம்பித்து படிப்படியாக முன்னேறி அதிபர் எனும் உயரிய பதவியினூடாக தீவகப் பகுதியின் கல்வி அபிவிருத்திக்கான செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டு செயலாற்றிய வகையிலும், அதிபர் என்ற ரீதியிலும் தனது கடும் உழைப்பின் மூலமாக பாடசாலை முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருந்து செயற்பட்டமை கண்கூடு.

ஓய்வு காலம் சிறப்பாகவும் மகிழ்ச்சியுடனும் அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**இ. இளங்கோவன், செயலாளர்,**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை**
**அமைச்சு, வடமாகாணம்.**

## பணியினைப் பாராட்டுகிறேன்



யா/யாழ்ற்ரன் கல்லூரி அதிபராக பணியாற்றி ஓய்வுபெறும் திரு.நல்லதம்பி பரமசிவம் அவர்களின் பணியினை நயந்து பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1975ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராகக் கல்விப் பணியினைத் தொடர்ந்த இவர் ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், அதிபர் முதலான பதவிகளை வகித்து கல்வி மேம்பாட்டிற்கு பல்பரிமாணத் தன்மையோடு அளப்பரிய சேவைகளை ஆற்றியமை விதந்து பாராட்டத்தக்கது. யாழ்ற்ரன் கல்லூரியை யாழ். மாவட்டத்தில் முன்மாதிரியான பாடசாலையாகவும் முதன்மையான பாடசாலையாகவும் நிலைநிறுத்துவதற்கு அரும்பணியாற்றியமை பாராட்டத்தக்கது. இவர் சமூகத்திற்கு வழிகாட்டியாகவும் நெறிப்படுத்துனராகவும் திகழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் தம்குடும்பத்தினரோடு நீண்ட ஆயுளுடன் சிறப்பாகவும், மகிழ்வாகவும் நிறைவாகவும் வாழ எனது நல்லாசிகள்

**வீ.இராசையா, மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**வடமாகாணம், வரோதயநகர், திருகோணமலை.**

## தன்னலமற்ற சேவை



யா/காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியை வளர்த்தெடுத்த அதிபர் வரிசையில் திரு. நல்லதம்பி பரமசிவமும் சேர்ந்துள்ளார். அதிபர் திரு.ந.பரமசிவம் ஆற்றிய தன்னலமற்ற சேவைக்காக ஆண்டவனின் வெகுமதியாக அவர் ஓய்வு பெறமுன்பு இலங்கை கல்வி நிர்வாக சேவையினுள் உள்வாங்கப்பட்டுள்ளார். திரு.பரமசிவம் முரண்பாடற்ற, நேர்மையான, பொறுமையும் சகிப்புத்தன்மையும் உள்ள அதிபர். இப்பண்புகள் தான் இவரின் சேவைக்கு அணிசேர்த்தன என்றால் மிகையாகாது. அதிபர் திரு.பரமசிவம் அவர்கள் ஓய்வு காலத்தில் சுகபலத்துடன் வாழ்ந்து தொடர்ந்தும் கல்விக்கு தொண்டாற்ற எனது வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும் உரித்தாகுக.

**வி.ரி. செல்வரத்தினம்,**
**மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**

## அர்ப்பணிப்பு மிக்க சேவை புரிந்தவர்



தீவகக் கல்விவலயத்தில் யா/யாழ்ற்ரன் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி 17.11.2009இல் ஓய்வுபெற்ற புகழ்பூத்த அதிபர் உயர் திரு.ந.பரமசிவம் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். யாழ்ற்ரன் கல்லூரியில் 1992ஆம் ஆண்டு தொடக்கம் 17ஆண்டுகளாக அதிபராக சேவையாற்றி அரும்பணியாற்றியுள்ளார். தன்னைத் தேடிவந்த ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்வி அதிகாரி பதவியையும் பாடசாலைப் பணிக்காக வேண்டாமென மறுத்தவர். கல்விப் பணியில் ஆசிரியராக, ஆசிரியஆலோசகராக, அதிபராக உயர்ந்தவர். பாடசாலையை முகாமிப்பதில் கண்டிப்பு நிறைந்த அதிபர் என அழைக்கப்பட்டவர். மாணவர்கள் நல்லொழுக்கத்தைப் பேணுவதிலும் ஆசிரியர்கள் ஆசிரியத்துவப்பண்புகளை வலுப்படுத்துவதிலும் குறிக்கோளாக இருந்தவர். இதனால் யாழ்ற்ரன் கல்லூரி உயர்ந்த கல்விப்பெறுபேறுகளை தீவக வலயத்திற்கு வழங்கும் பாடசாலையாக திகழ்ந்தது. இவரின் அர்ப்பணிப்பு மிக்க சேவையை நயந்து பாராட்டி வாழ்த்துவதுடன் எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜி.வி. ராதாகிருஷ்ணன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**தீவகம், வேலணை.**

## புகழ்பூத்த அதிபர்



அதிபர் திரு. நல்லதம்பி பரமசிவம் (இலங்கை அதிபர் சேவை தரம் I)

யா/ யாழ்ற்ரன் கல்லூரி அதிபராக 1992 இல் இருந்து 16.11.2009 வரை சிறந்த சேவையாற்றி மணிவிழாக் காணும் இவர் தீவகத்தின் புகழ் பூத்த அதிபராவார். கல்வித்துறை, சமூகத்துறை, சமயத்துறை எனப் பலதுறை விற்பனராக விழங்கிய இவரைப் பாராட்டுவதில் பெருமகிழ்வு அடைகிறேன். இவரது எதிர்காலம் மேலும் சிறப்புற அமைய வேண்டுமென எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரேஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

**ச. பாஸ்கரன்,**
**கோட்டக் கல்வி அலுவலர், ஊர்காவற்றுறை.**

**கல்லூரிச் சமூகம்**
**யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். ஆஸ்பத்திரி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட 'ராம் சுப்பர் சிற்றி' வர்த்தக நிலையத் திறப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
சம்பிரதாய முறைப்படி வர்த்தக நிலையத்தில் பால் காய்ச்சும் காட்சியை முதலாவது படத்திலும், ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.கிளை முகாமையாளர் எஸ்.ஜெயராசா விற்பனைப் பொருள்களைக் கொள்வனவு செய்வதையும், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 'ராம் சுப்பர் சிற்றி' வர்த்தக நிலையத்தின் முகப்புத் தோற்றத்தையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.
(படங்கள் : *லக்ஸ்மன்*)

# வாகனம் தொடர்பான ஆவணங்களுக்கு விண்ணப்பித்து கிடைக்கப்பெறாதோர் தமது முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கலாம்

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.4

யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்தில் வாகனம் தொடர்பான பல்வேறு விடயங்களுக்கு விண்ணப்பித்து இதுவரை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் தமது முறைப் பாடுகளை எமக்குத் தெரிவிக்கமுடியும்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணை யாளர் வ.பத்மநாதன் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்தால் நடமாடும் சேவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முற்பகுதியில் யாழ்ப்பா ணத்தில் நடத்தப்படவுள்ளது.

ஆதலால் புதிய சாரதி அனுமதிப்பத் திரத்திற்கு விண்ணப்பித்து இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள், சாரதி அனு மதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு அல் லது கால நீடிப்புக்கு, தொலைந்த அல் லது சேதமடைந்த அனுமதிப் பத்திரங்க ளுக்கு விண்ணப்பித்து இதுவரை அதற்குரிய இணைப் பிரதி கிடைக்கப் பெறாதவர்கள் மற்றும் வாகன உடைமை மாற்றத்திற்கு, வாகன இலக்கத் தகடுகள் ஆகியவற்றுக்கு விண்ணப்பித்து இது வரை கிடைக்கப் பெறாதவர்கள் தாம் விண்ணப்பித்தமை தொடர்பான ஆவ ணங்களின் இரண்டு பிரதிகளைச் சமர்ப்பித்து யாழ்.மோட்டார் திணைக்க ளத்தின் ஊடாக மோட்டார் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடம் தமது முறையீட்டினைச் செய்து கொள் ளலாம்.

அவ்வாறு முறையீட்டினைச் செய்து கொள்வதினால் பெப்ரவரி மாதம் நடை பெறவுள்ள நடமாடும் சேவையில் தமது ஆவணங்களைப் பெறுவதற்கு இலகு வாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரி வித்துள்ளார். (04-9)

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.4

இம்மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.சா தாரணதரப் பரீட்சைக்கு யாழ்.கல்வி வலயத் திலிருந்து யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங் களிலும் தென்மராட்சி, தீவக வலயங்களி லும் இருந்து மேற்படி பரீட்சைக்குக் கடமையாற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட் டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற வுள்ள இக்கூட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட அனைத்து அலுவலர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல் விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (50-201)

# நாவலர் குருபூசைத் தின்த்தையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம், டிசெ.04

ஆறுமுகநாவலரின் 130 ஆவது குரு பூசைத்தினவிழா எதிர் வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நீரா வியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலனசபைத் தலைவர் த. சண்முகலிங்கம் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தின ராக ஓய்வுபெற்ற அதிபர் ஆ.சபாரத்தினம் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் ''நாவலரும் புராண படனமும்' என்னும் தலைப்பில் பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் சிறப்புரை நிகழ்த்த வுள்ளார்.

இந்த நிகழ்வில் நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் நடை பெறவுள்ளது.

பரிசு பெறும் மாணவர்களின் விவரம் வருமாறு:-

**பேச்சுப்போட்டி**

**கீழ்ப்பிரிவு**

உ. சாந்திகா (கொக்குவில் இந்துக் கல் லூரி), நவநீதா சிவநேசநாதன் (மானிப் பாய் மகளிர் கல்லூரி), பிரசாந்தி கண்ண தாஸ் (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**மத்தியபிரிவு**

ஜானுஷா அருந்தவராசா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), தம்பி ஐயா மதுஜனன் (இணுவில் மத்திய கல் லூரி), க.யஸ்மிதா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**மேற்பிரிவு**

சி. பவித்திரா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), கணநாதன் உஷாந்தன் (யாழ். இந்துக்கல்லூரி), கோபிதா நாக லிங்கம் (இராமநாதன் கல்லூரி).

**கட்டுரைப்போட்டி**

**மேற்பிரிவு**

ப. கஜிதா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), தர்சிகா தனராஜ் (நவாலி மகா வித்தியாலயம்), கோகினி நவரத்தி னம் (கொடிகாமம் மகா வித்தியாலயம்).

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான பதிவுகள் இன்று ஆரம்பம்

நல்லூர், டிசெ.4

நலன்புரி நிலையங்களில் இருந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியமர்ந்தவர்களுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான பதிவுகள் இன்று முதல் இடம்பெறும்.

கிராம அலுவலர் பிரிவுகள் ஜே-91 முதல் ஜே-96 வரை அரியாலை சனசமூக நிலையத்திலும், ஜே-110 முதுல் ஜே-114 வரை நல்லூர் பிரதேச செயலகத்திலும் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கி ழமை ஜே- 97 முதல் ஜே-101 வரை வண் ணார்பண்ணை ஜே - 97 கிராம அலுவலர் பணிமனையிலும் ஜே-115 முதல் ஜே-120 வரை கோண்டாவில் ஜே-117 கிராம அலுவலர் பணிமனையிலும் பதிவுகள் இடம் பெறும்.

8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜே-102 முதல் ஜே-105 வரை கந்தர்மடம் ஜனசக்தி சனசமூக நிலையத்திலும்,ஜே-121முதல் ஜே-128வரை கொக்குவில் மஞ்சவனப்பதி கோவிலுக்கு அருகிலும் பதிவுகள் இடம் பெறும்.

பதிவுகள் அனைத்தும் காலை 9 மணிக்கு குறிப்பிட்ட இடங்களில் ஆரம்ப மாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-111)

# ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சை; மேலும் சில முடிவுகள்

யாழ்ப்பாணம்.டிச.04

கடந்த 26 ஆம் திகதி வெளியிடப் பட்டுள்ள 2009 ஆம் ஆண்டுக்குரிய ஜி. சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் மேலும் சில முடிவுகளை பாடசாலை அதி பர்கள் 'உதயனுக்கு' அனுப்பிவைத்துள் ளனர். அவற்றின் விவரம் வருமாறு:

**குடத்தனை அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை**

க.சுமணா-2ஏபி, ஞா.தங்கமதன்-ஏபிசி, ச.கபில்ராம்-ஏபிசி, சி.சூரியமூர்த்தி-2பிசி, ர.ஜனனி-2பிசி, வே.சிவசக்தி-பி2சி, ச.சுதர்சனா-பி2சி, செ.சசிகா-பி2சி, பா.சிவகாஸ்-பி2எஸ், க.கனிஸ்ரலா- 2சி எஸ், அ.மீரா 2சிஎஸ், யே.றொபேட் ஜெக ராஜ்- 2சிஎஸ், சி.சிவாஸ்கரன்- சி2எஸ், ஜெ.ஜெறோனா-சி2எஸ், பா.விஜிதா - சி2எஸ், சி.நிறோசா- சி2எஸ், ஜே.ஜேநீனா-3எஸ்.

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**

*விஞ்ஞானப் பிரிவு*

ப.பிரகாஸ்-3ஏ, றொ.டினுசா-2பிசி

*கணிதப் பிரிவு*

வை.கிரிதரன்-2பிசி, வை.சுதர்சன்-பிசிஎஸ்

*வர்த்தகப்பிரிவு*

து.விசுவராஜ்-3ஏ, ப.நிஜந்தா-2ஏபி, அ.அன்ரனிகிளியரன்ஸ்-2ஏசி, உ.சுகிர்தா-ஏ2பி, இ.சலோஜன்-2ஏசி, க.சுதாகரன்-3பி.

*கலைப்பிரிவு*

செ.நந்தினி-2ஏபி, க.கார்த்திகேயன்-2ஏசி, இ.மந்தாகினி-ஏ2பி, போ.கம்சிகா-ஏ2பி, கு.மயூரதி-ஏ2பி, ப.சுகிர்தா-ஏ2பி, ஜெ.சஞ்சீவன்-ஏ2பி, ந.சிறிரங்கன்-2ஏசி, பூ.அரவிந்தன்-2ஏசி, கி.கிருத்திகா-2ஏசி, க.தேவிகா-ஏபிசி, மு.மிருந்தலா-ஏபிசி, ம.கஜாளினி-ஏபிசி, சி.உமையாள்-ஏபிசி, சு.கௌசிகா-ஏபிசி, ப.சுதர்சினி-ஏபிசி, இ.சுரேஸ்கரன்-ஏபிசி, வி.ரகுபரன்-ஏபிசி, யோ.ரோகினி-ஏபிஎஸ், கி.கிருஸ்ணாளினி -ஏ2சி, ம.சோபனா- ஏ2சி, த.கிருத்திகா-ஏ2சி, ஶ்ரீ.சர்மதி-3பி, வ.தனுசாந்- 3பி, நி.கஜனி-3பி, பொ.சிவச்சந்திரன்-3பி.

**கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி**

*கலைப்பிரிவு*

செ.கசிதா-3ஏ, பு.ஜீவணா-2ஏபி, எஸ்.துவா ரகா-2ஏபி, கே.கேதீசன்-ஏ2பி, எஸ்.மயூ ரதி- ஏ2பி

*உயிரியல் பிரிவு*

சூ.சூரியதா சாயினி-ஏபிசி, எஸ்.நிரூஜா-2பிசி.

*கணிதப்பிரிவு*

பி.மதுசா-2ஏபி, சி.சிவகுமாரன்-2பிசி.

*வர்த்தகப் பிரிவு*

செ.சயந்தன்-2ஏபி, எஸ்.தனரூபன்-ஏ2பி

**வைத்தீஸ்வராக் கல்லூரி**

*வர்த்தகப்பிரிவு*

த.நிறஞ்சன்-3ஏ, கு.யசோதரன்-2ஏபி, சி.அகில்-பி2சி.

*விஞ்ஞானப் பிரிவு*

பா.கிருசாந்தி-பி2சி, வீ.விஜித்தா-3சி, ப.மங்களா-சி2எஸ்.

*கலைப்பிரிவு*

சு.சிந்துஜா-2ஏபி, கி.தவறாணி-ஏ2பி, சி.நித்தியா-3பி, வி.பத்மினி-2பிசி, கா.சண் சுதா-2பிசி, க.மதுரா-2பிசி, க.குகப்பிரி யன்- ஏ2சி, சி.அல்போன்ஸ்-ஏசிஎஸ், பா.கரிகரன்-ஏசிஎஸ், இ.கனிசியஸ் வினோத்-ஏ2எஸ், ம.றோசாந்தி-ஏ2எஸ், ப.கனோல்ட டெல்சன்-2ஏசி, தெ.அனுசியா - ஏ2சி, தி.கஸ் தூரி 2பிசி, அ.பியூலா சாளினி - 2பிசி, ம.சிந் துஜா - 2பிசி, அதுவாரகா-2பிசி, வ.சிவகௌரி -ஏசி

**யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி**

*உயிரியல் பிரிவு*

கே.அச்சுதன்-2ஏபி, பி.போல் பிறைற்-ஏ2பி, பி.கார்த்தீபன்-3பி, வி.சிந்துஜன் -ஏ2பி, ஆர்.எட்வின் லெஸ்லி-பி2சி, ரி.சித்தார்த்-ஏபிஎஸ், சி.திவாகர்-2பிசி, வி.சித்திரங்கன் பி2சி, கே.ஜனுசன்-பி2சி வி.திவாகர்-3சி, வி.சுஜந்தன்-பி2சி, ஆர்.சிறிகிருஸ்ணன்-பி2சி, ஆர்.தேஜேஸ் வர்-பி2சி, புவனதாஸ் -3சி, றோய்றொபின் சன்-3சி, வி.தர்சன்-3சி

*கணிதப்பிரிவு*

ஏ.கஜந்தன்- 3ஏ,ஏ.டெறிக் ஜெசூரன்-ஏ2பி, ஐ.ஜெகான் மரினோ-3பி, பி.கிரு சாந்-ஏ2பி, ரி.சிந்துசன்-3பி, ரி.கஜன் -ஏபிசி, பி.அந்துஜன்-ஏ2சி, ஈ.ஆனந்தநேசன்-பிசிஎஸ், எம். வாகீசன்-2பிஎஸ், ஜி.விஸ்வ ரூபன்-3சி, எஸ்.சதுர்ராமன்-2பிஎஸ், கே.தனு சன்-பி2சி, ஆர்.நிருசன்-பி2சி, வி.ஹிரோ சான்-3சி, ரி.சிரோஜன்-3சி, எஸ்.மயூரன் -பி2சி, எஸ்.திவமைந்தன்-3சி.

*வர்த்தப்பிரிவு*

ஆர்.நிதர்சன்-3ஏ, கே.வக்சன்-2ஏபி, ரி.கீதாஞ்சன்-2ஏசி, ஜி.சர்மிலன்-ஏ2பி, எஸ்.நிக்சன்ச்-2பிசி, வி.அரவிந்தன்-2பிசி, வி.கஜீவன்-2பிசி, வை.பிரசாந்-3சி, ஜே.பிரி ன்ஸ் பிரியதர்சன்-3சி, எம் .நிசாந்தன்-3சி.

*கலைப்பிரிவு*

பி.மதுரதன்-3பி, ரி.கீதாகரன்-ஏ2பி, என்.செந்தூரன்-ஏ2சி, கே.தனுசன்-ஏ2சி, கே.கபேஸ்-2பிசி, ரி.சுரேந்திரன்-ஏ2சி, ஆர்.சுர சாகித்யன்-ஏபிசி, ரி.நிலோஜன்-ஏபிசி, கே.டினேஷ்-ஏபிசி, கே.அனுஜன்-2பிசி, வி.லபேன்-பி2சி, வி.சயந்தன்-2பிசி, ஏ.அர் ஜீனா-ஏசிஎஸ், எஸ்.கிருசாந்தன்- 2பிசி, கேவிது ஷன்-ஏசிஎஸ், எம்.ரவிசாந் -ஏ2சி, எஸ்.நிகேஸ்-2பிசி, எஸ். சிவசங் கர்-2பிசி, கே.சுபாங்கன்-பி2சி, எஸ்.கோகு லன்-பி2சி, எஸ்.மலர வன்-பி2சி, ரி.துவா ரகன்-பி2சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராம கிருஷ்ணரின் லீலைகள்

ஸ்ரீராமர் வானரங்களுடன் இனிய உறவை வைத்துக் கொண்டிருந்தார் என்பது நாம் அறிந்ததே.

ஸ்ரீராமகிருஷ்ணர் வாழ்க்கையிலும் குரங்குகளின் சுவையான பங்கு உண்டு.

ஒரு நாள் சிறுவன் கதாதரனும் (ஸ்ரீராமகிருஷ்ணரின் இளமைக் காலப்பெயர்) அவனது தாய் சந்திரமணியும் மாயாபூர் என்னும் இடத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

அந்த இடத்தில் மரத்தின் மீது பல கருங்குரங்குகள் உட்கார்ந்திருந்தன. அவைகளைப் பார்த்ததும் கதாதரனின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது. வேகமாகக் கையில் ஒரு குச்சியை எடுத்துக் கொண்டு, சிறிதுகூட பயமில்லாமல், அவைகளை நோக்கிப் பாய்ந்து சென்று துரத்த ஆரம்பித்தான்.

அதிசயம்! அந்தக் குரங்குகளும் அவனைத் தாக்கவில்லை. மாறாக, அவைகள் மரத்திலிருந்து இறங்கி கதாதரனுடன் மிகுந்த களிப்புடன் விளையாட ஆரம்பித்தன.

இவ்வாறு கதாதரனுடன் குரங்குகள் விளையாடுவதைப் பார்த்து சந்திரமணி பயந்தார். மீண்டும் மீண்டும் கதாதரனை அழைத்தார். குரங்குகள் கதாதரனைக் கீறிவிடும் என்று அவர் கவலையுற்றார்.

என்ன ஆச்சரியம், குரங்குகள் ஒரு சிறுவனுடன் விளையாடின! பொதுவாக மனிதனைப் பார்த்தால் குரங்கு முகம் சுளிக்கும். அருகில் சென்றால் அச்சுறுத்தும். அதுவும் தடி கொண்டு துரத்தினால் என்ன செய்யும் என்று சொல்லவே முடியாது. அப்படிப்பட்ட குரங்குகள் நட்புரிமையுடன் கதாதரனுடன் விளையாடின. தங்களுடன் அவனை ஒருவனாகக் கருதியதால்தான் குரங்குகளால் அப்படிப்பழக முடிந்தது.

கதாதரனுடைய பால்ய லீலையில் மதுரமான மற்றொரு நிகழ்ச்சி.

அந்தக் காலத்தில் பள்ளிக்கூடப் பாடங்களில் பிரகலாதன், கண்ணன் கதைகள் இருந்தன. கதாதரனுக்கு பிரகலாதனின் 'புந்தி'யைக் (செய்யுள் வடிவில் அமைந்த கதை) கற்று கொடுத்தார்கள். கதாதரன் அதை முழுவதுமாக மனப்பாடம் செய்து விட்டான்.

பிரகலாதனின் இறையன்பை விளக்கும் பகுதி அவனுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. பள்ளிக்கூடம் விட்டதும் அந்த 'புந்தி'யை கதாதரன் படிப்பான். அவனுடைய இனிமையான, மனதைச் சொக்க வைக்கும் குரலில் அதைக் கேட்கப் பலர் கூடுவதுண்டு.

ஒரு நாள் இவ்வாறு நடந்து கொண்டிருந்த போது, அந்தக் கதையை ஒரு குரங்கு மரத்தில் அமர்ந்தவாறு கேட்டுக் கொண்டிருந்தது. உடனே அது கீழே இறங்கி வந்து கதாதரனின் காலருகே உட்கார்ந்து கொண்டது. காலடியிலேயே அமர்ந்து பாராயணத்தை ரசித்துக் கொண்டிருந்தது. பாராயணம் முடிந்தவுடன் கதாதரன் அந்த 'புந்தி'யை எடுத்து குரங்கின் தலைமைத் தொட்டான். உடனே அந்தக் குரங்கு கதாதரனின் காலைத் தொட்டு வணங்கியது! பிறகு மரத்தில் மீண்டும் ஏறிவிட்டது.

அந்த வானர வடிவில் வந்தது யார்? நம் சிற்றறிவால் கதாதரனை எடை போட முடியுமா? குருதேவரின் வாலிப வயதில் நடந்த இன்னொரு நிகழ்ச்சி.. சுரைக்காய்க் கறியை உண்ண வேண்டும் என்ற ஆசையை குருதேவர் இருதயனிடம் வெளிப்படுத்தினார். அது சுரைக்காய் காய்க்கும் பருவமல்ல. குருதேவரின் விருப்பத்தை நிறைவேற்ற இருதயனும் அவர் தம்பி ராஜாராமும் முயற்சி செய்தார்கள்.

அந்த ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் விசாரித்துப் பார்த்தார்கள். குருதேவரை மதிக்கும் மற்றவர்களும் சுரைக்காய் வேட்டையில் சேர்ந்து கொண்டார்கள். பல மணி நேரம் தேடிய பிறகு கடைசியாக ஒரு பெண்மணியின் குடிசைமீது படர்ந்திருக்கும் கொடியில் ஒரு பிஞ்சு சுரைக்காய் இருப்பதைக் கண்டார்கள்.

ஆனால் அந்தக் காய் முற்றவில்லை.




அதைப் பார்த்ததும் இருதயன் மகிழ்ந்தான். பணிவாக அவர் அந்தப் பெண்மணியிடம், " அம்மா, எங்கள் மாமாவிற்காக அந்தக் காயை விலைக்கோ அல்லது அன்பளிப்பாகவோ கொடுக்க வேண்டும்" என்று வேண்டினார். அதற்கு அந்தப் பெண்மணி, "தம்பி, அந்தக்காய் முற்றும் வரை நான் அதைக் கொடுக்க முடியாது" என்று கூறி மறுத்துவிட்டாள்.

இருதயன் எவ்வளவோ கெஞ்சியும் அவள் அசைந்து கொடுக்கவில்லை. நன்கு முற்றிய பிறகுதான், அந்தக் காயைக் கொடுக்க முடியும் என்று கூறிவிட்டாள். கவலையு டன் இருதயன் மீண்டும் தேட ஆரம்பித்தார்.

இது ஒரு பக்கம். இன்னோர் இடத்தில் என்ன நடந்ததுதெரியுமா?

இருதயனும் ராஜாராமனும் ஏமாற்றத்தோடு ஒரு வயல் வழியாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது திடீரென்று ஒரு கருங்குரங்கு, அவர்களின் பின்னால் மூச்சிரைக்க வேகமாக ஓடி வந்தது. குரங்கின் கையில் ஒரு பிஞ்சுச்சுரைக்காய் இருந்தது. அந்தப் பிஞ்சுச் சுரைக்காயை அவர்கள் முன்னால் அவசர அவசரமாக வைத்துவிட்டு கண் இமைப்பதற்கு முன் அந்தக் குரங்கு ஓடி மறைந்துவிட்டது!

இருதயன் வியப்பால் விரைந்து நின்றார். அந்தச் சுரைக்காயை எடுத்துக் கொண்டார்.

எந்தச் சுரைக்காயைக் கொடுக்க மாட்டேன் என்று அந்தப் பெண் மறுத்தாளோ, அதே சுரைக்காய் தான் இது என்பதைப் பிறகு இருசகோதரர்களும் கண்டு அதிசயித்தார்கள். அவர்கள் அந்த அதிசய நிகழ்ச்சியைப் பெரிது படுத்தவில்லை. குருதேவரின் இது போன்ற எத்தனை லீலைகளை அவர்கள் பார்த்திருப்பார்கள்!

ஸ்ரீராமராக வந்து குருதேவரே உமக்கு ஜெயம் உண்டாகட்டும். ஒவ்வோர் அவதாரத்திலும் இனிய வானர லீலை தொடருமா?

ஆதாரம்:-ஸ்ரீராமகிருஷ்ண புந்தி


**UNIVERSITY OF JAFFNA**

**Vacancy – Post of Stenographer (English) – On Assignment Basis**

Applications will be received by me for the Post of Stenographers to work on assignment basis from the suitable candidates.

Qualifications:

1). G.C.E (Ordinary Level) Examinations six subjects at not more than two sittings with credit passes in three subjects including English.

2). Proficiency in English Stenography with the minimum speed of 80 w.p.m in shorthand (English) 40 w.p.m (on manual) / 55 w.p.m (on type writer )/ 40 w.p.m (on Computer) in typing (English)

Salary: Rs. 680/- Per day

Selection: By Test and Interview

** Trainees from the technical colleges / Recognized Institutions may also apply

Application form may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishment Branch (Non Academic Section) University of Jaffna, Thirunelvely, Jaffna. either in person or by post on a payment of Rs.100/= per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of **"Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna"** together with a self-addressed Rs.5.00 stamped envelop of 23 x 10 c.m. in size. Duly completed application form should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar / Establishment Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 16.12.2009**

Incomplete and illegible applications and applications received after the closing date will be rejected.

**Registrar**
**30.11.2009**

(சி/562570)



விளையாட்டுப் பொருட்கள்



ஞாயிற்றுக் கிழமைகளிலும் ...

டீபிடஸ் ஸ்ரோஸ்
2439422



**DIPLOMA IN NURSING**
**(2 Years)**
**HOLY CROSS**
**SCHOOL OF HEALTH SCIENCE**

| | |
|---|---|
| விண்ணப்ப இறுதித்தினம் | 31.12.2009 |
| நேர்முகத் தெரிவு | 10.01.2010 |
| பதிவுக் கட்டணம் | 500/- |
| முற்பணம் | 5000/- |
| கற்கை நெறிக் கட்டணம் | 500/- |

க.பொ.த.உயர்தரத்தில் 03 பாட சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை சுகநல நிலையம் 769, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்.

(சி/562897) பணிப்பாளர்.



25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

**உதயன்**

வடமராட்சி மாணவர்களுக்காக உதயன் நிறுவனம் நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஒரு வாரகாலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்தப் போட்டி 06.12.2009 நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் விடைத்தாள்களை பாடசாலைகள் மற்றும் உதயன் முகவர் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள விசேட பெட்டிகளில் சேர்ப்பித்து உங்கள் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யுங்கள்.



**WANTED**

We look forward to receiving applications from energetic, capable retired principal or Administrative officer (Ladies) with high fluency in English for Administration of Daycare Centre & Pre school in English medium.

Applications Cum CV from the most suitable persons will be accepted on or before 10th December 2009

The Salary is negotiable

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**Arrul Global Express,**
No,01 Brown Road, Navalar Road Junction
Jaffna.
021 222 6113, 0778733576

(சி/562890)


## 6ஆவது மாத நினைவஞ்சலி



மலர்வு 14 . 01 . 1996

உதிர்வு 24 . 05 . 2009

**செல்வி சிகானி கதிரமலைநாதன்**

அன்பு மகளே! ஆசை அக்காவே அகவை பதின்மூன்றில் எம்மை
ஆறாத் துயரில் தவிக்க விட்டு ஆண்டவன் பாதம் அடைந்தீரே!
ஆறு மாதம் ஆகிய போதும் ஆறவில்லையே எம் சோகம்
அகலாது நிலைத்திருப்பீர் எமது அகமதில் ஆயுள் உள்ளவரை.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மரணச் சடங்குகளில் நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் பற்பல உதவிகள் புரிந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

S.KATHERAMALAINATHAN
TOUR - 1
CIBEMARCEL CACHIN
APP 822
93700 DRANCY FRANCE

உம் நினைவில் இருக்கும்:
குடும்பத்தினர்,
ஏழாலை.

(92804)

## மரண அறிவித்தல்

**சின்னத்தம்பி தர்மறாஜன்**
**(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)**



கைதடியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவன் வடக்கை வதிவிடமாகவும் கொண்டு புத்தூர் வீதி, ஈவினையில் வசித்து வந்தவராகிய சின்னத்தம்பி தர்மறாஜன் 02.12.2009 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (மலாஜன் பென்சனியர்) - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த மருமகனும் சிவக்கொழுந்துவின் பாசமிகு கணவரும் ரவிராஜா (அவுஸ்ரேலியா நில அளவைத் திணைக்களம்), தனராஜா (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயராணி (முன்னாள் ஆங்கில ஆசிரியை-வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் தற்பொழுது வவுனியா ரம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்), புஸ்பராணி (U.K) ஆகியோரின் பாசமிகு மாமனும் கவிகரன் (A/L மாணவன்), சோபிகா (ரஜ்ஜா), றொசானா (U.K), துஷாந் (U.K), அகிலாஸ் (U.K) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான தேவநேசன், நேசம்மா, ஜெயராஜா ஆகியோரின் சகோதரனும் பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, இரட்ணசிங்கம், காலஞ்சென்ற மனோகராணி மற்றும் தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் வசந்தி - தயாளன், சுசிலா - விஜெயேந்திரன், ஜீவானந்தன் - தயாநிதி, வாகீசன் - சுகந்தினி ஆகியோரின் பெரியப்பாவும் ரம்யா - பரந்தாமனின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.வாகீசன் (மருமகன்).

புத்தூர் றோட்,
ஈவினை. (92803)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக் குழந்தைகள் பத்துப் பேர் பலி! குளத்தில் வான் கவிழ்ந்து அனர்த்தம்!!

நாகப்பட்டினம், டிச. 04

தமிழகத்தில் ஒரே நாளில் பள்ளிக்குழந்தைகள் சென்ற 2 வான்கள் விபத்தில் சிக்கின. இதில் ஆசிரியை உட்பட பள்ளிக் குழந்தைகள் 10 பேர் இறந்தனர். 40 பேர் காயமுற்றனர். கவலைக்கிடமான நிலையில் சில குழந்தைகள் இருப்பதால் பலி எண்ணிக்கை உயரக் கூடும் என அஞ்சப்படுகிறது. பள்ளி வான்களில் அளவுக்கு அதிகமாக குழந்தைகளை ஏற்றி வந்ததால் இந்த துயரச்சம்பவம் நடந்துள்ளது.

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே கலைவாணி மெகா மெட்ரிக் மழலை பள்ளியை சேர்ந்த வான் வழக்கம் போல் குழந்தைகளை ஏற்றிக்கொண்டு பள்ளிக்கு சென்று கொண்டிருந்தது. இந்தநேரத்தில் கத்திரிபுலம் என்ற பகுதியில் சென்ற வான், எதிர்பாராத விதமாக, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள குளத்தில் கவிழ்ந்தது.

இதில் ஆசிரியை, குழந்தைகள் உள்பட 10 பேர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு குழுவினர் குழந்தைகள் பலரை உயிருக்கு போராடிய நிலையில் மீட்டுள்ளனர். இந்த வானில் ஆசிரியைகள் உள்பட 25 பேர் இருந்ததாக கூறப்படுகிறது. மேலும் விபத்தில் சிக்கியுள்ள குழந்தைகளை மீட்கும் பணி நடந்து வருகிறது. பல குழந்தைகள் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வானை ஓட்டி வந்த சாரதி கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டே வந்தார் என வானில் இருந்த மாணவர்கள் கூறினர். மொபைலில் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் ஒரு வளைவு வந்தது இதனையடுத்து வானைத் திருப்பும்போது இந்த வான் தடுமாறியது. இதில் கூடுதல் தகவல் என்னவெனில் வான் மிக பழையதாக இருந்தது. உரிய கண்டிஷனும் இல்லை என அங்கிருந்து நமது செய்தியாளர் தெரிவிக்கிறார். சாரதியும் நடத்துனரும் வானிலிருந்து தப்பி ஓடிவிட்டனர். இவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இறந்த குழந்தைகளின் உடல் பிரேத பரிசோதனை (போஸ்ட் மார்டம்) செய்யக் கூடாது எனப் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் முறைப்படி மருத்துவ பரிசோதனை செய்துதான் கொடுப்போம் என மருத்துவர்களும், பொலிஸாரும் தெரிவித்துவிட்டனர்.

இறந்த குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தலா 50 ஆயிரமும், ஆசிரியை குடும்பத்தினருக்கு 1 லட்சம் ரூபாவும் நிவாரணமாக வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

# சோமாலிய பட்டமளிப்பு விழாவில் குண்டுவெடிப்பு: மூன்று அமைச்சர்கள் உட்பட ஏழு பேர் பரிதாப மரணம்!

மொகடிஷ்ஷு, டிச. 04

சோமாலிய தலைநகரான மொகடிஷ்ஷுவில் நேற்று வியாழக்கிழமை பட்டமளிப்பு விழாவொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் மூன்று அமைச்சர்கள் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர். அநேகர் படுகாயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

உள்ளூர் பனாடிர் பல்கலைக்கழகத்தில் பயின்ற 43 மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா ஹோட்டல் ஒன்றில் நிகழ்ந்துகொண்டிருந்தது. இதில் திடீரென இக்குண்டுவெடித்தது என பி.பி.ஸி. நிருபர் மொஹம்மத் ஒலாட் ஹஸன் தெரிவித்தார்.

இவரும் இவ்விழாவில் இருந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மொஹம்மத் ஒலாட் ஹஸன் மேலும் குறிப்பிடுகையில், ''திடீரென பயங்கரமாகக் குண்டு வெடித்தது. இதையடுத்து, கூக்குரல்கள் எழுந்தன. அவ்விடத்தில் மனித அவயங்கள் சிதறிக் கிடந்தன'' என்றார்.

''ஷாமோ ஹோட்டலின் கேட்போர் கூடத்தில் இவ்விழா நிகழ்ந்துகொண்டிருந்தது. இதில் நூற்றுக்கணக்கானோர் பங்கு பற்றியிருந்தனர். அச்சமயம் வெடித்த இக்குண்டின் தாக்கத்தால் கட்டடமும் அதிர்ந்தது'' என்றும் அவர் கூறினார்.

''இந்த விழாவில் ஐந்து அமைச்சர்கள் இருந்தார்கள். குண்டுவெடிப்பில் இவர்களில் மூவர் மரணித்துள்ளனர். சுகாதார அமைச்சர் காமர் அடின் அலி, கல்வி அமைச்சர் அஹமத் அப்துல்லாஹி வேயில், உயர் கல்வி அமைச்சர் இப்ராஹீம் ஹஸன் அடோவ் ஆகியோரே பலியாகியுள் ளனர்'' என்றும் அவர் விவரித்தார்.

''இக்குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களில் இரு பத்திரிகையாளர்களும் அடங்குவர். மொகடிஷ்ஷுவிலுள்ள ஷாமோ ஹோட்டல் மிகவும் பிரபல்யமானது. வெளிநாட்டினர், மனிதநேய ஊழியர்கள், ஊடகவியலாளர்கள், இராஜதந்திரிகள் ஆகியோர் இந்த ஹோட்டலையே பெரிதும் பயன்படுத்துவர்'' என ஓரதிகாரி ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

# இளங்கோவன் வீடு மீது பெற்றோல் குண்டு; வீசியவருக்கு 3 நாள் பொலிஸ் காவல்!

இளங்கோவன் வீட்டில் பெட்ரோல் குண்டு வீசிய வழக்கில் சரணடைந்தவரை 3 நாள்கள் போலீஸ் காவலில் விசாரிக்க சைதாப்பேட்டை நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. இயக்குநர் சீமான் கனடாவில் இருந்து திருப்ப அனுப்பப்படும் தகவல் வெளியானதும் அவரது ஆதரவாளர்கள் சென்னைக்கு வந்தனர். அவரை வரவேற்பதற்காக சினிமா உதவி இயக்குநர் மித்ரன், அருண், வி.சி.மணி, மதுரையை சேர்ந்த விஜயகுமார் ஆகியோர் சுமோவில் விமான நிலையம் சென்றனர்.

வழியில், அவர்கள் போத்தல்களில் நிரப்பி, முன்னாள் அமைச்சர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் வீட்டில் வீசியுள்ளனர். அதன்பின் விமான நிலையம் சென்று சீமானை வரவேற்றுள்ளனர். பொலிஸ் விசாரித்து, அவர்களை கைது செய்தனர்.

இந்நிலையில், நாம் தமிழர் இயக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் விஜயகுமார் 2 நாள்களுக்கு முன்பு ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

அவர் மீதான வழக்கு, சைதாப்பேட்டை 9ஆவது மாஜிஸ்திரேட் அதற்கான திருமகள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பல் வக்கீல் பன்னீர்செல்வம் ஆஜராகி, பொலிஸ் காவலில் விஜயகுமாரை 3 நாள் வைத்து விசாரிக்க அனுமதி கேட்டார். இதை ஏற்று மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

# அமெரிக்காவின் போர் உத்திகள் ஆப்கானில் வெற்றிபெறமாட்டா

காபூல், டிச. 04

அமெரிக்காவின் போர் உத்திகள் ஆப்கானிஸ்தானில் வெற்றிபெறமாட்டா. அதே வேளை, ஆப்கான் போரில் அமெரிக்கா தோல்வியையே தழுவும் என ஆப்கானிய தலிபான் இயக்கத் தலைமைப்பீடம் அறிக்கையொன்றின் வாயிலாகத் தெரிவித்துள்ளது.

இந்தப் போரில் அமெரிக்கா பெருந்தொகையான நிதியை இழக்கும். அதே போல், பெருமளவிலான உயிர்ச்சேதங்களையும் அது சந்திக்கும். மேலதிக துருப்புகளாலும் சாதனை படைத்துவிட முடியாது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி 30 ஆயிரம் மேலதிக துருப்புகளை அனுப்பிவைக்க முன்வந்துள்ளார். இது எங்களுக்கு அச்சத்தை அளிக்கவில்லை. மாறாக இது எங்கள் திடசங்கற்பத்தை வலுப்படுத்துகிறது. எங்கள் போரும் மென்மேலும் முனைப்படையும். நாம் பின்வாங்கமாட்டோம் என்றும் தலிபான் தலைமைப்பீடம் சூளுரைத்துள்ளது.

# வெளிநாட்டுத் தொழிலாளரால் பாதகமான நிலைமை ஏற்படும்

## சுவிஸ் பொருளாதார அமைச்சர்

சூரிச், டிச. 04

வெளிநாட்டு தொழிலாளர்கள் சுதந்திரமான முறையில் சுவிற்சர்லாந்தில் பணியாற்றுவதற்கு அளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என சுவிஸ் பொருளாதார அமைச்சர் டொரிஸ் லூதார்ட் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு சுவிற்சர்லாந்தின் கதவுகளைத் திறந்துவிட்டதன் மூலம் அரசு தவறு இழைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொழிலாளர்கள் சுதந்திரமாக இடம் நகரக்கூடிய வகையில் சுவிற்சர்லாந்தும், ஐரோப்பிய ஒன்றியமும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு உள்நாட்டுத் தொழிற்சந்தை திறந்துவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் உள்நாட்டு தொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடுகளோடு ஒப்பிட்டு நோக்குகையில் சுவிற்சர்லாந்தில் வேலையற்றோர் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது என்றும் டொரிஸ் லூதார்ட் குறிப்பிட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா(ஸ்ரீ)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா(ஸ்ரீ) நேற்று(03.12.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான நடராஜா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் வரலட்சுமி(இந்தியா), புனிதவதி, விஜயலட்சுமி (பிரான்ஸ்), ஸ்ரீஜெயராஜா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாஸ்கரகுமார் (இந்தியா), அமரர் குமாரவேலுப்பிள்ளை மற்றும் உதயகுமார் (பிரான்ஸ்), ஜெயநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ராஜிப்பிருந்தா (லண்டன்), சைலஜா, லக்ஸ்மணகுமார், லக்ஸ்மிப்பிரியா (இந்தியா), அமரர் கமலவதனி மற்றும் சகுந்தலா (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), நளினி (லண்டன்), பாலகுமார், சிந்தி, சோபனகுமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று( 04.12.2009) வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்கா கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'செத்தியார் வளவு'*
*கந்தரோடை, சுன்னாகம்,*
*0212240151*

(சி-526922)

தகவல்:
குடும்பத்தினர்.

## வாரித்தம்பி பொன்னுத்துரை



(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)

ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி பொன்னுத்துரை 02.12.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - சோதிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் பாலாம்பிகையின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் சாந்தி(மக்கள் வங்கி,கண்டி), சுகந்தி(கச்சேரி, வவுனியா), சண்முகதாஸ் (சுவிஸ்), முருகதாஸ் (லண்டன்), ஜெயந்தி (சுவிஸ்), ஜெயதாஸ் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவானந்தவேள் (பேராதனைப் பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற புஸ்பராஜா (கச்சேரி, வவுனியா), மனுவல்லா(சுவிஸ்), சுதாஜினி (லண்டன்), இந்திரஜித்(சுவிஸ்), சண்முகப்பிரியா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனும் மாதுமை, ஆர்த்திகா, பவித்திரன், டொமினிக், ரொமாறியோ, அனுஷ்கா, நதீஸ், அபிராமி, சிவராம், சுவினாசினி, சுஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.12.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கணாவத்தை வீதி,*
*ஆவரங்கால் மேற்கு,*
*புத்தூர்.*

(சி-562923)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வி சிவசுந்தரி திருநாவுக்கரசு (B.A.)

(இளைப்பாறிய ஆசிரியை, மட்டக்களப்பு விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம், கல்லடி உப்போடை)



புலோலி மேற்கு வியாபாரி மூலை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மனிங் டவுன் BR2/8 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவசுந்தரி திருநாவுக்கரசு அவர்கள் 01.12.2009 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான க.திருநாவுக்கரசு (முன்னாள் புகையிரத இலாகா நில அளவையாளர்), திருமதி சேதுநாயகி அவர்களின் புதல்வியும், சிவபாதசுந்தரம் (U.K),காலஞ்சென்ற கனகசபை (ஓய்வுபெற்ற பிரதேச முகாமையாளர், இலங்கை வங்கி, கொழும்பு ), சிவஞானம் (ஓய்வுபெற்ற DFEO கடற்றொழில் திணைக்களம்), சிவானந்தவல்லி (U.K.), காலஞ்சென்ற சிவநேசன் (B.Sc. Mechanical Engineer), சிவாம்பிகை (கௌரி ) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற ஜெயதேவி, திருமதி சிறிஸ்கந்ததேவி, காலஞ்சென்ற ஞானசம்பந்தன், காலஞ்சென்ற துரைசிங்கம் (ஓய்வுபெற்ற தொலைத்தொடர்புத் திணைக்கள உத்தி யோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தருமன் சிவாஜி (U.K), மக்டலன் (U.K.), சுதர்ஷினி பகிரதன், சுவர்னா, சுகன்யா ஆகியோரின் பாசமிகு மாமியும் ரமணி (U.K.), லோக தர்ஷினி (U.K.) ஆகியோரின் சிறிய தாயாரும் தாரணி செந்தில்குமார், சாரதா ஜெனக்குமாரன் (U.K.), சியாமளா உமேஷ் ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இன்று(04.12.2009) வெள்ளிக்கிழமை காலை 9மணி தொடக்கம் 6மணிவரையும் 05.12.2009 சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 6மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 06.12.2009 ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12 மணி அளவில் பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
2582614, 2684137

தகவல்:
சிவபாதசுந்தரம் (சகோதரன்),
கௌரி துரைசிங்கம் (சகோதரி).

## திருமதி சிவசுப்பிரமணியம் சரஸ்வதியம்மா

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் சரஸ்வதியம்மா நேற்று (03.12.2009) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று( 04.12.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகாத்மா வீதி,*
*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.*

தகவல்:
சி.கந்தசாமி
(பெறாமகன்)

## ஏரம்பு முருகேசு



நவாலியைப் பிறப்பிடமாகவும்,மடத்தடி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு முருகேசு 29.11.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் பாசமிகு கணவரும், சாந்தி, சதீஸ்வரன் (லண்டன்), சசிகரன்(ஜேர்மனி), ஸ்ரீகரன்(லண்டன்), சுகந்தி (ஜேர்மனி), சுதர்சன்(அமரர்), ஜெயந்தி, துஷ்யந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துரைரத்தினம், சந்திரா (கொழும்பு), பரிமளா (ஜேர்மனி), வாசுகி (லண்டன்), சிவநேசன்(ஜேர்மனி), சபேசன்(ஜேர்மனி), சங்கர் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், இரத்தினம், வேலாயுதம் (அமரர்), கந்தசாமி (அமரர்), முத்துமணி, லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குருசாமி(அமரர்), சிவானந்தம், திலகவதி, ஈஸ்வரி (அமரர்), யோகம்மா, சிவசாமி ஆகியோரின் மைத்துனரும், திலக்ஷன் (பிரான்ஸ்),தனுசன், விதுசன், வெனிஸ்டா (கொழும்பு), மானுகி (ஜேர்மனி), அர்ச்சனா(ஜேர்மனி), ஹருணி (ஜேர்மனி), தர்சிகா (ஜேர்மனி), அஜித்(லண்டன்), அலக்ஸ் (லண்டன்), துளசிகா (ஜேர்மனி), தர்சிகா(ஜேர்மனி), சிவசுதர்சன் (ஜேர்மனி), சஞ்சிதா, சுவேதா, வினுஷா, சந்தோஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 04.12.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மேற்கு,*
*மடத்தடி, சாவகச்சேரி.*

(92833)

தகவல்: சு.துரைரத்தினம்
(மருமகன்), 0775380078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WOMEN IN NEED

**35A, Somasundaram Avenue, Chundukulli, Jaffna.**

மேற்படி எமது நிறுவனமானது 35 A, சோமசுந்தரம் அவன்யூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 02.12.2009 இல் இருந்து இயங்குகின்றதென்பதனை அனைத்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், பயனாளிகளுக்கும் அறியத்தருகின்றோம்.

(92827) **இணைப்பாளர்.**



## ஏழாலை களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூசணி அம்மன் தேவஸ்தானம். பாலஸ்தாபன விஞ்ஞாபனம்.

காலம்: 06.12.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 9.30 வரை

பிரதமகுரு: தியாக கெங்காதர குருக்கள், புன்னாலைக்கட்டுவன்

சர்வபோதகர்: தா.மகாதேவகுருக்கள் (இணுவில்).

அனைவரும் வருக அம்பிகை அருள் பெறுக.

(92821) **தேவஸ்தானம்.**


## திருநெல்வேலி வங்கிக் கிளையிலும் சனி தோறும் சேவைகள் நடைபெறும்

யாழ்ப்பாணம், டிசெ.04.

இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் வாடிக்கையாளரின் நலன் கருதி சனிக்கிழமைகளிலும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காகவும் தங்க நகை அடகு கடன் சேவைக்காகவும் வங்கி திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சேவையை நாளை சனிக்கிழமை இலங்கை வங்கியின் வடபிராந்தியத்திற்கான உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் ஆரம்பித்து வைப்பார். இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வாடிக்கையாளர்கள் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை வங்கிச்சேவையை மேற்கொள்ள முடியும் என்று கிளை முகாமையாளர் இ.பிறேமராஜன் தெரிவித்தார்.

யாழ். குடா நாட்டில் அநேக இயங்காத வங்கிக் கிளைகளில் தற்போது சனிக்கிழமைகளில் சேவைகள் இடம் பெற்று வருவது தெரிந்ததே.

(ஒ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 | 04 |
| 02 | 11 |
| 1941 | 2009 |

**அமரர் கதிர்காமு பொன்னுத்துரை**

**(இளைப்பாறிய மின்சாரசபை ஊழியர்)**

04-12-2009

பாரினிலே உங்களைப்போல் பண்புடையோர்
இல்லையப்பா
பாசச்சுமையோடு பரமன்பதம் பற்றியதேன்
உள்ளம் எனும் கோயிலிலே உவந்து நடமாடுகிறீர்
உலகமெனும் மாயையிலே உங்களை நாம்
காண்போமா?

நவாலி தெற்கு,
மானிப்பாய். (82834) **குடும்பத்தினர்.**



# வாழ்த்துகின்றோம்



**உயர் திரு.**

## கனகரத்தினம் இரத்தினசபாபதி

சிரேஸ்ஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்
(தொலைபேசி இயக்குநர் – வரவேற்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பல்கலைக்கழக சேவைதனில் 34 ஆண்டு காலம் சீரிய பணியாற்றி பல்கலைக்கழக சமூகத்தினரின் பேரன்புக்கு பாத்திரமாகி 05.12.2009 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்று செல்லும் தங்களை சகல வளங்களும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீபரமேஸ்வரப் பெருமானை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

**அன்புடன் பல்கலைக்கழக நண்பர்கள்.**

| | |
|---|---|
| திரு.திருமதி இ. ஜெகதீசன் | எந்திரி சி. தயாபரன் |
| பேரா. ஜெயக்குமார் | திரு.ஐ.கோ. சந்திரசேகரம் |
| திருமதி ப. மகேந்திரன் | திருமதி த. தேவகி |
| திருமதி ர. பரமானந்தர் | திரு.வே. சிவசுப்பிரமணியம் |
| திரு. நீ.மயில்வாகனம் | திரு. வே.சி. டேவிற் |
| திரு. அ.ம. கொன்ஸ்ரன்ரைன் | திருமதி சு. சிவகுமாரன் |
| திருமதி சா. குலசிங்கம் | திரு. ச. ரவிக்குமார் |

(92813)



# After A/L Result! What Next?

### BIT - University of Colombo

- கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மிக உயர் தேர்ச்சி உடைய வெளிவாரிக்கற்கை நெறி.
- A/L இல் மூன்றுபாடங்களில் சித்தியடைந்தோர் (BIO, Maths, Arts, Commerce) நேரடியாகவும்.
- A/L சித்தியடையத்தவறின் FIT எனும் கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலமும் கற்கை நெறியைத் தொடரமுடியும்.
- 1ம் ஆண்டின் முடிவில் DITம், 2ம் ஆண்டின் முடிவில் HDITம் கொழும்பு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும்.
- கற்கை நெறியை எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் வெளிவாரியாக பயில முடியும்.
- கற்கை நெறியை பகுதியாக பூர்த்தி செய்தோர் லண்டன், அமெரிக்கா பல்கலைக் கழகங்களில் மிகுதிக் கற்கை நெறியை பூர்த்தி செய்ய முடியும்.
- முழுமையாக பூர்த்தி செய்தோர் மேற்படிப்பை தொடர்வதற்கான Student Visa and Work Permit பெற முடியும்.
- பகுதி பகுதியாக செலுத்தக்கூடிய கற்கை நெறிக்கட்டணம் 3 ஆண்டுகளுக்கும் 18,000 x 6 ரூபா மட்டுமே.

### Computer Engineer - USA

- மைக்ரோசொப்ற் நிறுவனத்தின் கணனிப் பொறியியலாளர் கற்கை நெறி.
- Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலை வாய்ப்புக்கள்
- Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
- 12 Routers & Servers மூலம் முழுமையான செயன்முறைப் பயிற்சி
- இலங்கை அரசாங்கம் ICTA ஊடாக வழங்கும் புலமைப்பரிசில்
- USA, Canada, Australia, Singapure நாடுகளில் Microsoft Tech இன் MSc கற்கைநெறி

### CIMA - UK

- வணிகமுகாமைத்துவ துறையில் சர்வதேசரீதியில் உயர் தகமைக் கற்கை நெறி.
- ஆற்றல் நிறைந்த யாழ் (MCS) - கொழும்பு (Imperial college) விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த கற்பித்தல்

- ஜனா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
- BIT கற்கையை பட்டதாரிகளாலும் கணனி பொறியியலாளர்களாலும் கடந்த 6 ஆண்டுகளாக வடமாகாணத்தில் தொடர்ச்சியாக நடாத்திவரும் நிறுவனம். ஆதாரம் கொழும்பு பல்கலைக்கழக BIT கைநூல்.
- BIT கற்கை நெறியின் சிறப்பான (எமது யாழ் மாணவர்களின்) செயற்பாட்டிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட நிறுவனம்.
- ICDL, MICROSOFT, CISCO, IBM, SUNMICROSYSTEM, CIW, DELL, COMTIA மற்றும் CIMA நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிமையமாகவும், பரீட்சை நிலையமாகவும் தொழிற்படும் நிறுவனம்.

அனைவருக்கும் ICDL, Hardware கற்கைநெறிகளிற்கு 100% Discount

<<<<<< பதிவுகள் 05-12-2009 இற்குமுன் >>>>>>

MCS Supported By UNDP/JRRP

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (பரமேஸ்வராச்சந்தி அருகே) Bus Route 764

Phone: 0772395895, 0718475501 web: www.mcsitcampus.org



# IIS COMPUTER COURSESS

## New Batches Start on

| | | |
|---|---|---|
| Batch 1:05-01-2010 | Batch 3:16-01-2010 | Batch 5:10-02-2010 |
| Batch 2:10-01-2010 | Batch 4:17-01-2010 | Batch 6:14-02-2010 |

## Certificate Coursess

| | | | |
|---|---|---|---|
| Office Solution Development<br>Duration : 4Months | Networking<br>Duration : 4Months | Multimedia<br>Duration : 4Months | Desktop Publishing<br>Duration : 4Months |
| Java Programming<br>Duration : 4Months | Visual Programming<br>Duration : 4Months | Web Disigning<br>Duration : 4Months | Computerized Accounting<br>Duration : 4Months |
| Hardware Technology<br>Duration : 4Months | Eng-Drawing & AutoCAD<br>Duration : 4Months | Database Management System<br>Duration : 4Months | |

## Diploma Coursess

| | | |
|---|---|---|
| Business Information System<br>Duration : 6Months | Software Development<br>Duration : 6Months | Computer Hardware & Networking Eng.<br>Duration : 6Months |



கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS உடன் இணைவதன் மூலம் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்கு அமைய முற்றிலும் மாற்றியமைக்கப் பட்ட பாடவிதானங்களுடன் இக்கற்கை நெறிகள் [illegible] 2010 இல் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இக்கற்கைநெறிகள் [illegible] மாணவர்கள் [illegible] உயர் கல்வி, வேலை வாய்ப்புக்களை இலகுவாக்கிக் கொள்ள முடியும்.

## INSTITUTE OF INFORMATICS STUDIES

100, Clock Tower Road, Jaffna.

T.P :021 222 2831 Fax:021 222 6933


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வயல் ஆலயத்தில் புண்ணிய கிராமிய வேலைத்திட்ட செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.4

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினரின் தென்மராட்சி பிரதேசப் புண்ணிய கிராமிய வேலைத் திட்ட செயலமர்வு நிகழ்வுகள் நாளையமு தினம் ஞாயிறு காலை 8.30 மணிக்கு கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர்சந்திரராஜினி கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ர. நவரத்தினம் கலந்துகொள்வார்.

பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளுடன் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.(ஓ-207)

## இரு பாடசாலைகளுக்கு நடமாடும் ஆய்வு கூடம்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இருபாடசாலைகளுக்கு நடமாடும் ஆய்வு கூடங்கள் நேற்று கல்வி அமைச்சின் அதிகாரிகளால் வழங்கப்பட்டன.

மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை ஆகியனவே அந்த இரு பாடசாலைகளும் ஆகும். மீளக்குடியமர்வு இடம்பெறவுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கே கல்வி அமைச்சினால் இந்த ஆய்வு கூடங்கள் வழங்கப்படுகின்றன. (ஓ-207)

# கைதடி நலன்புரி நிலையத்திற்கு 'பவுஸர்' மூலம் குடிதண்ணீர்

கைதடி பனை அபிவிருத்திச்சபை வலயத்தில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நலன்புரி முகாம் மக்களுக்கு முன்னர் நிலத்தடி குழாய் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

இதில் ஏற்படும் சில சிரமங்களை அடுத்து தற்போது தினமும் மூன்று தடவைகள் பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக தேசிய வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்தனர். (ஓ-224)

# 'மதர் சிறீலங்கா' செயற்திட்டம் நேற்று வேம்படியில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,டிசெ.04.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் உருவாக்கப்பட்ட 'மதர் சிறீலங்கா' செயற்திட்டம் குடாநாட்டு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தும் நோக்குடன், யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து வருகை தந்த 'மதர் சிறீலங்கா' மன்றத் தலைவர் திருமதி. ஜானகி குருப்பு இந்தச் செயற்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்டத்தின் நான்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த வலயக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

'மதர் சிறீலங்கா' செயற்றிட்டப் பணிப்பாளர் பியதாச மாரம்பகே, ஏ. விஜயதுங்க உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். (ஓ-16)

## நாவலர் குருபூசை நிகழ்வுகள் நல்லூரில்

நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் நாவலர் குருபூசையின் நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் பண்ணிசை நிகழ்வும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் 'நாவலரின் சைவத் தமிழ் தொண்டு' எனும் தலைப்பிலான சிறப்புரையும் இடம்பெறும். (ஓ-7)

## 'கோப் சிற்றி' திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.04

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் சிறப்பு கூட்டுறவு நகர் (மினி கோப் சிற்றி) இன்று காலை 9.30 மணிக்கு வரணி நாவற்காட்டில் (கிளை இல.10) திறந்து வைக்கப்படும். (ஓ-207)

## வெள்ளவத்தையில் ஞாயிறன்று கைலாசபதி நினைவுப் பேருரை

கொழும்பு, டிசெ.4

கொழும்பு, வெள்ளவத்தையில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைமைப்பணிமனையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு பேராசிரியர் க.கைலாசபதியின் 27ஆவது ஆண்டு நினைவுச் சொற்பொழிவும் கவிதா அரங்க ஆற்றுகையும் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்ச்சிக்குத் தேசிய கலை இலக்கியப் பேரவையின் துணைத் தலைவர் சி.சிவசேகரம் தலைமையுரையையும், கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை, முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.யோகராசா பாரதியின் பன்முகப் பரிமாணமும் ஈழத்து இலக்கியமும் எனும் தலைப்பில் நினைவுப் பேருரையும் 'கூடிப் பிதற்றலன்றி' என்னும் தலைப்பில் கவிதா அரங்க ஆற்றுகை கவிஞர் சோ.தேவராஜாவின் தலைமையிலும் இடம்பெறும். இதில் கவிஞர்களான சடகோபன்,சுதாகர், மதுவர்மன், விமலாதித்தன், செந்தில்குமார், இதயராசன் ஆகியோரும் பங்குபெறுகின்றனர். (ஓ)

# ஆட்சிமாற்றத்துக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத் பொன்சேகாவிற்கு எந்தவித அரசியல் நிபந்தனைகளுமின்றி வாக்களிக்க வேண்டும் என தமிழ் மக்களை நாம் கோரவில்லை. தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவிற்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் இன்றைய ஆட்சியை மாற்றும் வாக்குகளாகும். யுத்த வெற்றியினை முன்னிலைப்படுத்தி தேர்தல்களில் இலகு வெற்றி பெற்றிடலாம் என இந்த அரசு மனப்பால் குடித்தது. ஆனால் யுத்த வெற்றிக்கு காரணமானவரே தேர்தலில் பொது வேட்பாளராக எதிரணியினால் நிறுத்தப்படுவதால் இன்று இந்த அரசு அதிர்ந்துபோயுள்ளது. இந்த ஆட்சியை மாற்றுவதற்கு இதைவிட சிறந்த வழி எதுவும் கிடையாது.

**தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அழைப்பு**

இன்றைய ஆட்சியை மாற்றியமைத்து புதிய தேசிய அரசை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் எமது செயற்திட்டத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். வடகிழக்கின் ஐந்து தேர்தல் மாவட்டங்களான யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் வாழும் தமிழர் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் தொடர்ந்தும் பேச்சு நடத்தப்படும்.

இன்றைய அரசை மாற்றிட வேண்டும் என்ற உணர்வுகள் இன்று வடக்குகிழக்கில் தமிழ் மக்கள் மனங்களில் ஒலிப்பதாக எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த உணர்வுகளை எதிரொலிக்கச் செய்து ஆட்சிமாற்றம் என்ற ஒரே அடிப்படையில் எதிரணி பொது வேட்பாளர் சரத் பொன் சேகாவை கூட்டமைப்பு ஆதரிக்கவேண்டும் என தோழமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**மலையக கட்சிகளுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு**

தென்னிலங்கையின் மத்திய, ஊவா, சப்ரகமுவ மற்றும் மேல்மாகாணத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் இந்த அரசை மாற்ற வேண்டும் என்ற உணர்வு கொந்தளித்துக்கொண்டிருக்கின்றது. எவர் என்ன சொன்னாலும் இதுதான் யதார்த்தம். எனவே நமது மக்களின் எண்ணக்கருத்திற்கு ஏற்ப மலையக கட்சிகள் செயற்படவேண்டும். ஆட்சி மாற்றத் திற்காக மலையக கட்சிகள் எதிரணி பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரிக்கவேண்டும் என தோழமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**தமிழர் போராட்டம்**

இந்நாட்டில் இனியொரு ஆயுத போருக்கு இடம் கிடையாது. போர் முடிந்து விட்டது. ஆனால் போராட்டம் முடியவில்லை. தமிழ் மக்களின் போராட்டத்தின் வடிவம் மாறவேண்டும். அது ஜனநாயக போராட்டமாக முன்னெடுக்கப்படவேண்டும். அதிகாரப் பகிர்வுக்காகவும், நீதி, சமாதானம் ஆகிய நோக்கங்களுக்காகவும் அரசியல் முதிர்ச்சியுடனான சாணக்கியத்துடன் நாம் காய்நகர்த்த வேண்டும். எமது போராட்டத்தை சிங்கள அரசியல் அணிகளுடன் இணைந்து முன்னெடுக்கும் சந்தர்ப்பங்களை நாம் ஒருபோதும் தவறவிடக்கூடாது.

**புலம்பெயர் தமிழர்கள்**

இலங்கையில் ஆட்சி மாற்றத்திற்கும், தமிழர்களின் போராட்ட வடிவத்தின் ஜனநாயக மாற்றத்திற்கும் புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழர்கள் ஆதரவு வழங்க வேண்டும். களத்தில் இருந்தபடி நேரடியாக ஜனநாயக போராட்டங்களை முன்னெடுக்கும் தமிழ் தலைமைகளை அடையாளங்கண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

**பகிஷ்கரிப்பு எங்களுக்கு உடன்பாடானது அல்ல**

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலக்கட்டத்திலிருந்து இன்றுவரையும் தேர்தல் பகிஷ்கரிப்பு நாம் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. இந்நிலையில் நாங்கள் வாக்களித்தாலும், வாக்களிக்காவிட்டாலும் கொழும்பில் ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளும் அணியின் அதிகாரம் தமிழ் மக்கள் மீது பாதிப்பை செலுத்துகின்றது. இந்நிலையில் எமது வாக்களிப்பின் மூலமாக அந்த அதிகார அணியை இயன்றவரையில் எமக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளவேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்று தமிழ் மக்கள் தேர்தலில் அக்கறையின்றி இனிமேலும் இருக்கமுடியாது. இங்கே போட்டியிடும் இருவருமே இராவணர்கள் தான். இந்த இராவணர்களில் பெரிய இராவணன் யார்? சின்ன இராவணன் யார்? என்று சிந்தித்து முடிவு செய்யவேண்டிய நிலைமையில் தமிழ் இனம் இருக்கின்றது. இதைத்தவிர நடைமுறை சாத்தியமான மாற்று வழி கிடையாது.

**மனச்சாட்சிப்படி மக்களை வாக்களிக்க கோரமுடியாது**

தமிழ் மக்களிடம் தமது சொந்த விருப்பத்தின்படி வாக்களியுங்கள் எனக்கூறி விட்டு எமது கடமையில் இருந்து நாம் நழுவ முடியாது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் மக்களுக்கு தலைமைத்துவம் வழங்கி வழிகாட்டவேண்டிய வரலாற்று கடமையை நாம் நிறைவேற்றுவோம். ஏனைய தமிழ் கட்சிகளும் மக்களுக்கு தெளிவாக வழிகாட்டவேண்டும் என நாம் கோருகின்றோம்.✱ (அ-சி)

(அறிக்கையின் மிகுதி நாளை வெளிவரும்)

# ஜனாதிபதி - சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவைத் தமக்குப் பெறுவதற்காகவே சம்பந்தரை ஜனாதிபதி தனியாக அழைத்துப் பேசினார் என்று கூறப்படுகின்றது.

**வடக்கு கிழக்கைப் பிரித்த அரசு**

இந்தப் பேச்சுகளின்போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் தமிழர்களுக்கு நேர்ந்த அவலங்கள், விபரீதங்களை சம்பந்தர் எம்.பி., எடுத்துக் காட்டினார் எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பில் இடம்பெற்றவை எனத் தெரிவித்து கூட்டமைப்பு வட்டாரங்கள் மேலும் கூறிய தகவல்கள் வருமாறு:-

''உங்கள் ஆட்சியின் கீழ்தான் வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டது. ஒரு சட்டத்தின் மூலம் வடக்கு - கிழக்கு மீண்டும் இணைக்கப்பட முடியும் என உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. அத்தகைய சட்டம் கொண்டு வரப்பட்டால் அதை ஆதரிக்க ஐ.தே.கட்சி தயாராகவும் இருந்தது. ஆனால் நீங்கள் அப்படிச் செய்ய மறுத்துவிட்டீர்கள். ஆகவே வடக்கு - கிழக்கைப் பிரித்தது உங்கள் அரசுதான்'' - என சம்பந்தர் சுட்டிக்காட்டினார்.

இப்பிரச்சினைக்குத் தமிழர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யக்கூடிய பதிலோ, உறுதிமொழியோ ஜனாதிபதி தரப்பிலிருந்து கோடி காட்டப்படவில்லை.

''இனப்பிரச்சினைத் தீர்வுக்கென அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு என்ற ஒன்றை நீங்களே உருவாக்கினீர்கள். அதன் சார்பில் நிபுணர் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தனர். அதை ஏற்க மறுத்துக் கிடப்பில் போட்டீர்கள். அதன் பின்னர் அனைத்துக் கட்சிக் குழு பயனற்றுப் போயிற்று.'' - என்று சம்பந்தர் குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, ''நீங்கள்தான் அந்த அனைத்துக் கட்சிக் கூட்டங்களிலேயே பங்கேற்கவில்லையே. அது உங்கள் தவறு அல்லவா?'' - என்று கேட்டார்.

அதை மறுத்துரைத்தார் சம்பந்தர். ''கூட்டமைப்புக்கு அந்தக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு எப்போதுமே அழைப்பு விடுக்கப்படவில்லை. தென்னிலங்கையின் இனவாதக்கட்சிகளைக் காணவே இந்த அனைத்துக்கட்சி நிறுவப்பட்டது என்பதால் அதன் கூட்டங்களுக்கு தமிழ்க் கூட்டமைப்பை அழைக்கத் தேவையேயில்லை என்று கூறிய ஜனாதிபதியே இங்கு இருக்கிறார். அதனை அவரிடம் உறுதிப்படுத்தலாம்.'' - என ஜனாதிபதியின் செயலாளருக்குத் தகுந்த பதிலடி தந்தார் சம்பந்தர்.

**எந்த முகத்துடன் வாக்குக் கேட்பது?**

''விடுதலைப் புலிகளை அழித்தல் என்ற பெயரில் அப்பாவித் தமிழர்கள் பல்லாயிரம் பேர் உங்கள் ஆட்சியில் கொல்லப்பட்டனர். சர்வதேசமும் நாங்களும் எவ்வளவு கெஞ்சியும் அதை நீங்கள் தடுத்து நிறுத்தவில்லை. மாறாக, அனுமதித்துப் பார்த்திருந்தீர்கள். இப்போது உங்கள் ஆட்சிக்கு வாக்களிக்கும்படி எந்த முகத்துடன் போய் நாம் எமது மக்களிடம் கேட்க முடியும்?'' - என்று சம்பந்தர் ஜனாதிபதியிடம் கேட்டார்.

அகதிகளாக்கப்பட்ட மக்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்படவில்லை என்று சம்பந்தர் சுட்டிக்காட்டியபோது அனைவரும் விரைவில் மீள்குடியேற்றப்படுவர் என உறுதிமொழி தர விழைந்தார் ஜனாதிபதி.

**இராணுவ முகாம் அமைக்கப்பட்ட பின்னர் மீளக்குடியமர்வு**

கண்டி வீதிக்கு கிழக்கே மீள் குடியேற்றம் நடைபெறவேயில்லை என்று சம்பந்தர் சுட்டிக்காட்டியபோது அங்கும் மீள்குடியேற்றம் விரைவில் நடக்கும் என்றார் ஜனாதிபதி.

''இல்லை. கண்டி வீதிக்குக் கிழக்கே பல இடங்களில் இராணுவமே நிலை கொண்டுள்ளது. மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை.'' - என்றார் சம்பந்தர்.

''ஆம். சில இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்படவேண்டியுள்ளன. அப்பணி முடிந்ததும் எஞ்சிய இடங்களில் மீள்குடியமர்வு இடம்பெறும்.'' - என ஜனாதிபதி பதில் தந்தார்.

நாம் தமிழர் தாயகத்தில் இராணுவ நிலை நீக்கத்தை வலியுறுத்த, ஜனாதிபதியோ இராணுவத்தை நிரந்தரமாக நிலைநிறுத்துவது பற்றிப் பிரஸ்தாபிக்கின்றார் என சம்பந்தர் தமது கூட்டமைப்புச் சகாக்களிடம் பின்னர் விசனத்துடன் சுட்டிக்காட்டினார்.

'[illegible]டில் அதியுயர் பாதுகாப்பு வலயம்' என்ற பெயரில் இருபது வருடங்களுக்கு மேலாக மக்களின் மண் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இப்போது யுத்தபீதி நீங்கியுள்ளதால் இந்தப் பிரதேசம் அந்த மக்களிடம் விடுவிக்கப்பட வேண்டும்'' - என சம்பந்தர் வலியுறுத்திய போது, ''இவ்விடயத்தில் அவசரப்படவேண்டாம், அவசரப்படக்கூடாது. பொறுத்துக் கொள்ளுங்கள். ஆறுதலாகப் பார்க்கலாம்'' - என்ற பாணியில் ஜனாதிபதியின் பதில் அமைந்திருந்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆம் திருத்தம் மற்றும் 'பிளஸ் பிளஸ்' என்று ஜனாதிபதி கோடி காட்டினார்.

ஆனால் வடக்கு, கிழக்கு இணைப்புக்கான எந்த சமிஞ்ஞையையும் ஜனாதிபதி காட்டவேயில்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழான பொலிஸ் அதிகாரம் பரவலாக்கப்பட மாட்டாது என்பதே தமது நிலைப்பாடு என்பதை ஜனாதிபதி வெளிப்படுத்தினார். அத்தகைய பொலிஸ் அதிகாரத்தை மாகாணங்களுக்குப் பரவலாக்கும் அளவுக்கு நாட்டு மக்கள் பக்குவப்படவில்லை என்றார் ஜனாதிபதி.

வடக்கு, கிழக்கு இணைப்பையும் மறுத்து, பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பரவலாக்கும் சட்ட ஏற்பாட்டையும் மறுக்கும் ஜனாதிபதி, அத்தகைய தமது திட்டத்தைப் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்லும் உத்தேசம் என்று கூறுவது வேடிக்கையானது எனக் கூட்டமைப்புக் கருதுகிறது.

- இப்படிக் கூட்டமைப்பு வட்டாரங்கள் மேலும் இச்சந்திப்புத் தொடர்பில் தகவல் வெளியிட்டன. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் பேரணி மீது கண்ணீர்க் குண்டு!

நேற்று நண்பகல் விகாரமாதேவி பூங்காவின் அருகே உதவி ஆசிரியர்கள் சங்கம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள் அலரிமாளிகைக்குச் செல்ல முற்பட்ட போது கொள்ளுப்பிட்டிச் சந்தியில் பொலிஸாரினால் தடுக்கப்பட்டனர். இதன்போது ஏற்பட்ட தகராறு காரணமாக பொலிஸார் மீது கல்வீச்சுக்கள் நடத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கல்வீச்சின்போது 6 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர். 5 பேர் கைது செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து உதவி ஆசிரியர் ஒருவர் கூறியவை வருமாறு:-

தற்காலிகப் பணிகளிலுள்ள உதவி ஆசிரியர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்பட வேண்டும். சுமார் ஒரு லட்சம் உதவி ஆசிரியர்கள் தற்போது கடமையில் உள்ளனர். இவர்களுக்குத் தற்போது தற்காலிகக் கொடுப்பனவாக மூவாயிரம் ரூபாவே வழங்கப்படுகிறது. இதை அதிகரிக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன் வைத்தே இந்த ஆர்ப்பாட்டத்தை நாம் நடத்தினோம். இதற்கான சரியான முடிவை அரசு தரத் தவறும் பட்சத்தில் பெரும்பான்மைக் கட்சிகளை நிராகரித்து சிறுபான்மைக் கட்சிகளுக்கு வாக்குகளை வழங்க நாங்கள் எண்ணியுள்ளோம் - என்றார்.

## சரத் பொன்சேகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியே சரத் பொன்சேகாவிற்கு இந்த விஜயத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் அலுவலக வட்டாரங்கள் இது தனிப்பட்ட விஜயம் எனத் தெரிவித்துள்ளன.

## அகதிமுகாம்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்கள் தனிப்பட்ட ரீதியில் வேண்டுகோள் விடுக்க வேண்டும் எனவும், இந்த வேண்டுகோள்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் முகாம்களைப் பார்வையிடுவதற்கு அனுமதியளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, முகாம்களுக்குச் சென்று செய்தி சேகரிப்பில் ஈடுபட ஊடகவியலாளர்களுக்கு எவ்வித தடையும் இல்லை என வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த பொகொல்லாகம அண்மையில் சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசுத் தரப்புடன்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தரப்புடன் பேசுவதற்கான வசதியான திகதி மற்றும் நேரத்தைக் கூட்டமைப்பு எம்.பிக்களே முடிவு செய்து தமக்குத் தகவல் தரலாம் என அவர் அந்த அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் என அறியவந்தது.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைமைக்கு அல்லது அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு அழைப்பு விடாமல் கூட்டமைப்பின் முழு எம்.பிக்களுக்குமே தனித்தனியாக அழைப்பு விடுக்கும் இந்த எத்தனம், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விடயத்தில் கூட்டமைப்பின் ஐக்கியத்தைச் சிதறடிக்க வைக்கும் முயற்சி என கூட்டமைப்பு வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன.

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறு இழைத் திருக்கின்றன.

இலங்கை அரசை இனப்பிரச்சினையை அரசியல் தீர்வின் ஊடாகத் தீர்க்குமாறு மதத்தலைவர்கள் வலியுறுத்த வேண்டும். நாங்கள் மீண்டும் வன்முறைக்குத் திரும்ப முடியாது.

இரு சமூகங்களைச் சேர்ந்தவர்களும் தம் மத்தியில் உள்ள தீவிரவாத சக்திகளை எதிர்த்திருந்தால் யுத்தத்தைத் தவிர்த்திருக்கலாம்.

தமது நிலைப்பாடுகளிலிருந்து சிறிதளவு விட்டுக்கொடுப்புகளைச் செய்வதற்குத் தயாராக இருந்திருந்தால் பாரிய மாற்றத்தை உருவாக்கியிருக்கும்.

கிறிஸ்தவ மதகுருமார்கள் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் எவரும் அதனை செவிமடுக்கவில்லை.

இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்புவதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பல உள்ளன.

தமிழர்கள் மீண்டும் செல்லவிருக்கும் சில பகுதிகள் கண்ணிவெடிகளால் நிறைந்துள்ளன. இதன் காரணமாக அவர்கள் காயமடையலாம் அல்லது அதைவிட மோசமாக ஏதாவது இடம்பெறலாம்.

இவ்வாறு ஏதாவது இடம்பெற்றால், மரணத்தை நோக்கித் தள்ளியதற்காக சர்வதேச சமூகம் எம்மைக் கண்டிக்கும். இதன் காரணமாக அப்பகுதிகளில் கண்ணிவெடிகள் இல்லாத நிலையை உருவாக்கவேண்டும்.

சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் அரசுக்கு உதவ வேண்டும். நிலக்கண்ணிவெடிகளைத் துரிதமாக அகற்றுவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் உதவவேண்டும்- என்றார்.

(அ-சி)

## இம்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கான செலவை இயலுமானவரைக்கும் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தேர்தல் திணைக்கள ஊழியர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

(அ-சி)

## பொலிஸ் அலுவலர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் சென்றுகொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் அவரது நண்பரான வர்த்தகர் உட்பட நான்கு பேரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த கார் பின்னர் பொரளை தேவிபாலிகா வித்தியாலயத்துக்கு அருகிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

நால்வரும் இனந்தெரியாத குழுவொன்றினால் பொரளையில் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வர்த்தகரின் மனைவி தனது கணவரைக் காணவில்லை என அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து தமது தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்த வேளையே கார் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-சி)


**விற்பனைக்கு**

NPGNதொடரிலக்கBajaj Boxer ஒருகைப் பாவனையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
0718474525,0772595785

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
BIOLOGY/ 2011 A/L
கொண்டு செல்லல்
ஆரம்பம்- 05.12.2009 (சனி)
SAT, SUN - 7.00 - 9.00
(92763) BY : சு. பொன்திவாகரன்

**உயர் கலைக் கல்லூரி**
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்
2010 A/L Day CLASS
தமிழ்: R.S. சந்திரசேகர்
இந்துநாகரிகம்: S. ஸ்ரீதரன்
புவியியல்: P.S. குமரன்
அரசறிவியல்: K.S.இளங்கோ
வரலாறு: M.பத்மன்
இந்துசமயம்: S. ஸ்ரீதரன்
நாடகமும் அரங்கியலும் பிரபல ஆசிரியர் (92735)
ஆரம்பம் 05.12.2009 சனிக்கிழமை நண்பகல் 12 மணி
"அறிவை அறிவால் அறிவோம்"

**Scc யின் கணினி பயிற்சி நெறிகள்**
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN VISUAL FOXPRO
DIPLOMA IN AUTOCAD
DIPLOMA IN C
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN ACCOUNTING PACKAGES
DIPLOMA IN AUDIO & VIDEO EDITING
DIPLOMA IN WEB DESIGNING
3000/= உடன் இலவச பயிற்சியை அறிய சந்தர்ப்பம்
பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள்
GIT (G.C.E. A/L),
ICT (Year 10,11)
Kids Programming (Year 2-9)
English & Tamil Medium
ஆசிரியர் :- திரு.சி.பிரணவன்
Online Classes
குறைந்த கட்டணம்
கூடிய நேர செய்முறைப்பயிற்சி
அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சான்றிதல்.
பயிற்சி ஆரம்பம் 05.12.2009 12.01.2010
Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

**புதிய வகுப்புகள் ஆரம்பம்**
**கல்வியாண்டு -2010**
* தரம் 4 முதல் O/L வரையான வகுப்புகள் அனுபவம் நிறைந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
* சகல வகுப்புகளும் 05.12.2009 சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.
* சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள..... (92802)
விக்கினேஸ்வரா கல்வி நிலையம் போற்பதி வீதி, கொக்குவில்.

**உதயதாரகை கல்விக் கழகம்** கோற்றவத்தை
A/L Day CLASS
கலை வர்த்தகம் வகுப்புக்கள் ஆரம்பம் - 05.12.2009 சனி பி.ப 3.30 மணி
தமிழ்- இரா. அகிலன்
அளவையியல் - G. தர்மதேவன்
நாட/அரங்கம் N. ராம்
இந்.நாகரீகம்- T. மகிந்தன்
அரசியல்- S. நிமலன்
புவியியல்- S. ஜெயந்தன்
கணக்கீடு- V.பார்த்தீபன்
பொருளியியல்-, வர்த்தகம் - பிரபல ஆசிரியர்
அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்.நகரின் NO.1 கல்வி நிறுவனம்**
**எடிசன் அக்கடமி**
யாழ்ப்பாணம் - நல்லூர் - கொக்குவில் - வட்டுக்கோட்டை - சண்டிலிப்பாய்
கல்வியும் ஒழுக்கமும் எம் இரு கண்கள்
**புதிய கல்வியாண்டு -2010**
English medium, Tamil medium
தரம் 06 முதல் O/L வரையான வகுப்புக்கள் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 05.12.2009 சனி | பி.ப2.00 |
| 2.நல்லூர் | 06.12.2009 ஞாயிறு | மு.ப 8.00 |
| 3. கொக்குவில் | 06.12.2009 ஞாயிறு | மு.ப 8.00 |
| 4. வட்டுக்கோட்டை | 06.12.2009 ஞாயிறு | பி.ப. 3.00 |
| 5. சண்டிலிப்பாய் | 06.12.2009 ஞாயிறு | பி.ப 3.00 |

★ 6 ஆவது புதிய கிளை.... ★
யாழ்.நகரினுள் 2ஆவது புதியகிளை.....!
இரண்டு வாரங்களில் ஆரம்பம்.....!!
தேர்ந்தெடுக்கப்பட்ட அதிசிறந்த ஆசிரியர்குழுவுடன் ..!!!
விவரங்கள் ஓரிரு நாள்களில்.....!!!!
நிர்வாகி:-
B.P.பாஸ்கரன்.
(சி/562908)

**ஐடியல் அக்கடமி**

| சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் | இடைப்பிட்டி காரைநகர் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | பிரதான வீதி, மானிப்பாய் |
|---|---|---|---|

மாணவச் செல்வங்களே!
புதிய ஆண்டு கல்விச் செயற்பாட்டிற்காக எமது நான்கு நிறுவனங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் 2010 ஆம் ஆண்டின் புதிய வகுப்புகள் 05.12.2009 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.
நேரம் பிற்பகல் 3.30
யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள எமது ஐடியல் அக்கடமியில் தரம்6 இற்கான English Medium வகுப்புகளை புதிய ஆண்டில் குதூகலமாக ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
* ஒழுக்கத்துடனான கல்விச் சேவையே எமது ஐடியலின் தனித்துவம் எம்முடன் இணைந்தவர்களுக்குப் புரியும் அதன் மகத்துவம்.
நிர்வாகி.

**தேவை**
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சேவிஸ் ஸ்ரேசன் அமைப்பதற்கு இடம் தேவை.
தொடர்பு:- 0773790458

தென்மராட்சியில்.....
15 ஆவது வருட கல்விச் சேவையில் நாளை ஆரம்பம்
பிறைற்றின் கல்வி நிலையம்
சங்கத்தானை சாவகச்சேரி
கல்வியாண்டு - 2010
தரம் 6 - O/Lவரையான வகுப்புகள் ஆரம்பம்
05/12/2009 சனி பி.ப.3 மணி (92734)

SUPER GRADE 1 கல்வி நிறுவனம்
**BITMANS**
கல்வி நிறுவனம், மானிப்பாய்
கல்வியாண்டு 2010
தரம் 3 முதல் O/L வரை
GRADE:6,7,8,9,10,11
ENGLISH MEDIUM
எமது "SUPER GRADE" ஆசிரியகுழு
ஆரம்பம்: 5 DEC/ 2009 சனி: 11.00 AM

**INVITATION**
The Primary Department of Uduvil Girl's College
Presents
A Christmas Musical Fantasy
On
Saturday,December 5, 2009 at 10 a.m
*Parents, Past pupils and Well-wishers are invited*
Principal,
Staff and Students

2009 A/L வரலாறு பெறுபேறு[illegible] கல்வி கற்று A [illegible] பெற்ற பின்வரும் மாணவர்களை வாழ்த்துகின்றேன்

ஜெயமதி சண்முகராசா - A
லக்சனா மோகனசுந்தரம் - A
சிவராசா சிவகுமார் - A
செல்வநாதன் தீபிகா - A
சத்தியாம்பிள்ளை மாக்சிங் - A
லோஜினி கணேசலிங்கம் - A
கவிதா ஜெகநாதன் - A
பஞ்சாட்சரம் நிறோஜன் - A
காயத்திரி [illegible]பசர்மா - A
காயத்திரி [illegible]கியநாதன் - A
உதயகுமார் பிரணவன் - A
கிருஷாயினி கார்த்திகேசு - A
கெல்வின் சோபியா மரியதாஸ் - A
நளாயினி தியாகலிங்கம் - A
றஜிதா சிங்காரமுத்து - A
கந்தசாமி சுதர்சன் - A

B தரச் சித்தி பெற்ற 32 மாணவர்களையும் 100 % சித்திபெற்ற ஏனைய எனது மாணவர்களையும் வாழ்த்துகின்றேன்.
வாழ்த்துபவர்:
ஆசிரியர் M.பத்மன் M.A

நாளை ஆரம்பம்
DAY CLASS (கலைப் பிரிவு)
காலை 8 மணி
DMI
Jaffna


## மரண அறிவித்தல்

### சுந்தரமூர்த்தி சிவாச்சார்யர் (B.A.)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், மாவையாதீனத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற துரைச்சாமிக் குருக்களது இளைய மகன் சுந்தரமூர்த்தி சிவாச்சார்யர் (B.A.) நேற்று (03.12.2009) வியாழக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2009) வெள்ளிக்கிழமை கொழும்பி லேயே நடைபெற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

அன்னார் ஜெயலக்ஷ்மியின் கணவரும், விசாலாட்சி (ஆசிரியர், கொழும்பு இரத்மலானை இந்துக்கல்லூரி), வாகீஸ்வரி (ஜேர்மனி), தர்மாவதி (ஆசிரியை, யாழ் மத்திய கல்லூரி), தேவேஸ்வரி (ஆசிரியை, மல்லாகம் மகாவித்தியாலயம் - மலேசியா), கீதாஞ்சலி (இந்தியா), துரைச்சாமிசர்மா (வைத்தியர், கொழும்பு) ஆகியோரது தந்தையும், பொலிகண்டி தியாகராசாக் குருக்கள் தம்பதிகளின் மருமகனுமாவார். அன்னார் மகாஜனாக் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் உப அதிபராகவும் பணியாற்றியவர்.

அன்னாரது பூதவுடல் கொழும்பு சப்பறீம் மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காகச் சேர்க்கப்பட்டு இன்று (04.12.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மாதம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கு. நகுலேஸ்வரக் குருக்கள் (கீரிமலை)
சு.து. ஷண்முகநாதக் குருக்கள் (மாவை)
சகோதர, சகோதரிகள்.
(A)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org